1104

புதுமை

ஆசிரியர்: கோசல்ராம்



197694

P[illegible]MAI ஜூன் 1. 25 1958.

சீமான்களும்
சீமாட்டிகளும்
என்றும் விரும்புவது
சீமாட்டி
ஸ்டோர்ஸ்
துணிகளையே!
சீமாட்டி ஸ்டோர்ஸ்
சாலைபசார், திருவனந்தபுரம்.

11074
2-58

திருநெல்வேலி நகர்மன்ற
ஒன்பதாவது
தேசீய பொருட்காட்சியும்,
சுகாதார விழாவும்.

திருநெல்வேலி நகரின் மாபெரும் திருவிழாவான சுவாமி நெல்லையப்பர் கோவில் ஆனித் திருவிழாவை ஒட்டி,

15—6—58 முதல் 6—7—58 வரை,

திருநெல்வேலி நகர்மன்ற ஒன்பதாவது தேசீயப் பொருட்காட்சியும், சுகாதார விழாவும் நடைபெறும்.

தமிழகத்தின் தலைசிறந்த கலைஞர்களால், இன்னிசைக் கச்சேரிகள், எழில் மிகு நடனங்கள், நாடெங்கும் புகழ்பெற்ற நாடகங்கள் ஆகியவை நிகழ்த்தப்பெறும்.

* நூற்றுக்கணக்கான ஸ்டால்கள்!
* அரிய காட்சிப் பொருள்கள்!
* கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்துகள்!

ஸ்டால்கள் தேவைக்கு உடனடியாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:

பொருட்காட்சிக் கமிட்டி காரியதரிசி,
(நகர்மன்ற ஆணையாளர்)
திருநெல்வேலி நகர்மன்றம்,
திருநெல்வேலி.



பார்ஸலை குழந்தை போல் அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போனது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்பட்டைந்த 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றுப்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-SR 177a

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம் எம்.எல்.சி.,

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி B.A.,

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 1 | ஜூன் 1958 | ஓசை 11

			பக்கம்
அரசியல் :			
ஆச்சாரியாரின் ஆவி!		...	5
என். ஜி. ஓ. பிரச்னை!		...	9
நேரு—பதவி நீங்கி இருக்கவேண்டும்!		...	10
ஈழத் திருநாடு எரிகிறது!		...	11
தொடர் கதைகள் :			
காமனை வென்ற கண்	சுகி	...	18
வள்ளியின் உள்ளம்	கு. ப. சேது அம்மாள்	...	59
கதைகள் :			
அன்பே! நமக்கு மாத்திரம்	ஆரெஸ்ஸஸ்	...	35
ஐயோ ருக்கு! நீயா ராதை?	நந்தி	...	40
மலைப்பருந்தின் பாட்டு	மாக்சிம் கார்க்கி	...	43
குமாரதேவன் காதல்	கே. ரகுபதி	...	47
வைதேகியின் விவாகம்	புஷ்யன்	...	73
பேட்டி :			
முதலமைச்சர் காமராஜ்	கன்னிக்கண்ணன்	...	13
இசைக் குயில் ஜிக்கி	ஆரெஸ்ஸஸ்	...	83
கலைப் பகுதி :			
செஞ்சுலக்ஷ்மி	ரசிகன்	...	86
வளரும் படங்கள்		...	89
நாடக மேடையிலே!		...	92
நாட்டியம்	ரஞ்சன் பி.ஏ.எம்.லிட்.,	...	94

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



197694

(“இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் ‘சிந்திக்கும் சாதனம்’, இந்தியாவிற்கு வெளியில் உள்ளது” — நேரு).

புதுமை

ஆச்சாரியாரின் ஆவி!

வீடு தோறும் கலை விளங்க வேண்டும்; வீதி தோறும் இரண்டொரு பள்ளிகள் இலங்க வேண்டும்; நகர்களி லெல்லாம் பலபல பள்ளிகள் பல்க வேண்டும் என்று கனவு கண்டான், தேசிய கவி பாரதி.

அவனுக்கே உரிய துடிப் போடும், ஆவேசத்தோடும், பாரத அன்னையின் கேடு தீர்க் கும் அமுதத்தைக் காணும் வழியை, தாய்நாடு கேண்மை பெறும் பாதையை ஆவேசத் தோடு கூறினான். "எடுங்கள் தீவர்த்தியை! எரியூட்டுங்கள், பள்ளி இல்லாத ஊரை" என்று முழங்கினான்.

'தேடு கல்வியி லாதொ ரூரைத்
தீயினுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுத மென்
அன்னை
கேண்மை கொள்ள
வழியிவை கண்டீர்'

என்று பாடினான்.

ஆம், இந்தியாவின் மாபெரும் பிரச்னைகள் இரண்டு; அவை அறியாமையும், ஏழ்மையும். இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்தவை; அறியாமைக்குக் காரணம் ஏழ்மை; ஏழ்மைக்குக் காரணம் அறியாமை.

எனவே இந்திய தேசிய எழுச்சியின் அடிப்படையை உறுதியாக அமைக்க வேண்டுமென்றால், இந்நாட்டின் 70 லட்சம் கிராமங்களிலும் பள்ளிகள் தோன்றச் செய்ய வேண்டும்.

அரசியல் சட்டம் அதைத் தான் கூறுகிறது; கல்வி அளிப்பது அரசியலாரின் கடமை; கல்வி வசதியைக் கோருவது குடிமகனின் அடிப்படை உரிமை.

தலைசிறந்த அரசியல் நிபுணர், சாணக்கியச் சக்கரவர்த்தியார், என்று சொல்லப்படுகிற ஸ்ரீராஜாஜி, இந்த உரிமையிலே கை வைக்கத் துணிந்து, 'புதிய திட்டம்' ஒன்றைப் புனைந்தார். பொது மக்கள் பொங்கி எழுந்தனர்; தக்க சமயத்தில், திரு. காமராசர் அமைச்சு கட்டில் ஏறி, அத்திட்டத்தை ஆழப் புதைத்தார்.

எனவே கல்வி பரவ வேண்டும் என்ற பொது மக்களின் ஆர்வம், வெள்ளமாகப் பொங்கி

வருகிறது. அந்த வெள்ளத்திலே எதிர் நீச்சல் போட முயலுவோர் அடித்துச் செல்லப்படுவார்கள் என்பது வரலாறு தரும் படிப்பினையாகி விட்டது.

காங்கிரஸ் ஆட்சியின் விளைவாக, பாரதி போன்ற தேசியவாதிகள் கனவு நனவாகும் அளவிலே, ஊரெல்லாம் பள்ளிகள் தோன்றிவரும் இந்த நேரத்திலே, பொது மக்களின் கல்வி பெறும் அடிப்படை உரிமைக்கு மற்றோர் பேராபத்து விளைந்துள்ளது!

தெரிந்தோ, தெரியாமலோ, எண்ணித் துணியாமல், சென்னை மாநிலக் கல்வித் தலைமைப்பீடம், கல்வி வளர்ச்சி என்ற தேசியத் திருப்பணிக்கு வேட்டு வைக்கும் உத்திரவுகளை வெள்ளை 'அறிக்கை' என்ற போர்வையின் அடிப்படையிலே வெளியிட்டுள்ளார்கள்!

ஒரு வட்டாரத்திலே—உதாரணமாக, தாலுகாவை எடுத்துக் கொண்டால்-உள்ள பள்ளி இறுதிநிலை மாணவர்கள் (S.S.L.C.) தொகையால், அந்த வட்டார மக்கள் தொகையை வகுத்து, 1000 மக்கள் தொகைக்கு 1 மாணவன் என்ற விகிதத்திலே புதிய பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்கப் போகிறார்களாம்!

உதாரணமாக, ஒரு தாலுகாவின் மக்கள் தொகை 5,00,000 என்று வைத்துக் கொள்வோம். அங்கே 2 உயர்நிலைப் பள்ளிகள் ஏற்கெனவே இருப்பதாகவும், அவற்றின் மொத்த பள்ளி இறுதி நிலை வகுப்பு மாணவர்கள் தொகை 500 என்றும் கொண்டால், அந்தத் தாலுகாவின் 'கோட்டா' முடிந்து விட்டது. ஏனெனில், அங்கே உள்ள சராசரி 1,000 மக்களில் ஒருவர் பள்ளி இறுதி நிலை வகுப்புவரை படிக்கிறார். இது போதும்; இனி புதிய பள்ளி வேண்டாம்! இதுதான் இந்தப் புதிய அரசாங்க உத்திரவின் சாராம்சம்.

இந்த உத்திரவின் சூழல்களையும், அதற்கு எதிரான நமது வாதங்களையும், இந்த உத்திரவைப் போட்டவர்களின் கட்சியையும் ஆராய்வோம்.

'நாட்டிலே வேலையின்மை பெருகி வருகிறது. எனவே அதிக மாணவர்கள் படித்து வருவதினால் ஆபத்து' என்பது இந்தப் புதிய உத்திரவை மனதிலே வாழ்த்தும் பெரிய புள்ளிகள், பேரறிஞர்கள் சிலருடைய கருத்து; ஆனால் அவர்கள் இதை விளக்கமாகவும், தெளிவாகவும் வெளியே சொல்லிக் கொள்ளமாட்டார்கள்!

வேலையின்மை எதிர் காலத்திலே அதிகமாகுமே? என்பதற்காக, இன்றே மாணவர்களை படிக்கவைக்கக் கூடாது என்று சொல்வது எந்த விதத்தில் புத்திசாலித்தனமானது? நாளை வாங்கப் போகும் செருப்பு பெரிதாக இருந்துவிடக் கூடாதே என்பதற்காக, இன்றே நமது காலை வெட்டிக் கொள்வதைப் போல அல்லவா இச்செயல் உள்ளது?

'எல்லோரும் படித்துவிட்டால், பிறகு வேலையில்லாதவர்கள் தொகை அதிகமாகி

விடுமே?' என்று கேள்விக்கு, மதிப்புக்குரிய முதலமைச்சர் திரு. காமராஜர், பலமுறை சிரித்தபடியே, 'படிக்காமல் இருப்பவர்களுக்கு மட்டும் வேலை கிடைத்து விட்டதா? ஆதலால் இது அர்த்தமற்றது' என்று கூறக் கேட்டும் இருக்கிறோம்.

x x x

கோட்டையிலே இருந்து உத்திரவுகளைப் பிறப்பிக்கின்ற கோமான்களுக்கு, நாட்டுப்புறத்தைப் பற்றிய கருத்து நன்கு விளங்காத கொடுமையால் தான், இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

ஒரு தாலுகா, சுமார் 50 மைல்கள் வரை குறுக்கு நெடுக்காகப் பரந்து கிடக்கிறது. இந்தப் புதிய உத்திரவுப்படி, புதிய பள்ளிகள் திறக்கப்படாவிட்டால், பல இடங்களில் மாணவர்கள் தாலுகாவின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கோ அல்லது தாலுகாவிட்டுத் தாலுகாவோ சுமார் 20, 30 மைல் நடந்து அல்லது வாகன மூலம் சென்று படிக்க வேண்டி இருக்கும். இது சாத்தியமா?

பணக்காரர்கள் ஒருவாருகச் சமாளித்து விட்டாலும்கூட, பெரும்பான்மையான ஏழை, எளியவர்கள் குழந்தைகள் எவ்வாறு இவ்வளவு தூரம் கடந்து சென்று படிக்க முடியும்?

இந்த அதிசய உத்திரவிற்கு ஆதரவாக மற்ருேர் வாதத்தை யும் கூறுகிருர்களாம்!

'சில மாவட்டங்கள் கல்வியிலே அதிகம் முன்னேறி விட்டன. சில மிகவும் பின் தங்கி உள்ளன. எனவே பின் தங்கியவை முன்னேற, முன்னேறியுள்ளவற்றைப் பின் தள்ள வேண்டும்' என்று சொல்கிருர்களாம்.

கோயம்புத்தூர் 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என்று புகழப்படும் அளவிற்கு நூற்பாலைகளையும், தொழிற்சாலைகளையும் பெற்றுள்ளது. மற்ற சில மாவட்டங்களில் ஒரு ஆலை கூட இல்லை; எனவே இனி கோவைக்குப் புதிய ஆலைகள் கிடையாது' என்று சொல்வது எவ்வளவு புத்திசாலித்தனமோ, அந்த அளவுதான் இந்த வாதமும் செல்லுபடியாகும்!

இந்த உத்திரவுடன் இணைப்பாக, '35 பிள்ளைகளுக்கு 1 ஆசிரியர்' என்று கூறும் புதிய உத்திரவையும் பார்க்கும் பொழுது, சாணக்கிய சக்ரவர்த்தியாரின் முறியடிக்கப்பட்ட புதிய கல்வித் திட்டம் தான் இந்தப் புதிய உருவங்களிலே வருகிறதோ என்று ஐயப்படுகிரேம்!

இந்தப் புதிய உத்திரவுகளினுல், அரசியல் சட்டத்தினுல் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையான 'கல்வி உரிமை' மறுக்கப்படுகிறது. கல்வி வழங்க வேண்டிய அரசாங்கம், தன் கடமையைச் செய்ய மறந்த இந்நிலையில், பொது மக்கள் சொந்த முயற்சியால், பள்ளிகள் காண முற்பட்டால் அதற்குரிய ஆதரவையும் நல்க மறுக்கிறது.

அன்னை-அமுதூட்ட வேண்டிய அன்னை, அமுதூட்ட மறுக்கிருள்; அது மாத்திரமா? பசிக்காக ஏங்கி அழும் பாலகனைப் பார்த்து பரிதாபப்பட்டு, அடுத்

தவர் உணவளிக்க வந்தாலும் 'கூடாது' என்று சீறுகிருள்!

பொதுமக்களிடையே, ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியின் விளைவாக, காங்கிரஸ்காரர்களின் முயற்சிகளின் பலனுக கிராமங்களிலே நிதி திரட்டி, கட்டிடங்களை எழுப்பி, மற்றெல்லா அரசாங்க விதிமுறைகளையும் நிறைவேற்றி, சென்னை வந்து 'புதிய உயர் நிலைப்பள்ளி; உத்திரவு தாருங்கள்!' என்று மாநில கல்வித்துறை இயக்குநரிடம் சென்று கேட்டால், அவர் கோட்டையிலே தான் அதற்குரிய அதிகாரம் என்று கையை விரிக்கிருர்.

காந்தியார் கனவு கண்ட 'பரவல் அதிகார முறை,' இந்தச் சிறிய விஷயத்திலே கூட நடைமுறைக்கு வர இல்லையே?

கோட்டைக்கும், இயக்குநரின் அலுவலகத்திற்குமாக 'உள்ளங்கால் வெள்ளெலும்பு தெரிய' கல்விக் கொடை வள்ளல்கள் 'பள்ளி திறக்கும் நாள் நெருங்கி வந்து விட்டதே?' என்ற கவலை தோய்ந்த முகத்தோடு நடையாக நடந்து கொண்டு உள்ளார்கள்!

x x x

இந்த விசித்திரமான சித்திரத்தைவிட, மற்ருேர் அதிசயமும் நாம் பார்க்கிருேம்!

சென்னை மாநிலமுதலமைச்சர், ஊர், ஊராகப் பொதுக் கூட்டங்களில், ''மக்களில் சிலர்தான் புத்திசாலிகள் என்று நினைப்பது தவறு; எல்லா மக்களும் சமமான அறிவுடன் தான் பிறக்கிருர்கள்; அவர்களது அறிவு வளரச் சரி, சம சந்தர்ப்பங்கள் தான் கிடைப்பதில்லை. எனவே கிராமப் பக்கங்களிலே உள்ள மாணவர்களுக்குக் கல்வி பயில வசதி செய்து கொடுத்தால், அத்தனை குழந்தைகளும் அறிவாளிகளாக வருவார்கள். ஆகவே கிராமம், கிராமமாக உயர்நிலைப் பள்ளிகள் வைக்க வேண்டும்; அது மாத்திரமல்ல; இலவசக் கல்வி குறைந்த பட்சம் 10-வது வகுப்பு வரையாவது தருவதோடு இலவச பகல் உணவும் வழங்குவதே எனதுஇலட்சியம்'' என்று பேசி வரும் அதே நேரத்திலே, அவரது தலைமையிலே இலங்கும் அரசியலின் கல்வித்துறையினர், 1,000 மக்கள் தொகையில் 999 பேர், பள்ளி இறுதி நிலை வரை படிக்க வேண்டிய அவசியமில்லை என்று கட்டளை பிறப்பிக்கிருர்கள்!

ஆகவே—பொது மக்களின் கல்வி நலனுக்குப் பெருங்கேடு விளைவிக்கும் இப்புதிய அரசாங்க உத்திரவு, என்பது தெளிவு.

'இது வெள்ளை அறிக்கையல்ல; நமது துயரத்தை வளர்க்கும் கருப்பு அறிக்கை; கல்வி முன்னேற்றத்தின் சரிவை, முடிவைக் குறிக்கும் துயரச் சின்னமான கருப்பு அறிக்கை!' என்று பொது மக்கள் பொங்கி எழத் தான் போகிருர்கள்.

நாமும் கூறுகிருேம்: "இந்தப் புதிய உத்திரவு ஆச்சாரியார் திட்டத்தின் ஆவி!'' என்று.

'ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தின் குறைகளைப் பொது மக்கள் எடுத்துக் கூறியதும், துணிச்சலோடு

அதை மாற்றினீர்கள்; அதே தைரியத்துடன், இப்புதிய உத்திரவின் பாத விளைவுகளை மனதில் கொண்டு அதை மாற்றுங்கள்!'' என்று கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

''கிராம வாசிகள் உங்கள் பேச்சுக்களால், பள்ளிகள் வரப்போகின்றன, என்று மகிழ்ந்து இருக்கிறார்கள். உங்கள் வார்த்தைகளைக் காப்பாற்ற, சிந்தித்துச் செயலாற்றுங்கள்!'' என்று முதலமைச்சர் திரு. காமராசருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம்!

என். ஜி. ஓ. பிரச்னை

சென்னை மாநில அரசாங்க கெஜட் பதிவில்லா ஊழியர்களுக்காக 'புதுமை' ஏற்கெனவே இரண்டு முறைகள் தலையங்கம் தீட்டியிருக்கிறது. கெஜட் பதிவில்லா ஊழியர்களின் கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானவை என்பதை நாம் முன்பே விளக்கி இருக்கிறோம்.

அரசாங்கத்தின் முதுகெலும்பு போன்ற இந்த ஊழியர்களும், தங்களது பொறுப்பை மறந்து, போராட்டம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும் எழுதி இருக்கிறோம்.

எனவே அடையாள வேலைநிறுத்தம் இந்த மே மீ 15ந்-தேதி என்று செய்தி கிடைத்ததும், பொது மக்களைப் போலவே நாமும் கவலைப் பட்டோம்.

நல்ல வேளையாகக் கடைசி நேரத்திலே அவர்கள் தங்கள் முடிவுகளை மாற்றிக் கொண்டதற்கு நமது பாராட்டுக்கள்.

முதலமைச்சர் திரு. காமராசரும், நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியமும், மனம் விட்டுப் பேசி, மத்திய அரசாங்கத்திடம் தாங்கள் ஏற்கெனவே பேசியிருப்பதாகவும், சம்பளக் கமிஷனின் முடிவு வெளி வந்ததும் 'மாநில என். ஜி. ஓ.க்களின் கட்சியை மீண்டும் டெல்லிக்கு எடுத்துரைப்பதாகக் கூறி, தங்களது நியாய உணர்வை வெளியிட்டுக் கொண்டதற்காக, அவர்களையும் பாராட்டுகிறோம்.

ஆனால், என். ஜி. ஓ.க்களின் அடையாள வேலை நிறுத்த முடிவில், அரசியல் வாதிகள் சிலரின் பங்கு மிக அதிகம் என்று ஆதார பூர்வமாக நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் நம்மை வேதனையுறச் செய்கின்றன.

எப்படியோ, கடைசி நேரத்திலாவது, அந்த அரசியல் வாதிகளின் பிடியிலிருந்து என். ஜி. ஓ. க்கள், மீண்டார்களே என்று ஆறுதலும் அடைகிறோம்.

x x x

இந்த நேரத்தில், சென்னை மாநில அரசியலாருக்கு, என். ஜி. ஓ நிவாரணம் பற்றி ஓரிரு யோசனைகள் சொல்ல ஆசைப் படுகிறோம்.

மாநில அராங்க ஊழியர்களும், மத்திய அரசாங்க ஊழியர்களும் ஒரே மாதிரியான சம்பளம் பெற வேண்டும் என்பது பாரதப் பிரதமர் உட்பட எல்லோரும் ஒப்புக் கொண்ட விஷயம்.

அத்துடன் கூட பிரெஞ்சு அரசாங்கத்தில் இருப்பது போல, ஊழியர்களின் குடும்பம் பெருகப் பெருக, ஒவ்வொரு புதிய குழந்தையின் வருகையோடும், அவர்களது பராமரிப்பிற்காக அலவன்ஸ் கொடுக்கப்படவேண்டும். அது ஒரு சிறந்த வரப்பிரசாதமாக,

என். ஜி. ஓ. க்களால் வரவேற்கப் படும்.

x x x

என். ஜி. ஓ. க்கள் அடையாள வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்றுத் தங்கள் நல்லெண்ணத்தைக் காட்டிக் கொண்டு விட்டார்கள்.

சென்னை அரசாங்கமும் குறிப்பாகச் சென்னை மாநில முதலமைச்சரும் மத்திய இரசாங்கச் சம்பளக் கமிஷன் யாதாஸ்துவெளியானதும் இவர்கள் பிரச்சனையை எடுத்து முடிவு செய்து என். ஜி. ஓ. க்களின் துயரைத் துடைக்கவேண்டும். இதைச் சென்னை சர்க்கார் செய்வார்களென நம்புகிறோம்.

நேரு—பதவி நீங்கி இருக்க வேண்டும்

பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகுவதாக, நேரு அறிவித்த பொழுது, நாம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம்.

நேர்மை மிக்க நேருவிற்கு நாம் எதிரான கருத்துக் கொண்டவர்கள் என்றல்ல இதற்குப் பொருள்.

நாட்டின் நலன் கருதியும் அவரது சொந்த நலனை மனதில் கொண்டுமே நாம் இவ்வாறு கூறுகிறோம்!

நேரு பதவி நீங்குகிறேன் என்று கூறியதுடன் நின்றுவிடாது, நீங்கியே இருக்கவேண்டும்!

காரணங்களில்லாது நாம் இதைக் கூறவில்லை.

நேரு எந்தக் காரணங்களுக்காக பதவி நீங்குகிறேன் என்று சொன்னாரோ, அந்தக் காரணங்களே நமது வாதத்திற்கும் பொருந்தும்!

மத்திய அரசியலில் அத்தகைய குழப்ப நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. இதையும் நாம் சொல்லவில்லை; மத்திய அமைச்சரும், பழுத்த காங்கிரஸ்காரரும், சிறந்த நிர்வாகியுமான திரு. எஸ். கே. பாட்டீல், விளக்கமாகப் பாராளு மன்றத்திலேயே சொன்னார்.

மத்திய அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்களுக்குமிடையிலே இணைப்பான வேலை முறைத் திட்டம் நடைமுறையில் இல்லை என்று அவர் சொன்ன பொழுது நாடே திடுக்கிட்டது.

திரு. பாட்டீலின் எச்சரிக்கை முன்னதாகவே, திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், 'ஆள் விழுங்கும் புலிகளைப் பற்றி விளக்கி இருக்கிறார்'

திரு. டி. டி. கே. யைக் காவு கொண்ட அந்தப் புலிகள் நேருவிற்கும் வலை விரித்துக் கொண்டுதான் உள்ளன.

அதே நேரத்திலே, பாட்டீலின் எச்சரிக்கையும், மத்திய அமைச்சர்கள் தன்னிச்சைப்படி சுயேச்சையாகச் செயல் பட்டு வருவதை வெளிச்சம் போட்டுக் காட்டியது!

இந்த நிலையிலே, நேரு பதவி நீங்கி இருந்தால் ...?

நாடே திடுக்கிட்டு, ஆத்ம பரிசோதனையிலே இறங்கி இருக்கும். நேர்மையான நேருவின் நெஞ்சைப் புண்ணாக்கும் ஆள் விழுங்கும் புலிகள், சோஷலிச விரோதிகள், சந்தர்ப்ப வாதிகள், காங்கிரஸ் திட்டத்தில் நம்பிக்கை யற்ற பெரும் புள்ளிகள், அனைவருமே, அந்த ஆத்ம பரிசோதனையிலே விளையும் கடவடிக்கை நெருப்பிலே வெந்து நீருகி இருப்பார்கள்; நாட்டைச் சூழ்ந்துள்ள இருட்டு நீங்கி ஒளியும் பிறந்திருக்கும்!

'நேரு ஏன் பதவி நீங்கினர்?' என்று மக்கள் சிந்திக்கத் தொடங்கி, தீய சக்திகளுக்கு முடிவு கண்டிருப்பார்கள்; புதிய ஓர் சூழ்நிலையில், திறமிக்க புதிய ஓர் அமைச்சர் அவையை மீண்டும் அமைத்துத் தலைமையை நடத்த நல்லதோர் வாய்ப்பினை நேருவிற்கு மக்கள் மீண்டும் நல்கியுமிருப்பார்கள்!

ஆனல் நம் தீவினை நேரு பதவி நீங்கச் செல்லவில்லையே?

ஈழத்திருநாடு எரிகிறது !

கடந்த சில ஆண்டுகளாகவே கொந்தளிப்பாக உள்ள ஈழத்திரு நாட்டில், சென்ற சில நாட்களிலே பல விபரீதமான விளைவுகள் ஏற்பட்டன. பெடரல் கட்சியாரும், பிரதமர் பண்டார நாயகாவும் செய்திருந்த ஒப்பந்தத்தை சிங்கள வெறியர்கள் எதிர்க்க, அதனுல் அவ் ஒப்பந்தத்தின் 'மறைமுகமான' முறிவு தோன்றியது. நிலைமையை ஆராய பெடரல் கட்சி மாநாடு வாவுன்னியாவில் கூடியபொழுதே, பலாத்காரம் கட்டவிழ்க்கப்பட்டு, பலாத்காரச் செயல்கள் உச்ச நிலையை அடைந்து விட்டன. உயிரும், உடமையும் பலரிடமிருந்து பறிக்கப்பட்டது.

நிலைமையை விரைவில் நேராக்க முயன்று வெற்றி கண்ட அனைவருக்கும் நமது பாராட்டுகள். மோசமான இச்செயல்களைச் செய்தவர்களைக் கடுமையாக பிரதமர் பண்டார நாயகா பேசியிருப்பது குறித்தும், மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆனுல் அதே நேரத்தில், பிரதமர் பண்டார நாயகாவின் சொல்லுக்கும், செயலுக்கும் இணக்கம் அதிகம் இல்லாமல் இருப்பது குறித்து நமது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதமர் பண்டார நாயகா, 'சர்வ தேசியவாதி' என்று தன்னை வர்ணித்துக் கொள்வதில் பெருமை கொள்பவர்; சர்வதேசிய அரசியலில் நேருவின் உற்ற நண்பர்; அத்தகைய தலைவர்தான் இன்று இலங்கையில் எரியும் நெருப்பை அணைக்க முடியும்.

யாருடைய மொழி வெறிக்கும் பணிந்து விடாது, சிங்களவர்—தமிழர் இரண்டு சாராரது நெறி நிற்கும் மொழி அன்பை மனதில் கொண்டு பிரச்னையைத் தீர்க்க திரு. பண்டார நாயகா முயன்ருல்—ஈழம் அமைதிக்குத் திரும்பலாம் !

ஆனுல், உதட்டில் உள்ள வெல்லம், உள்ளத்திலே இல்லையே ?

அனுமார்

முசு, முசுக்கை தைலம்.

குளுமை கூந்தல் வளர்ச்சி, அழகு தருவது.

நித்திரை குறைவு, கண் எரிவு, பித்த மயக்கம் போன்ற நித்திய உபத்திரவங்களை நிவாரணப்படுத்துவதில், சிறந்த ஒளஷதத் தைலம். குணத்திற்கு உத்திரவாதம், எங்கும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.

தாதுவிருத்திக்கு

அனுமார் சாலாமிஸ்ரி லேகியம்

தாது பலவீனம், நரம்பு தளர்ச்சி, இடுப்பு வலி, திரேக பலவீனம், நீங்கும். அபார வீரிய விருத்தியுண்டாகும். இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தரும். பத்தியமில்லை. முழு விபரம் மருந்துடன் 1 சேர் விலை ரூ. 10-00; ½ சேர் ரூ. 5-50; ¼ சேர் ரூ. 3-00.

M. A. செபஸ்தியன் R.I.M.P.
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
ஆறுமுகநேரி,
திருநெல்வேலி ஜில்லா-S. I.

நெல்லைக்கு திரு. தேபர்ஜி 22—4—58ல் வருகை தந்தார்.



நமது ஆசிரியர் திரு. கோசல்ராம், சென்னை மேல் சட்டசபை அங்கத்தினராகப் பதவி யேற்கும் காட்சி.

பிரமுகர் பேட்டி

முதலமைச்சர் காமராஜ்

கன்னிக்கண்ணன்

உலகம் என்ற பல்கலைக் கழகத்தில் அநுபவக் கல்லூரியிலே படித்து, 'சிறந்த அரசியல் மேதை' என்ற பட்டத்தைப் பெற்றவர் திரு. காமராஜ் பல்கலைக் கழகப் பட்டங்களை விட அவரது அநுபவ வடுக்களான பட்டங்களை எந்த விதத்திலே குறைத்து மதிப்பிட முடியும்?

தமிழக அரசியல் வானில் திடீரென்று தோன்றிய 'ஸ்பூட்னிக்' அல்ல திரு காமராஜ். தனது உழைப்பால், படிப்படியாக உயர்ந்து நிலைத்து விட்ட துருவ நட்சத்திரம்.

பொதுமேடைகளிலே சொற்சிலம்பம் ஆடுவதிலே அவர் அதிகமாகக் கவனம் செலுத்துவதில்லை. குறைந்த பேச்சு, நிறைந்த செயல். அடக்கமான மக்கள் சேவை. இந்த இலக்கணத்தின் இலட்சிய இலக்கிய விளக்கமாக அவரைத் துணிந்து கூறலாம்!



இப்படிப்பட்ட ஒரு உயரிய முதல் அமைச்சரை 'புதுமை'க்காக பேட்டி காணச் சென்றேன். சென்ற மாதம் 19-ம் தேதி மாலை 6-30 மணிக்கு. 'குடு குடு' என்று நான் உள்ளே நுழைந்ததும், 'என்னப்பா, கன்னி! சௌக்கியமா?', என்று கூறிக் கொண்டே என்னை வரவேற்றார். அடிக்கடி பார்த்துப் பழகிப் போனதால் எனக்கு அவர் புதியவராக இல்லை. நானும் 'வணக்கம்' என்று கூறி 'பேட்டியை ஆரம்பிக்கலாமா?' என்றேன்.

'எதுக்கப்பா தனியாக பேட்டி? உனக்குத்தான் எல்லாம் தெரியுமே; எழுதித் தள்ளுவது தானே" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

"தனிப்பட்ட முறையில் வரவில்லை. 'புதுமை' வாசக நேயர்களின் சார்பில் தங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்" என்றேன் நான்.

"அப்படியானால் கேட்க வேண்டியதை எல்லாம் கேள். தெரிந்ததைச் சொல்கிறேன்" என்றார். இப்படியே எங்கள் பேட்டி ஆரம்பமானது.

நான்: தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத்திட்டம் போன்ற மக்கள் திட்டங்கள் உங்கள் மேல்பார்வைக்கு வந்தும், இன்னும் எதுவும் சரிவர நடைபெறவில்லையே, என்ன காரணம்?

அவர்: சென்ற ஒருவருட மாகத் தானே இந்த இலாக்காவை நான் வகித்து வருகிறேன்? எனக்கு இந்தத் திட்டங்கள் விஷயத்தில் எவ்வளவோ விதமான எண்ணங்கள் உண்டு. தனியாக வேறு எந்த

விதத் தொந்தரவும் இல்லாத முறையில் அதற்கு நேரத்தைச் செலவிட வேண்டும். அதற்கு நேரமில்லை. ஓயாத ஒழியாத வேலைகள்; இதற்காக ஒரு தனி நிகழ்ச்சி நிரலையே தயாரித்து, வேலைகள் செய்ய எண்ணியுள்ளேன். கூடிய சீக்கிரம் அதன்படி செய்யப் போகிறேன்.

நான்; இந்த மக்கள் திட்ட வேலைகளுக்காக, இரண்டு ஜில்லாக்களுக்கு ஒரு பெரிய அதிகாரி விகிதம் நான்கு ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதல்லவா?

அவர்: ஆமாம், அதற்கென்ன?

நான்: ஐ. ஏ, எஸ். அதிகாரிகள் தங்களை 'தேவலோகத்துப் பிறவிகள் என்று எண்ணிக்' கொண்டிருப்பவர்கள், மக்கள் மத்தியில் சென்று பணியாற்றுவதை, மக்களோடு தொடர்பு கொள்வதை. இழிவாகக் கருதுபவர்கள். இவர்கள் இந்த மாபெரும் மக்கள் திட்டத்துக்கு எப்படி உதவியாக இருப்பார்கள் என்று தெரியவில்லை. இவர்களை நியமித்து அந்த மகத்தான திட்டத்தின் யதார்த்த லட்சியத்தை பூர்த்தி செய்யாமல் இருப்பதைவிட, நல்ல தேசிய எண்ணம் படைத்த உத்தியோகப் பற்றற்ற பொது நலவாதிகளை, விபரம் தெரிந்தவர்களை நியமிப்பது நல்லதல்லவா?

அவர்: எல்லா ஐ. ஏ. எஸ். அதிகாரிகளும் நீங்கள் நினைப்பது மாதிரி இல்லை. அவர்களும் நம்மைப் போன்ற மக்கள் தான். அவர்களுக்கும் நாட்டுப் பற்று உண்டு. அதே நேரத்தில் நீங்கள் சொல்லுகிறபடி, உத்தியோகப் பற்றற்ற ரீதியில் தேசிய எண்ணம்படைத்த நல்லபொதுஊழியர்கள் நமக்கு கிடைக்கவில்லையே? இதற்கென்ன செய்வது? இந்த நிலைமையில் எப்படி உத்தியோகப் பற்றற்றவர்களை நியமிக்க முடியும்?

நான்: மற்றைய ராஜ்யங்களைப் பார்க்கும்போது நம் ராஜ்பத்தில் இந்த மக்கள் திட்டம் சரிவர வேலை செய்யவில்லை! ஒதுக்கப்பட்ட பணம் சரிவர உபயோகப் படுத்தாமல் 'வாபஸ்' ஆகிப் போகிறது என்று பலவாறாக ஒரு வதந்தி உலாவுகிறதே, அதைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

அவர்: அப்படி ஒன்றும் சொல்வதற்கில்லை. நல்ல முறையில் தான் வேலைகள் நடந்து வருகின்றன. பணம் எதுவும் அப்படி உபயோகப் படுத்தாமல் திருப்பிக் கொடுக்கவில்லை. சில பிளாக்குகளில் குறைவாகவும், சில பிளாக்குகளில் கூடுதலாகவும் செலவு செய்யப்படுகிறது. இதனால் 'வாபஸ்' ஆவதற்கே வழியில்லை. தமிழ்நாடு பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்து திட்டவேலைகளைப் பற்றிநேரில் கண்டறிந்து குறைகளை நேர் செய்வதற்கான ஒரு திட்டம் ஒன்றை சீக்கிரமே தயாரிக்கப்போகிறேன்.

நான்: இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் இலங்கை இந்தியர்களுக்கு சென்னை அரசாங்கம் என்ன உதவி செய்துள்ளது? பாகிஸ்தான் போன்ற பிற நாடுகளிலிருந்து வெளியேற்றப்படுபவர்களுக்கு அகதி என்ற பெயரால் அதிக உதவிகள் அளிக்கும்போது, இலங்கையிலிருந்து வரும் தமிழர்களுக்கு எதுவும் அளிக்காமல் இருப்பது சரியா?

அவர்: கூடுமான வரையில் வேண்டிய ஏற்பாடுகளை இந்திய சர்க்கார் செய்துதான் வருகிறது. இலங்கையிலிருந்து வரும் இந்தியர்கள் இந்தியாவில் பிரஜா உரிமை இல்லாதவர்கள். இவர்களுக்கு பலமும், வசதிகளும் இருக்கும் போது இவர்களை எப்படி அகதிகள் என்று கருதமுடியும்? சொத்து சுதந்திரம் அனைத்தையும் இழந்து திக்கற்ற நிலையில் வருபவர்களைத் தான் அகதிகள் என்று கருத முடியும்.

நான்: நேருஜி பதவியிலிருந்து விலகி விடுவதாக அறிவித்திருந்தார்

அல்லவா? அதற்கு கட்சி விவகாரம் தான் காரணம் என்று பேசப் படுகிறதே? அதுபற்றிய தங்கள் கருத்து என்ன?

அவர்: வெறும் வேலைத் தொந்தரவு காரணமாகத்தான் அவர் ஓய்வு பெற விரும்பினார். கட்சி சம்பந்தமான விவகாரம் எதுவும் கிடையாது.

நான்: தமிழகத்தைப் பொறுத்த அளவில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அனைத்தும் ஒரு சிலரது ஏக போக உரிமையாகவே இயங்கி வருகிறதே, இந்த நிலையை மாற்ற ஏதாவது நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுண்டா?

அவர்: கூட்டுறவு ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்தை திருத்தி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூடிய சீக்கிரம் சில்லறைக் குறைபாடுகளனைத்தையும் தீர்த்துவிடமுடியும் என்று நம்புகிறேன்.

நான்: காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இருக்கும் 'பத்தாம்பசலிகளை' புறக்கணித்து, ஆர்வமும் தேசிய எண்ணமும் படைத்த இளைஞர்களுக்கு இடம் அளித்தால் நன்றாக இருக்குமே?

அவர்: இளைஞர்களை ஆவலோடு வரவேற்கிறோம். எதிர்காலம் அவர்கள் கையில்தான் இருக்கிறது. தாராளமாக அவர்கள் ஸ்தாபனத்தில் சேர்ந்து உழைக்கட்டும். யார் தடுக்கிறார்கள்?

நான்: என். ஜி. ஓ. கள் திடீரென்று வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார்களே, அது ஏதாவது நிபந்தனையின் பேரில் தானே?

அவர்: அவர்களாகவே வேலை நிறுத்தம் செய்வதில்லை என்று முடிவு செய்தனர். எந்த வித நிபந்தனையும் அளிக்கவில்லை. அவர்கள் விஷயமாகப் பார்த்து ஆவன செய்யப் போகிறோம்.

நான்: சென்னை அரசங்க காதி இலாகாவைச் சேர்ந்த விற்பனை நிலையங்களில் உள்ள ஊழியர்கள் தினமும் 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு கிடைக்கும் ஊதியமோ மிக, மிகக் குறைச்சல். அரசாங்க ஷாப் சட்டப்படி, மற்றைய தொழில் நிலயங்கள், ஷாப்புகளுக்கு 8 மணி என்றிருக்கும் போது அரசாங்கம் நடத்தும் விற்பனை நிலயங்களில் மட்டும் 12 மணி நேரம்வேலை செய்யவேண்டுமா? அப்படியானல் வேலியே பயிரை மேய்ந்தது போலாகுமல்லவா?

அவர்: எனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது. நீங்கள் சொல்வது உண்மையானல், உடனேயே விசாரித்து ஆவன செய்ய முயற்சிக்கிறேன்.

நான்; தமிழகத்தில் காங்கிரஸின் செல்வாக்கு எப்படி இருக்கிறது?

அவர்: காங்கிரசைப் பொறுத்த மட்டில், தமிழ் நாட்டில் என்றுமே செல்வாக்குக்கு குறைவில்லை. இன்றும் அதேநிலைதான். பெருவாரியானவர்கள் நல்ல அபிப்பிராயத்துடனேயே இருக்கிறார்கள். கொஞ்சம் சில்லரை எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். அது காங்கிரசை எதுவும் செய்யமுடியாது.

கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். மணி சரியாக எட்டு. "என்னப்பா முடித்துவிட்டாய், இன்னும் ஏதாவது கேட்கவேண்டுமானல் கேளு. சொல்கிறேன்" என்று சிரித்தார். இனிகேட்பதற்கு என்ன இருக்கிறது அவ்வப்போது எழும் பிரச்னைகள் பற்றி சமயம் வாய்க்கும்போதெல்லாம் தங்களைச் சந்தித்து விளக்கம் 'தெரிந்து கொள்கிறேன். இத்துடன் இன்று முடித்துக் கொள்கிறேன் என்றேன்". சரி, உன் இஷ்டம்" என்றார்.

சில தவிர்க்க முடியாத காரணங்களால், 'இயற்கை வைத்தியத் தொடர் கட்டுரை இந்த இதழில் வெளியாக வில்லை. அடுத்த இதழிலிருந்து வழக்கம் போல் பிரசுரிக்கப்படும்.

—ஆசிரியர்.

வீட்டிற்கும் தோட்டத்திற்கும்
வேண்டியமட்டும்
தண்ணீர் எடுக்க
ஒரு

டெமிங் "மார்வெல்"

வாட்டர் ஸிஸ்டம்

அமைத்துவிடுங்கள்.

இந்த பம்பு செட்டுகளை தற்போது உங்கள் வீட்டிலுள்ள கிணற்றிலும் அல்லது குழாய்க் கிணற்றிலும் சுலபமாய் அமைக்கலாம். நீளமான குழாய் மாட்டுவது, உயரத்தில் டாங்கிகள் கட்டுவது முதலியவை தேவையில்லை. அவை முழுவதும் தானகவே ஆட்டோமாட்டிக் வேலை செய்வதுடன், வருஷக் கணக்கில் திருப்திகரமாக சேவைபுரியும்.



குழாயைத் திறந்தால் தண்ணீர் கிடைக்கும்

டெமிங் "மார்வெல்" வாட்டர் ஸிஸ்டம்

விசாரிக்குமிடம் :

ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி' லிட்.,
5-7, ஸெகண்ட் லேன் பீச், மதராஸ்-1.

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவிதமான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதறாஸ்.



S. SANTHOSA NADAR & SON

1/4, EVENING BAZAR .... P.T. MADRAS.

BAROOZ

கிளை ஆபீஸ் : 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

காமனை வென்ற கண்

இது வரை... 'சுகி'

தமிழகத்தின் பெருமைக்குரிய குற்றாலம். இமயத்துக்குவடக்கே காஷ்மீரம் போல, அக்குற்றாலத்திற்கு வடக்கே காசிமீஸ்வரம் என்ற சிறு கிராமம்.

ஜமீன்தார் பாண்டித்துரை, அப்பகுதியில் செல்வாக்கோடு கூடிய ஓர் பணக்காரர். அவரது கார் ஓட்டியாகப் பணி புரிந்து வருகிறான் முத்தையன். கட்டிளம் காளையாக அவன் வளர்ந்து இருந்தாலும், அவன் மீது கணக்கில்லாத பாசம் வைத்து வளர்த்து வருகிறாள், அவன் தாய் பார்வதி.

பார்வதி தன் கணவனைச் சிறு வயதிலேயே இழந்தவள்; புலி வேட்டையிலே கணவன் இறந்தான் என்பதனால்; முத்தையன் வேட்டையாடச் செல்லவே கூடாது என்று கண்காணித்து வருகிறாள்.

முத்தையனின், அத்தை மகள் செண்பகம், குறுகுறுப்பு கொப்பளித்து ஓடும் அழகி. இருவரும் காதலர்கள்.

செண்பகத்தின் வளர்ப்பு மானை, ஓர் நாள் வேங்கை ஒன்று கவர்ந்து சென்றது. தனது மானைக் கொன்ற புலியை வேட்டையாடிக் கொன்று வர முத்தையனை வேண்டுகிறாள், செண்பகம்.

தாயின் கட்டளைக்கும், காதலியின் வேண்டுகோளுக்கும் இடையிலே சிக்கித் திகைக்கிறான், முத்தையன். கடைசியில் காதல் வெல்கிறது; வேட்டைக்குப் புறப்பட்டு விடுகிறான்.

ராமையா, காசிமீஸ்வரத்தின் தலை சிறந்த போக்கிரி; செண்பகத்தின் மீது அவனுக்கு எப்பொழுதும் ஒரு கண். முத்தையன் வேட்டைக்குப் புறப்படுவதை உளவறிந்த ராமையா, பார்வதியிடம் சென்று அதைக் கூறுகிறான்.

பார்வதி பதறுகிறாள்; ஆனால், அவள் தடுப்பதற்குள் முத்தையன் மலை ஏறி

விடுகிறான். பார்வதியின் சித்தம் கலங்குகிறது.

பாண்டித்துரையும், அவரது திருச்சி நண்பரான எழுத்தாளருமாக, காட்டில் முத்தையனைத் தேடுகிறார்கள். நாட்கள் நகர, நகர முத்தையனை உயிருடன் காண்போம் என்ற நம்பிக்கையையும் எல்லோரும் இழக்கிறார்கள்.

திருச்சி எழுத்தாளர், முத்தையன்மீது மிக்க அன்பு கொண்டவர்; இந்த நிகழ்ச்சிகளால், அவரது நெஞ்சு கலங்குகிறது. தன் துயரச் சுமையைக் குறைத்துக் கொள்வதற்காக, உடன் மதுரைக்கு பிரயாணம் செய்யும் கோபால வாரியாரிடம் முத்தையன் கதையைச் சொல்லி வைக்கிறார். அதுவே பிறகு நன்மையாகவும் முடிகிறது.

பாண்டித்துரையும், அவரது அவசர அழைப்பின் பேரில் மீண்டும் குற்றாலம் வரும் எழுத்தாளருமாக, முத்தையன் சிங்கப்பூருக்குப் போய் விட்டதாகச் சொல்லி பார்வதியை நம்ப வைக்கிறார்கள். அன்புருவான அத் தாயும், கடல் கடந்தாலும் தன் கண்மணி சுகமாக இருக்கட்டும் என்று எண்ணி நிம்மதி அடைகிறாள்.

கோபால வாரியார், மதுரையிலிருந்து ஊர் திரும்பியதும், புலியால் தாக்குண்ட ஒருவனைக் குணப்படுத்த அழைப்பு அவருக்கு வருகிறது. சென்ற இடத்தில் முத்தையனைப் பித்தம் பிடித்த நிலையில் காண்கிறார். புலியிடம் போராடி அதைக் கொன்றவன், அதனால் தலையில் அடிக்கப்பட்டு, மூளை குழம்பி விடுகிறான். அவனை அன்புடன் பேணும் லட்சுமிக் குட்டியை அவன் உள்ளம் இறுகப்பற்றிக் கொள்கிறது. வாரியார் விதியின் போக்கை எண்ணித் திகைக்கிறார். பிறகு...?

அத்தியாயம் 14
நினைவுச் சுகம்

ஆண் மனத்தைப் பேதலிக்கச் செய்யும் ஒரு பொருள் பெண்மை தான்; இதை வாரியார் தமது வாழ்க்கையில் தெரிந்து கொண்டதைக் கோடிட்டது போல முத்தையன் பேச்சிலிருந்து அறிந்து கொண்டார். அவன் சித்தம் மாறியிருந்தது; அவ்வாறு மாறிய போதும், அந்த உள் மனசில் எதுவும் பற்றாத நிலையிலும் ஒரு சில பற்றுதல் தங்கத்தை எடுக்கும் போது கல்லும் மண்ணும் ஒட்டுவது போல ஒட்டிக் கொண்டிருந்தது. வாரியார் அதிகாலையில் வீட்டுக்கு வந்தார். அருமையான வீடு. நிழல் கனிந்த இடம். எங்கும் குளுமையின் பரிவு இருந்தது. ஆங்காங்கே வியாதிக்காரர்கள் இருப்பதற்கு அறைகள் இருந்தன. குவிந்து கிடக்கும் மருந்து மூலிகைகள் ஒரு பக்கம். அவருடைய இனிமையான பேச்சுக்குப் பாதி வியாதி குணமாகும். வாரியார் பேச்சின் இனிமை முத்தையனுக்கு பிடிக்கவில்லை.

"சாப்பிடலாமா?" என்றார் வாரியார்.

முத்தையனைக் கிணற்றங்கரைக்கு வேலையாட்கள் அழைத்துப்போய் குடங்குடமாகக்கொட்டினார்கள். அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துத் தப்பிடம் சொல்லும்படி கேட்டுக் கொண்டார்.

"போதும், போதும். லட்சுமிக் குட்டி"

இதைத்தான் வேலைக்காரர்கள் அவனைக் குளிப்பாட்டிய காலத்துச் சொன்னான். பேதலித்துள்ள அவன் மூளையில் லட்சுமிக்குட்டியின் பேச்சு, நடமாட்டம் கற்சிலையாகச் செதுக்கி உயிர் பெற்று நிற்பதே அவருக்கு ஆச்சர்யம்.

"சாப்பிடலாம் உட்கார்" என்றார் வாரியார்.

யாரோ ஒரு வேலைக்காரன் தட்டிலே ஆப்பம் கொண்டு வந்தான். அடுத்து ஏதோ கனிகள்; தித்திப்பான பாயசம் வந்தன.

"லட்சுமிக் குட்டி எங்கே?"

"அவள் வருவாள். நீ சாப்பிடு."

"இப்போ வரச்சொல்."

லட்சுமிக்குட்டி உள்ளே இருப்பது போலவும், அவளை அழைப்பது, போலவும் "இந்தா லட்சுமிக் குட்டி, இங்கே வாம்மா" என்று நடிப்பதாகச் சொல்லிக் கொண்டே இலையில் பரிமாறும்படி கண் அசைத்தார்.

இலையில் ஏதோ விழுந்தது. அசையாது ஆடாமல் அமர்ந்தான் முத்தையன். அவன் கண்கள் உள்ளேயிருந்து வரப்போகும் லட்சுமிக்குட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தன. பாவம். தன்னை ஏமாற்றுகிறார் என்பதை அவன் எங்கே கண்டான்?

"சாப்பிடு, முத்தையா"

"யார் முத்தையன்?" என்றான்.

வாரியார் விழித்துக் கொண்டார். அவனுடைய தற்சமயப் பெயர் சுந்தரம் என்பதை நினைவுக் கொண்டு, "சாப்பிடு, சுந்தரம்" என்றார்

"லட்சுமிக் குட்டி, கொண்டு வா."

"லட்சுமிக்குட்டி, இங்கே வராமல் அங்கே என்ன செய்கிறாய்? என்ன, ஓகோ, குளிக்கப் போயிருக்கிறாயா? உம் விரைவில்". என்றார்.

மறுகணம் முத்தையன் எழுந்தான்.

"உட்கார் சுந்தரம். அவள் வருவாள். நானே எடுத்துத் தருகிறேன்,"

வைத்தியர் நோயாளியின் மனசை அறிவதற்குத் தான் அழைத்து வந்தார். சுந்தரமாகவும் அவன் நடக்கவில்லை. முத்தையனாகவும் நடக்கவில்லை. இரண்டும் கட்டானாக அவன் நின்றான்.

"எங்கே லட்சுமிக்குட்டி?" அவன் கேள்வியில் கோபம் இருந்தது. அவனிடமிருந்து எதையோ அவர் பறித்துக் கொண்டது போல முகம் காட்டிற்று.

"குளிக்கப் போயிருக்கிறாள். வந்து விடுவாள். சாப்பிடு."

"இதோ நான் கூட்டி வருகிறேன்."

அடுத்த கணம் முத்தையன் தெருவிற்கு வந்தான். அவன் பார்வை எங்கோ தொலைத் தூரத்தே தெரிந்த மலையைப் பார்த்துக் கவிந்தது. அது என்ன? ஓட்டமா? பாய்ச்சல். பறக்கும் மானே போல, புலியாகப் பாய்ந்து விட்டான். பின் தொடர முடியாத ஓட்டம்.

வைத்தியர் கோபால வாரியார் 'திருதிரு'வென விழித்தார். முத்தையன் ஓடுகிற பாதை அவருக்குத் தெரிந்தது. நாராயணனுடைய குடிசை மலையடிவாரத்தை ஒட்டி இருக்கும் திக்கு நோக்கித் தான் ஓடிக் கொண்டிருந்தான் முத்தையன்.

"இனிமேல் நம்மால் வைத்தியம் செய்ய முடியாது. லட்சுமிக் குட்டியால் வைத்தியம் செய்ய முடியும்." என்று இலைக்குவந்து உட்கார்ந்தார். இரண்டு மணி நேரம் சென்ற பிறகு, வேலையாள் வந்தான். வெறுங் கையோடு வந்தான். நாராயணன் குடிசைக்குப் போய்ச் சேர்ந்து விட்டான் முத்தையன்.

"இது என்னங்க அதிசயம். அந்தப் பொண்ணு இவனைக்கண்டதும் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டது. அவனும் கன்றைக் கண்ட பசுப்போல துடிச்சுப்போனான். இது புதுமாதிரி கிராக்கு" என்று சொன்னான், வேலையாள்.

"சரி போடா." என்று வைத்தியர் சொல்லிவிட்டார். அவர் இனிச் செய்ய வேண்டுவதை தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்தார்.

* * *

அதிகாலையிலே எழுந்து விட்ட லட்சுமிக்குட்டிக்குத் தூக்கம் கலைந்தது; வழக்கம் என்ற பிசாசு எவ்வளவு சமீப காலத்துள் ஒருவரைப் பிடித்திருந்தாலும் மனசிற்குப் பிடித்தமான செயலாக இருந்தால், அதன் வேதனை பன்மடங்கு தானே? அவள் எழுந்ததும், ஓடைக்கரைக்குப் புறப்பட முத்தையன் இருக்குமிடத்தைப் பார்த்தாள். அவன் படுத்திருக்கும் பாய் அவள் உள்ளம் போன்று சுருண்டு கிடந்தது. ஏதோ ஒரு ஆசை. அந்தப் பாயின் மீது வந்து அமர்ந்தாள். தலையணையை எடுத்துக் குழந்தையைப்போல, மடி மீது

போட்டுக் கொண்டாள். மறு கனம் வெறுப்பு வந்து, அதனைத் தொலைவில் வீசினுள். தனக் குள்ளேயே சிரித்தபடி மீண்டும் ஒரு முறை சோம்பல் தீரும்படி பாயிலே குதிரைக்குட்டி ஒன்று மணலிலே படுத்து உடம்பை முறுக்குமே அவ்வாறு புரண்டு பார்த்தாள்; உடலா அலுப்புற் றிருக்கிறது? உள்ளமல்லவா சோம்பி, வெறுப்புக்குள்ளாகி அத்தனை வேதனையும் தருகிறது?

மிகவும் சுறுசுறுப்பு அடைந் தவள் போன்று, தாய்க்குத் துணையாகப் பாத்திர பண்டங் கள் துலக்க ஆரம்பித்த போது தம்ளர் — அசல் பாலக் காட்டு வெண்கலம்—அவள் கை யில் சிக்கியது. அதைக் கண்ட தும் அவள் உள்ளம் மீண்டும் முருக்கை மரத்தில் ஏறிக்கொண் டது. அந்தப் பாத்திரம் முத் தையன் புழங்குவதற்கென்றே இது நாள் வரை கொடுக்கப்பட் டது. அதைக் கோபமாக சாம்பல் கொண்டு அழுத்தி விளக்கினபோது சிரிப்பு வந் தது. மறுகணம் அது துலர்ம் பரமாகப் பளிச்சென மின்னு வதைக் கண்டு மகிழ்ச்சி.

"சே சே. அவர் வந்தால் இதில் தானே தண்ணீர் குடிப் பார். உன்னைத் தொல்லை செய் யக் கூடாது."

மற்றப்பாத்திரங்களோடு ஒட் டாது தனிமையாக வைத்தாள். பாலசூர்யனின் கதிர்கள் அதிலே பட்டு ஒளிவிட்ட போது அவள் முகம் மலர்ந்தது. முத்தையன் அங்கே இல்லாத காரணத்தால் அவன் தொட்டும், கண்டும் மகிழ்ந்த பொருள்களைப்பார்த்து ஆறுதல் அடைந்தாள். நில வைக் கண்டு கடல் கொதிப் படையும் என்ற எண்ணம் அவ ளுக்கு வந்தது. முத்தையன் இரண்டு கல் தொலைவில் இருப் பவனை ஓடியே போய் அழைத்து வந்துவிட மனம் துடிதுடித்தது. அவளுக்கு ஒவ்வொரு விநாடி யும் அங்கே பார்த்தாலும் அதற்கு அப்பால் பார்த்தாலும் எங்கே பார்த்தாலும் முத்தை யன் நின்று கொண்டு குழந்தை யின் கொஞ்சும் குரலில், "லெச் சுமீ, லெச்சுமீ" என்று கொஞ்சு வது போன்ற பிரமை.

குழந்தையொன்றை நினைத் துக் கொண்டு மனம் கொதித்து உள்ளம் வேதனை யடையும் தாயைப் போல அவள் மனம் வெந்து சாம்பலாகிக் கொண்டி ருந்தது. திடீரென்று வேலை களைப் பார்ப்பாள். மறுகணம் சண்டிமாடு போல நிற்பாள்.

"அட, இன்னும் பாத்திரங்கள் துலக்கவில்லையா?" என்று குளித்து வந்த தாய் கேட்ட போதுதான், மணிக்கணக்காகத் தான் பாத்திரங்களோடு இருப் பதை உணர்ந்தாள்.

"உம். போகிறேன் அம்மா."

"நல்லாப் போகிறுய்? ஓடைக் கரைக்குப் போய் குளித்து எப்போ வருகிறதாம்?"

படபடப்பாக, பாத்திரங்களை விளக்கினுள். வெங்கலத்தம்ள ரும், தாலமுமாக இருந்ததைத் தனியாக ஒரு முறை அவள் பூப் போல ஒரு பக்கம் வைத்தாள். மறுகணம், மாற்றுடை எடுத்துக் கொண்டு ஓடைக்கரைக்குப் புறப் பட்டாள். அவள் படபடப்பாக நடந்தபோது "லட்சுமீ, லட்சுமீ" என்று ஆவாரஞ் செடிக்கு அப்

பால் மறைந்தபடியே முத்தையன் கூப்பிடுவதாக எண்ணம். அத்தனையும் பிரமை. நினைவுச் சுகங்கள். முத்தையன் அவளோடு இருந்தபோது அவள் எண்ணங்கள் அவன்மீது இருந்ததை விட இப்போது விசுவரூபம் எடுத்தது. பார்க்கின்ற ஒவ்வொரு பொருளிலும் தோன்றியது.

பாதையிலே மலர்ந்து கிடந்த காட்டுப் பூவைக் கண்டதும் கிள்ளிக் கையில் எடுத்தாள்.

நாலாம்நாள் நடந்த சம்பவம் நினைவிலே வட்டம் சுற்றியது.

இருவரும் குளித்துவிட்டு வரும்போது, முழங்காலைத் தொடும்படி நீண்டு அலைமோதிய ஈரக் கந்தலை அவள் கை விரலால் ஆற்றிக் கொண்டு வந்தாள். முன்னே போய்க்கொண்டிருந்த முத்தையன் காட்டுப்பூவைப் பறித்தான். அதைக் கையிலே ஒருகணம் வைத்துக்கொண்டிருந்தான்.

"முன்னே போகலாம்" என்றாள்.

அவள் சொல்லியும் அவன் நகரவில்லை.

தன் அருகாக அவள் வந்ததும், தாமரைக் குளத்திலே தண்டை வளைத்து மலரைப் பிடிப்பது போல, அவள் தலையை வளைத்து தன் கைக்குள் பிடித்துக் கொண்டு காட்டுமலரை கூந்தலில் சூடினான் இன்று காட்டுப்பூ அவளைப் பார்த்து இதழ் விரியச் சிரித்தது. நின்று ஒரு கணம் பார்த்தாள். மலர் இதழ் விரித்து முத்தையன் பெயரை எழுதிக் கொண்டிருப்பதாகப் பட்டது. ஆங்காங்கே தூர தூரங்களில் இருக்கும் பூக் கொத்துக்கள் "முத்தையன்" என்ற எழுத்துக்களைத் தெரிவித்தன.

"இந்த மலருக்குத்தான் எவ்வளவு நினைவு!"

மலர்க் கூட்டத்தைக் கை கொண்ட வேகத்தோடு ஓங்கிப் பிடித்தாள். தேனுக்காக உறங்கிக் கொண்டிருந்த சில தேனீக்கள் 'ஙொய்'யென ரீங்காரம் செய்தன. அந்த ஒலி மலர்கள் எழுதிய எழுத்துக்கு உச்சரிப்பு பிறப்பது போல உணர்ந்தாள். எல்லாம் அவனைப் பற்றிய எண்ணத்தின் விளைவுகள்.

மனமின்றி அந்த மலர்க் கட்டத்தை தாண்டி வரும் போது, பாதையிலே வெள்ளை வெளேர் என்று நீட்டிக் கொண்டிருக்கும் கல் இடறி விட்டது. அந்தக் கல்லும் மறைந்த முத்தையன் கதையை மீண்டும் சொல்ல ஆரம்பித்தது. அன்று, முத்தையன் கல் இடறி விழ இருந்த சமயம் பின்னால் வந்த அவள் ஓடியே வந்து அவனைத் தாங்கிக் கொண்ட போது அந்த அகன்ற மார்பின் சொகுசான ஸ்பரிசம்; உடலை கிறுகிறுக்கச் செய்ததே அதே உணர்ச்சி உடலெங்கும் பரவி நின்றது. அவன் உடல் இல்லை; அந்த உணர்ச்சி இப்போது இருக்கிறது. புளகமுறச் செய்த அந்த உணர்ச்சி இன்று தீப்பந்தமாய் கொழுந்து விட்டு அருகாக வந்து அனலாடிற்று. எது சுகமாக இருந்ததோ அதுவே இன்று நெருப்பாகச் சுடுகிறது. அவள் உள்ளத்தை அடக்கிப் பார்த்தாள். உடலின் ஒவ்வொரு அணுவும் தான் பெற்ற இன்பத்தை அணு அணுவாகப் பெருக்கிக் காட்டின. கண்கள் அவன் உருவத்தை மன தாரக் கண்டன: செவிப்புலன்கள் அ க்குரலைக் கேட்டன; உடலோ, தொட்டும் துடைத்தும், அனு ப வி க்க த் தொடங்கிவிட்டது. அவள் நடக்கும் போது தனக்கு முன்னும் பின்னுமாக முத்தையன் நடப்பதை மனக்கண் பார்த்தது. நினைவு உலகம் பின் தொடர்ந்தது. ஓடக்கரையில், அவள் தனிமையாக இல்லை. தன் மனத்தகத்து அனல் அடங்க ஆங்காரமாகத் தண்ணீரோடு போராடிக் குளித்தாள். எவ்விதமான நோக்கமுமின்றி, வாரி வாரி நீரைக் கரையிலே தெளித்தாள். ஆழ்ந்தும், அமிழ்ந்தும் ஓடக்கரையை அவள் கலக்கிவிட்டாள். அப்பகுதியில் வேறு யாராவது பார்த்திருந்தால் அவளுக்குப் பித்துப்பிடித்திருப்பதாக சொல்ல நேரிடும். அவள் மாற்றுடை தரித்துக் கொண்டிருந்த வேளையில், தொலைவிலே ஒரு குரல் கேட்பதாகப் பிரமை.

அடிக்கடி திரும்பிப் பார்த்து, ஏமாற்றம் அடைந்த நினைவும் உடன் எழுந்தது.

அங்கே முத்தையன் வந்து கொண்டிருந்தான்!

மேட்டிலிருந்து இறங்கி வரும் கான் ஆற்றின் வேகம் அவன் நடையில் இருந்தது. "லட்சுமிக் குட்டியீ" என்று கத்தினான். அது பிரமையல்ல என்று தெரிந்தும் திரும்பிப் பார்க்கவில்லை. வியர்க்க விருவிருக்க அவள் முன்னே வந்து நின்றான் முத்தையன். கனவன்று, நிஜ முத்தையன்!

காணாத செல்வத்தைக் கண்டவன் போன்று கண்ணும், மனமும் கையும் உடலுமாக நெஞ்சாரத் தழுவிக்கொண்டான்; அவர்களுடைய உடலும் உள்ளமும் ஓடைக் கரையைவிட்டுசார்க்கத்தின் உணர்ச்சிச் செல்வத்துக்கு மேலான ஒரு உலகத்துள்ளே பறக்கத் தொடங்கிற்று. முத்தையன் கண்களில் நன்றியா, இளமை வெறியா, வாலிபத்தின் முறுக்கா? என்னென்னவோ உணர்ச்சி அலைகள் ஆனந்த மிகுதியால் அவன் கண்களில் தெரிந்தன. பொல பொலவென கண்ணீர்முத்துக்கள் ஒளி விட்டுக்கொண்டிருந்தன.

"பசிக்குது" என்றான் முத்தையன்.

அவர்கள் வீடு நோக்கிப் புறப்பட்டார்கள், மதனும் ரதியும் போல.

அத்தியாயம் 15

களிப்பூட்டும் செய்திக்கு கலை கொத்துப் பரிசு!

ஜமீன்தார் பாண்டித்துரை, 'கோபால வாரியார்' என்ற சொல்லைக் கேட்டதும், ஆனந்த பரவசமாகி வெளியே வந்தார். நானும் உடன்வந்தேன். வாரியார் கேட்ட முதற் கேள்வி, "செண்பகம், செண்பகம் என்று சொல்லப்படும் அந்த மோகனாங்கி எங்கே இருக்கிறாள்? முதலில் அவளைப் பார்க்கவேண்டும்" என்று சொன்னார். அவருடைய ஆவல் என்னவென எங்களுக்குத் தெரியாமற் போகவே, அவரை உபசாரம் செய்து, அதன்பின் வளர்ந்துவிட்ட சிக்கலைச் சொல்லி சமாதானம் செய்ய இருந்தோம்.

"முத்தையன் இருக்கு மிடத்தை நீங்கள் யாருக்கும் சொல்லக் கூடாது. அது பெரிய தொல்லையில் கொண்டு விடும்" "அதனால்தான் நானும் வந்தேன்" என்றவர், தாம் கண்ட, கேட்ட அனுபவங்கள் அனைத்தையும், இதற்குமுன் நேயர்கள் படித்த கதையை, அவர் சொல்ல ஆரம்பித்தார். முத்தையன் இருக்கிறான். அவனுக்கு மற்றொரு காதல் இருக்கிறது. அவன் பைத்தியக்கார நிலையில் இருக்கிறான் என்றபோது பாண்டித்துரை கண்ணீர் விட்டார். தன் தந்தை, 'இமைக்குள் விழியைக் காத்துக் கொள்வது போல காத்து ஒரு கல்யாணத்தைச் செய்து விட்டு விலகிக் கொள்' என்று எச்சரித்த வாக்கு நினைவிற்கு வந்தது. தன்னால் அத்தனை துன்பங்களும் அனுபவித்த நண்பன் முத்தையனை எண்ணித் துக்கத்தால் சாய்ந்துவிட்டார்.

"பாண்டித்துரை, உலகம் என்பது இன்பத்தால் மட்டும் ஆன உருண்டையல்ல; அதிலே தீமையின் பூச்சு முலாங்கள் நிறைய இருக்கின்றன. முத்தையன் பிறந்தபோது என்ன நடக்க வேண்டுமென்று எழுதியிருந்ததோ; அது நடந்தே தீரும், வருந்திப் பயன் இல்லை, நடந்த காரியத்தைச் செயிக்கப் பாடுபடுவோம்" என்று ஆறுதல் சொன்னேன். சொன்னாலும் என் உள்ளம் சுண்ணாம்புக் காளவாயாக வெந்து கொண்டிருந்தது; பிறர் முன்னிலையில் நாம் துக்கப்படாமல் நடிப்பதில் ஆறுதல் இருக்கிறது. பிறருக்கும் ஊன்று கோலாக நிற்பது தானே படித்தவர்கள் செய்கை? பெண்பிள்ளைபோல, வந்த துன்பத்தைக் கண்டு நானும் 'கோ' வென்று கதறினால் என்ன ஆகும்?

வாரியார், "நீங்கள் இருவரும் முத்தையனுக்கு நண்பர்கள்! அவனோ எனக்கு நோயாளி. அவ்வாலிபன் மனநிலை பெண்மைக்குள்ள கவர்ச்சிக்குள் அகப்பட்டுள்ளது. ஆனுள்ளம் ஐக்கியமாவதைப் பார்த்தீர்களா? தனக்குச் செண்பகம் என்ற காதலி இருந்தாள்; அவள் பொருட்டு வேட்டைக்கு வந்து வேதனை அடைந்தோம் என்பதை முத்தையன் அறியவில்லையே! மறந்தானே! லட்சுமிக் குட்டியின் அழகு அவன் நரம்பைப் பற்றிக் கொண்டது. அவளும் உருவத்தோடு ஒட்டிய நிழலாக, பழத்தோடு ஊறிய சுவையாக ஒன்றிவிட்டாள். நான் செண்பகத்தைப் பார்த்து வரவேண்டும். முத்தையனுக்கு ஏற்றவர் யார்? என்று முடிவுகட்டிய பின்னரே அவனுக்கு உதவிகள் செய்ய வேண்டும்" என்று எழுந்தார்.

பாண்டித்துரையின் புருவம் உயர்ந்தது; என் மனம் உள்ளூர வேதனை அடைந்தது. வாரியார் எந்த உரிமையுடன் முத்தையனுக்கு யார் உரியவர் என்பதைத் தீர்மானிக்க முயன்றார்? மலையாளத்துப் பெண் லட்சுமிக் குட்டியை அவன் மணந்தால் என்ன? காஸ்மீஸ்வரத்துச் செண்பகத்தை அவன் கைப்பிடித்தால் என்ன? தமக்குச் சம்பந்தமில்லாத ஒரு காரியத்துள் வாரியார் பிரவேசிப்பது எனக்கும் பிடிக்கவில்லை; ஜமீன்தார் பாண்டித்துரைக்கும் மனக்கஷ்டம் தந்தது ஆனாலும் நல்ல தகவல் கொடுத்த ஒருவரிடம், உடனடியாக மாறுபட்ட மனப்போக்கைக் காட்டக்கூடாது என்பதற்காக அவரைச் சற்றுத் தனியாக அனுப்ப எண்ணி, "குளித்து வாருங்கள்; உணவு உண்ணலாம்" என்று அனுப்பி வைத்தோம். அவர் நகர்ந்தார். அவருடைய உள்ளத்துள்ளே இருந்த கேள்வி, அவரை அரித்துக் கொண்டிருந்தது. முத்தையன் யாராவது ஒருவருக்கு மாலையிடும் வகையில், அவன் மனதைத் திருத்திவிட வேண்டும். இரண்டும் கெட்டானாக இரண்டு பெண்களின் உயிர் மன்றாடுவதை வாரியார் விரும்பவில்லை. அதனால், அவர் உள்ளத்தே ஊசலாடிக் கொண்டிருந்த கேள்விக்கு விடை காண்பதற்கு அருவிக் கரைப் பக்கமாக நடக்க ஆரம்பித்தார்.

ஜமீன்தார் வீட்டை ஒருகண் வைத்து. என்ன தகவல் வரும் என்று காத்துக்கிடந்த ரௌடி ராமையாவுக்கு அதிர்ஷ்டம் வந்தது! வந்த புதுநபர் யார்?என்று அறியும் ஆவல் பிறந்தது; அவர் குளிப்பதற்காகவோ, குறிப்பறிவதற்காகவோ வெளியே வந்ததும், "தங்குவதற்கு நல்ல அறை வேணுமா? மீள வெட்டான் பக்கம் நல்ல அறைகள் இருக்குது" என்று பேச்சுக் கொடுத்தான். வாரியாருக்கும் யாராவது பேச்சுத் துணைக்கு வேண்டியதிருந்தது. இருவரும் ஒருவரையொருவர் அறிய முற்படாத நிலையில், பேசிக்கொண்டு போனார்கள்.

"ஏன், தம்பிக்குச் சொந்த ஊர் இதுதானே? இங்கே காஸ்மீஸ்வரம் எவ்வளவு தொலைவில் இருக்கிறது?"

ராமையாவிற்குத் தனக்கு அந்த ஊர்என்று சொல்லப்பயம். அதனால், "எனக்கு இலஞ்சிப் பக்கம். ஐயாவுக்கு எந்த ஊரோ? மலையாளத்துப் பக்கமாய் இருக்க வேண்டும்" என்று நிறுத்தினான். அசல் மலையாள தோற்றத்தை வைத்தே அவ்வாறு சொன்னான் ராமையா. குற்றாலத்துச் சீசனை நம்பி வருகின்ற வெளியூர்காரர்களுக்கு ஒத்தாசை செய்யும் நோக்கோடு, ஒரு சில நபர்கள் தெருக்களிலே வட்டஞ் சுற்றுவார்கள். கார்வசதி, வீட்டு வசதி, விறகு வசதி, இவ்வாறு பிறர் தேவையென்னென்ன என்று அறிந்து, அதற்குரியவாறு, பூர்த்தி செய்து லாபம் பெறும் தொழிலாளிக்குள் ராமையாவையும் ஒருவன் என்று வாரியார் எண்ணிவிட்டார். ராமையாவும், அருகாக் இருக்கும் அரைக்கீரை தைலக் கடைக்கு அழைத்து வந்தான். கடைக்காரன் "என்ன அண்ணே, ஆள் யாரு?" என்று பேச்சை ஆரம்பித்ததும், கண்ணடித்துச் சும்மா இருக்கும்படி எச்சரிக்கை செய்துவிட்டான். வாரியார் இதைக் கவனிக்கவில்லை. சற்றுப் பொறுத்து, வாரியார், "காஸ்மீஸ்வரத்தில் முத்தையன் வீடு, அவன் தாயார், செண்பகம் வீடு, அவள் பெற்றோர், ராமையா என்ற போக்கிரி யார்?" என்றெல்லாம் விசாரணை செய்தார். ராமையாவுக்குக் கோபம்; அந்நிய மனிதன் ஒருவன் தன்னைப் போக்கிரி என்று முடிவு கட்டியதில், கோபம் இருக்கத்தானே செய்யும். ஆனாலும் காரியத்தைச் சாதிக்க எண்ணியவன், வாரியாருக்கு வழிகாட்டுவதாக ஒப்புக்கொண்டு மெதுமெதுவாக வாயைக்கிளறி, தனக்கு தெரிய வேண்டிய விபரங்கள் அனைத்தும் அறிந்துகொண்டான். ராமையாவின் மூளையில் புதிய பிரச்னைகள் பிறந்தன. இனிமேல் முத்தையன் உடல் நிலை சரியானாலும் செண்பகத்தை மறந்துவிடுவான்; செண்பகம் தன்னுடைய சொத்து. ஆகவே, ஆண்டவனே புலி வடிவில்வந்து முத்தையன் தலையில் அறைந்து மூளையைக் கலக்கி, உதவியும் செய்துள்ளார். அதோடு, லட்சுமிக்குட்டி என்ற பெண்ணையும் அவன் மனச் சிறைக்குள் அனுப்பிவிட்டார்; இவ்வளவு விபரமும் சொன்ன வாரியாருக்கு அவன் பவுன் பவுனாகக் குவிப்பதற்குத் துடித்தான். ஒரு பவுன்கூட இல்லாததால், தன் ஆவலை அடக்கிக் கொண்டான்.

"வாரியார் ஐயா! நீங்கள் உற்றார் உறவினர் அல்லாத ஒருவருக்குப் பரிந்து வந்திருக்

கிறீர்கள். அலைந்து பல மைல் வந்ததைப் பார்க்கும் போது, முத்தையன் பெரிய யோகசாலி என்றே தோன்றுகிறது.''

''தம்பி, உலகத்தில் நாம் நமக்காக வாழவில்லை; நம்மைச் சார்ந்த ஒவ்வொருவருக்காகவும் வாழ்கிறோம். துன்பத்தைப் படரவிடாமல் துடைப்பதுதான் அறிவுடைய மனிதன் செயல். முத்தையன் வாழ்க்கை இனி தாக இருக்க வேண்டுமானால், யாராவது ஒரு பெண்ணை அவன் மணக்க வேண்டும். ஒருத்தியை மணந்த பின்னர், மற்றொருத்தியை மணந்திருக்கலாம் என்ற நப்பாசை அவனுக்குத் துளியும் வரக்கூடாது. அதற்காகத்தான் அழகிலும், தொல்லை கொடுக்காத குணத்திலும் சிறந்த பெண்ணை அவனுக்கு முடித்துவிட எண்ணுகிறேன். லட்சுமிக் குட்டியின் அன்பும், அந்தப் பெண்ணிடம் முத்தையன் கொண்டுள்ள பாசமும் ஏட்டுக்குப், எண்ணத்துக்குட் அடங்கா. அவர்கள் இருவரும் பூவும், நாருமாக மணந்து கொள்ளுவதால் யாருக்கும் எவ்வித மான நஷ்டமுமில்லை. செண்பகத்தைக் கண்டு என் மனதைச் சொல்ல வேண்டும். செண்பகம் மறுத்தால், என்ன செய்வது?''

ராமையாவின் உள்ளம் கொதித்தது.

தன் உடைமையாக எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கும் அவனிடமே வாரியார் இவ்வாறு சொல்லும் விதி அவன் முன்னால் வந்திருந்தால் அதனைப் பழப்பூவாக முறித்து பூமிக்குள்ளே குழி தோண்டி கல்லெடுத்து மூடி விடுவான். வாரியார்தேக பலமோ அவனுக்கு எள்ளுமாதிரி! உள்ளங்கைக்குள் வைத்து அவரைக் கசக்கி விடுவான். என்ன துன்பங்கள் வந்தாலும், செண்பகத்தைக் கலியாணம் செய்து, நல்வாழ்வுக்கு வழிகோலிய அவன் உள்ளம், பிறரைத் துன்பம் செய்து, கஷ்டத்தை உடனடியாக விலைக்கு வாங்கிக் கொள்ளாமல் சாதுர்யமாக நடக்கத் திட்டமிட்டது.

அருவிக்கரைக்கு இட்டுக் கொண்டு போகாமல், பேச்சு வாக்கில், வாரியாரை காஸ்மீஸ் வரத்து சாலைக்கே, இழுத்துக் கொண்டு வந்தான்.

தைலதாரியாக, வாரியாரும் அவன் பின்னே வந்துகொண்டு இருந்தார். அவர் எண்ணம் முழுமையும் அருவியில் குளிப்பதில் இல்லாமல் செண்பகத்தைக் காண்பதில் இருந்ததால், ராமையாவின் பேச்சிலே மயங்கிக் கிடந்தார். ராமையாவுக்குத் தயக்கம். செண்பகம் என்ன பேசுவாளோ என்ன செய்வாளோ? என்ற இரண்டும் கெட்டான் நிலை. அவள்தான் கோபத்தில் அருந்ததி ஆயிற்றே? வாரியார் என்ன சொல்லுகிறார் என்று நேரிடையாக விபரம் அறியவும் ஆசை.

இத்தனை எண்ணங்களும் நிறைவேறுவதற்குப் பதிலாக, அப்பொழுது அங்கே வந்த பார்வதி, முத்தையன் தாய், ''ஏண்டா லே, சிங்கப்பூர்லே இருந்து இப்பதான் முத்தயைன் கடுதாசி வந்திச்சு. உன் தம்பி சௌக்கியமாம்!'' என்று உரத்துச் சொன்னாள். ராமையாவுக்குத் தெரியும். பார்வதி ஏமாற்றப் பட்டாள் என்பது. அதனால் ''பெரியம்மா! தம்பி சிங்கப்பூர்லே இருக்கட்டும். நல்லபடியாய் வந்து விடுவான். செண்பகம் நம்ம வீட்டிலே இருக்குதா?'' என்று

கேட்டான். வாரியார் வைத்த கண் வாங்காது, பார்வதியின் கண்ணிலே ஏக்கம் மிதப்பதைப் பார்த்தார். அவள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது தன் ஒரே பிள்ளையைக் காண, என்பதையும் அறிந்தார். முத்தையன் சிங்கப்பூரில் இருப்பதை அவர் காதாரக் கேட்டபோது, அவர் நாவு "சொல்லிவிடு. முத்தையன் லட்சுமிக்குட்டியின் அருகாக இருக்கிருன்" என்று சொல்லத் துடித்தது. பார்வதி தன்னுடைய பசுமாட்டை ஓட்டிக் கொண்டு போய்விட்டாள். வாரியார் "ஏன் தம்பி, இது தான் முத்தையன் அம்மாவா?" என்ருர்

"ஆமாம்"

"அப்படியானல் நீதான் அந்தப் போக்கிரி ராமையாவா?" என்று வாரியார் கொதிப்பெழக் கேட்டார். அவர் உடல் துடித்தது. ஏமாறியதில் அதிர்ச்சி.

"அப்படியே வைத்துக் கொள்ளுங்கள்." சொல்லிய பதிலில் முரட்டுத்தனம் இருந்தது. அவன் புருவமும், கிருதாவும், பார்வையும் அவர் நெஞ்சிலே பயத்தைக் கொடுத்தன. புலிக் குகைக்குள் மாட்டிக் கொண்டு தப்பினலும் தப்பலாம், அவனது இருப்புப் பிடிக்குள் தமது உடம்பு தப்பாது என்பதை அறிந்து அவர் சும்மா இருந்தார்.

"வாரியாரே, நீங்கள் விபரத்தைச் சொல்வதால், செண்பகத்துக்குப் பயன் உண்டு. நெடுந்தொலைவு அதற்காகவே வந்தவர்கள்; விபரம் சொல்லிவிடுங்கள். அவளுக்கு நன்மை வரட்டும்"

வாரியார், பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்ததை எண்ணியபடி, மௌனம் சாதித்துப் பின்னே நடந்தார். தைலம் தேய்த்த அவர் கண்கள் எரிச்சல் தந்தன. இன்னும் குளிக்கவில்லை. உணவு உட்கொள்ளவில்லை யென்ற எண்ணங்கள் அப்பொழுது எழுந்தன. திரும்பி விடலாமா? என்ற எண்ணம்; ஆனலும் வந்தது வீணுகக்கூடாது. செண்பகத்தின் வீட்டுக்குப்போகும் குறுக்கு வழியாக ஓடைக்கரையில் இறங்கி மேட்டுக்கு ஏறினர்கள். வாழைத் தோப்பிலே 'கும்'மென்று வண்டுகள் பாடிக் கொண்டிருந்தன; அகத்திப் பூக்களின் சிறுமணம் வேறு. தம்மை வாழைத் தோப்புக்குள் ராமையா பலியிடப் போகிருனே? என்று வாரியார் பயந்தார். வீடுகள் அருகாகத் தெரிந்ததாலும், பகற்பொழுதாக இருந்தபடியாலும் ராமையா பின்னே போனர்.

பன்னீர் பூக்களுக்குத் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்த பெண்ணைக் கண்டதும் வாரியார் திடுக்கிட்டார். காமனை, மலேயாளத்து லட்சுமிக் குட்டியின் குடிசையில் பார்த்த அவர் கண்கள், அக்காமனை யென்ற கண்களை — அக்கண்கள் தான் எவ்வளவு பெரியவை, காதளவோடிய கண்களை — தம்முன்னே பார்த்தபோது அவர் தயங்கினர். அக்கண்கள் ஆயிரமாயிரம் கதைகள் சொல்லுவது போல இமைத்து இமைத்து விரிந்தன.

"இது தான் செண்பகம். சொல்லுங்கள்"

ராமையாவை முறைத்துப் பார்த்து விட்டு, வாரியாரிடம்

"எங்கே வந்தீர்கள்?" என்று கேட்டாள். அத்தொனி கருங் கல்லில்பட்ட உளியிலிருந்து பிறந்த ஒலியைப்போல 'கணீர்' என்றும் அழுத்தமாகவும் இருந் தது. வாரியார் மெதுமெதுவாகச் சொல்லி வந்தார். முத்தையன் புலிவேட்டைக்குப் போனது அவள் உள்ளத்தைப் புளக முறச் செய்தது; கண்கள் அகல விரிந்தன. 'முத்தையன் புலி யைக் குத்தி வீழ்த்தினன் என்ற சேதி, நெஞ்சிலே இன்பக் குமிழி பிறப்பித்ததும் அதன் பின்னர் அவனிடம் லட்சுமி கொண்ட அன்பும், அந்த அன்பு சிறிது சிறிதாகக் காதலாய் மாறியது. ஐயோ! அவள் க்ண்கள் ஏன் பெரிதாக அழகாக இருந்தன. அத்தனை பெரிய கண்களும் கோபத்தின் இருப்பிடமாக மாறி ற்று; அவள் முகஞ் சிவந்தது. சற்றுமுன் மலரோடு மலராக மென்மையாக இருந்த கரங்கள் முறுக்கேறின.

"போதும் நிறுத்துங்கள்! அந்தலட்சுமிக்குட்டி உங்களுக்கு என்ன உறவு?"

அவள் அந்தத் தோட்ட மெங் கும் இடிபோல பிரதிபலிக்கக் கத்தினள். கண்கள் நெருப்பைக் கக்கின. புடவையை இடுப் பைச் சுற்றி வரிந்து கட்டினள். அவள் செயலும், பார்வையும் வாரியாருக்கு 'சுருக்' கெனத் தைத்தது.

"அவள்...அவள்..." என்று திக்குமுக்காடினர்.

"உமது மகளா?" என்று மீண் டும் அடிப்பட்ட புலி, பெண்புலி போன்று சீறினள்.

"என் மகள் இல்லே." என்று சொல்ல வந்தவர், 'இல்லே' யென்பதைச் சொல்ல இயலாது விழித்தாள். விழுங்கினர்.

"என் காதலர் அவ்வாறு செய்யமாட்டார்! அவர் மீது அபாண்டமாகப் பழிசுமத்த வந்த நீ ஒழிந்து போ"

செண்பகத்தால் எதைப் பொ றுத்துக் கொண்டாலும், முத்தை யன் மீது குறை சொல்வதைப் பொறுத்துக் கொள்ளமுடியாதே. அருகாகக் கிடந்த களைக்கொத் தியை எடுத்து ஓங்கி எறிய முன் நடந்தாள். உதவி செய்ய வந்த வாரியார் உயிருக்குப் பயந்து, ஓடினர்! ராமையாவே ஓடைகரை வழியே வாழைத் தோட்டத்துள் பதுங்கிக் கொண்டான்.

பரிதாபம்!

எண்ணெய் வழியும் முகத்திலே பீதியும் அலறலும் துடிதுடிக்க, வாரியார் ஓட ஆரம்பித்தார். சில மாதங்களுக்கு முன் முத்தையன் எந்த ஆவேசத்தோடு புலியைத் துரத்தி ஓடினனே? அதே வேகத் தில் செண்பகம் ஓடிவந்தாள்.

தெரு குறுக்கிட்டது! கண்ணுக் கெட்டிய பாதையில் கால் கொண்ட மட்டும் வாரியார் ஓடு கிறார்!

செண்பகம் ஓடுகிற வரைத் துரத்தி மேலும் ஓட விடாமல், கார் ஒன்று குறுக்கிடவே, களை கொத்தியை எகிறி எறிந்தாள்.

காரை ஓட்டி வந்த பாண்டித் துரை—கண்ணடிச் சில்லுகளைச் சமாளித்துக் கொண்டு வெளியே வர முயன்றார். சேதி சொன்ன வாரியார் தப்பியதை விட, அடி பட்ட காரும், அடிபட விருந்த வர் பாண்டித்துரை என்பதும் அறிந்த செண்பகம், முகத்தைக் திருப்பிக் 'கோ' வெனக் கதறி னள்

கூட்டம் கூட ஆரம்பித்தது!

(தொடரும்)

மதிப்புரைக்கு புத்தகம் அனுப்புவோர் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்

1. வழி காட்டிய உத்தமர்
2. விடுதலை முழக்கம்!

எழுதியர்: எஸ். ஏ. ரஹீம்.

வெளியீடு: நியூ இந்தியா பப்ளிகேஷன்ஸ், சென்னை-4.

விலை: 75 புதுக் காசுகள்.

இவ்விரு புத்தகங்களை எழுதிய எஸ். ஏ. ரஹீம் அவர்கள், தமிழக மக்களுக்கு புதியவரல்ல. விடுதலைப் போரில் வீறுகொண்டெழுந்து பாரத அன்னையின் விலங்கொடித்த வீரர்களில் குறிப்பிடத் தக்கவர் இவர். வெறும் அரசியல் வாழ்வோடு, தம் கடமையை முடித்துக் கொள்ளாமல், சிறுவர் அறிவுத் துறையிலும் பணி புரிந்து வந்தவர், வருகிறவர். அவர் படைத்துள்ள இவ்விரு புத்தகங்களுமே இதற்குச் சான்று. வழிகாட்டிய உத்தமர் புத்தகம், சாந்த வேந்தன் காந்தி மகாத்மாவின் வாழ்க்கைவரலாற்றுச் சுருக்கம். இந்தச் சிறு நூலில் அந்தப் பெரிய மனிதரின் வரலாற்றைச் சுவை குன்றாது வடித்துத் தந்திருக்கிறார். அதைப் போன்றது தான் ''விடுதலை முழக்கமும்''. இதில் இந்திய விடுதலை வரலாற்றை புள்ளி விவரங்களுடன் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்த விடுதலை முழக்கத்தில் தமிழக முழக்கமே இடம்பெறாதது வருந்தத்தக்கதுதான். ஒருக்கால் அடுத்த தொடர்களில் அவை இடம் பெறும் என்று எண்ணுகிறேன். குழந்தைகள், படித்துப் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிய இனிய தமிழ் நடையில், பக்கத்திற்குப் பக்கம் விளக்கப் படங்களுடன் புத்தகத்தைத் தயாரித்திருப்பது பெரிதும் பாராட்டுதலுக்குரியது. வழிகாட்டிய உத்தமர் என்ற நூலுக்கு அரசாங்கம் 500 ரூபாய் பரிசளித்துக் கௌரவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

'டுப் டுமீல்' ஜேப்படி, கொலை, கொள்ளை போன்ற பயங்கரக் கதைகளைச் சிறுவர் இலக்கியம் என்ற பெயரால் எழுதிக் குவித்து குழந்தை உள்ளங்களை பாழ்படுத்தும் இந்நேரத்தில், நண்பர் ரஹீம் இது போன்ற அறிவு வளர்ச்சி புத்தகங்கள் மிக நேர்த்தியான முறையில் தயாரித்து வெளியிட்டு வருவது குழந்தை இலக்கியத்திற்குச் செய்யும் ஒருபெரும் தொண்டாகும் என்பதை எவரும் மறுக்கமுடியாது. இந்தத் துறையில் திரு ரஹீமுடன் ஒத்துழைத்த சித்திரச்சிற்பி ரெஸாக் அவர்களையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. மிகக் குறைந்த விலையில், மிகச் சிறந்த புத்தகங்களை சீரிய முறையில் தயாரித்து வெளியிட்ட நியூ இந்தியா பிரசுரத்தாரையும் பாராட்டவேண்டும்.

—கன்னி

தி பாலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,384

மேற்கொண்டு நிர்மாணிக்கும் கதிர்கள்: 3,472

❋

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான துணியையும் பொறுத்திருக்கிறது.

எங்கள் ஆலை மிக நேர்த்தியான உயர்ரக நூல்களை விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் & ரங்கசாமிநாயுடு ஸன்ஸ் கம்பெனி

உலகப் பிரசித்திப்பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்

பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

உண்மையில் • உறுதியாக,

குறைந்த செலவில்

உங்கள் வீட்டை கட்ட

இதோ நவீன முறை!



நிரந்தரமானது
இணைக்க சுலபம்
பார்வைக்கு
திருப்தி
கொடுக்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு & ப்ளெயின் ஷீட்டுகள்

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

• ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட் •

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

முகப்பு மொழியும் கதை :

அன்பே! நமக்கு மாத்திரம்



ஆரெஸ்ஸஸ்

"மனோரமா வில்லா" வின் பால்கனி ஓரத்தில் இரு உருவங்கள் நின்றிருந்தன. அவர்கள் பேசவில்லை. ஆனால் அவர்கள் கண்கள் பேசிக் கொண்டிருந்தன. ஒருவரை ஒருவர் விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வார 'அவுட்டோர் ஷூட்டிங்' கிற்குப் பின், அன்றுதான் வீட்டிற்கு வந்திருந்தான் சுந்தர். வந்ததும், நேரே மாடியில்சென்று மனோவைப் பார்க்க விரைந்தான்.

அவள் பால்கனி ஓரத்தில் நின்று வானில் விரைவாக வந்து கொண்டிருந்த சந்திரனைக் கவனித்துக் கொண்டு இருந்தாள். திடீரென்று வந்து அவளைத் திகைக்க வைக்க வேண்டும் என்ற கருத்துடன் 'ஹார்ன்' கூடக் கொடுக்காமல் காரை மெதுவாகக் கொணர்ந்து பின் ஓசைப்படாமல் படிகளேறி வந்திருந்தபடியால், அவன் வருவதை அவள் உணரவில்லை.

'மனோ'

'அத்தான்' என்று ஆதுரத்துடன் திரும்பினாள், அவள். மறுகணம் இருவரும் ஒருவராகி விட்டார்கள்.. நிசப்தம் நிலவியது.

'அத்தான்'

'என்ன மனோ ?'

'ஷூட்டிங் எல்லாம் வெற்றி தானே அத்தான்'

'ஆம்..மனோ..என்' உடம்பும் சுகம் தான்...நீ கேட்பதற்கு முன்பே சொல்லிவிடுகிறேன்...'

அவள் அழகிய கண்கள் சிறிது விரிந்தன. அதரங்களில் மின்னல் புன்னகை ஒன்று நெளிந்தது.

'மனோ...உனக்கு நல்ல பரிசாக ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்..'

'என்ன பரிசு அத்தான் ?'

'நீ தான் சொல்லேன்.. பார்க்கலாம் ?'

'சொல்லிவிடட்டுமா ?'

'தாராளமாக...'

'உலகத்திலே கணவர்கள் வைரக் கம்மல்களை, பட்டுப் புடவைகளைப் பரிசாக மனைவிகளுக்குத் தருவார்கள்...ஆனால் என் அத்தான் புதுப் பாட்டு ஒன்றை எனக்குத் தருவார்.'

'சபாஷ்..மனோ...சரியாகக் கண்டு பிடித்துவிட்டாய்...கேட்கிறாயா கண்ணே !'

'இப்பொழுதா, அத்தான் ? நீங்கள் குளித்து, சாப்பிட்டபின் ஆகட்டும்.'

'உத்திரவு...'

அவள் தோள்களில் சாய்ந்தபடி விரல்கள் அவள் சுருண்ட கூந்தலில் விளையாட, சுந்தர் படிகளில் இறங்கிக் கீழே வந்தான்.

* *

தமிழ் நாட்டில் சுந்தரைத் தெரியாதவர்கள் அதிகம் இல்லை. சுந்தர் 'டைரக்ட்' செய்யும் படங்கள் வெளியாகும் தினங்களை, சினிமா விசிறிகள் திருநாளாகக் கொண்டாடுவார்கள். அவன் படங்களில் பல பொன்விழாவரை ஓடியவை. 'நீரும் நெருப்பும்', என்ற அவன் படம் சர்வ தேசப் புகழ் பெற்றது. இத்தனையும் சேர்ந்த அவன் வாழ்க்கையில் மகிழ்ச்சி தாண்டவமாடக் கேட்கவா வேண்டும் ?

சுந்தருடைய இத்தனை சிறப்பிற்கும் அடிப்படையாக இருந்தது, அவனது கற்பனையும், சங்கீத மேதையும்

தான். சினிமா உலகத்திலே சாதாரணமான பாட்டுகள் இயற்றும் பதவியுடன் தான் சுந்தர் நுழைந்தான்...ஆனல் இரண்டொரு படங்களே, அவன் வெற்றிப் பாதையின் முதற்படிகளாக அமைந்து விட்டன.

தனது ஆசைமனைவியின் அன்பும் அழகும்தான், தன் கற்பனையில் அற்புதமான பாட்டுகளும், மெட்டுக்களும் உற்பத்தியாகக் காரணமாக விளங்கின என்றே சுந்தர் எண்ணினன். எனவே எந்தப் பாட்டையும் முதலில் அவளிடம் பாடிக் காண்பித்துத் திருத்தங்களை ஏற்று, பின்னர் தான் ஸ்டியோவிற்கு அனுப்புவது அவன் வழக்கம்...அன்றும் அதையொட்டியே மனோவிடம் பாட்டைப் பரிசாக சமர்ப்பணம் செய்வதாகச் சொன்னன்.

* *

மணி பத்து அடித்தது. வையத்தைப் போர்த்திருந்த காரிருளை ஓட்டி, வெண்மை வண்ணத்தை அள்ளி அள்ளி வழங்கிக் கொண்டு இருந்தது வான்மதி.

கடற்கரையிலிருந்து காதலர்கள் விரும்பி வரவேற்கும் காற்று, அமைதியாக வீசிக் கொண்டிருந்தது. நேரம் அதிகமாகாவிட்டாலும், போக்குவரத்து தெருவிலே அதிகம் இல்லை...சிந்தையைச் சிலிர்க்க வைக்கும், மோன நிலை பரவ ஆரம்பித்தது...

சுந்தரும் மனோவும் மெல்லப் படிகளில் ஏறி பால்கனியை அடைந்தனர்.

மனோவின் கைகளில் ஒரு வீணை தவழ்ந்து கொண்டு இருந்தது.

'மனோ'

'அத்தான்'

'ஆரம்பிக்கட்டுமா ?'

'ஓ... எஸ்...அத்தான்'

வீணையை அவள் கைகளிலிருந்தும் வாங்கிக் கொண்டான் சுந்தர்... விஞடிகள் கரைந்தன.

மெதுவாக ஓர் அழகான மெட்டின் ஆரம்ப ஒலி, வீணையிலிருந்து சிதறிக் காற்றிலே மிதந்தது...உதடுகளை ஒரு முறை நனைத்துக் கொண்டான் சுந்தர்...

'வான வில்லைப்போலே, வர்ண
ஜாலம் செய்யும் கண்களே!'

சுந்தரின் வாய் இந்த அடியை இசைக்கையில், அவனது வலது கை ஆள்காட்டிவிரலை, மனோவின் கண்களை அளவெடுப்பது போன்று அசைத்தான்.

'போங்கள், அத்தான் ! எப்பொழுதும் குறும்புதான் !'

சுந்தர் மெல்லிய புன்னகை ஒன்றை உதிர்த்தான்.

'வானவில்லைப் போலே-வர்ண
ஜாலம் செய்யும் கண்களே !
வாழ்வினிமை எல்லாம்-
தேங்கி நிற்கும் கண்களே!
கோலமெல்லாம் மேவிநின்ற-
வஞ்சியவள் நெஞ்சினை
ஜாலமொழிபேசிக் காதல்-
தூது சொல்வீர் நீங்களே !'

சுந்தரின் மதுரமான குரலில் இந்த அழகிய சொல் நயம் செறிந்த பாடல், மனோகரமான சூழ் நிலையின் இன்பத்தை அதிகமாக்கியபடி இழைந்தது.

மனோ, தன்னை மறந்து ரசித்தாள். சுந்தரைக் கணவனைகப் பெற்ற பேற்றின் பெருமகிழ்ச்சி அவள் நெஞ்சைக் குடைந்தது .. முகம் நிலவெனப் பொங்கி, உணர்ச்சி அலைகளில் கருவண்டுக் கண்கள் படகென மிதந்தன. உதட்டிலே, உள்ளத்தின் கள்வெறி புன்னகையாகப் பொலிந்து நீந்தியது. இசை ஆக்கிய இன்பச் சூழ்நிலையின் போதையில் சுந்தரின் மடியில் சாய்ந்தாள் மனோ...

வீணையைக் கீழே வைத்துப் பேதையை அணைத்தான் சுந்தர்.

'மனோ, பாட்டு எப்படி ?'

'பரவசமாக்குகிறது...அத்தான்..'

'மனோ.........பாட்டை அமைத்த பொழுது அநுபவித்த ஆனந்தத்தை விட உன் பாராட்டைக் கேட்டபின் கிடைக்கும் மகிழ்ச்சிதான் எனக்குப் பெரிதாகப் படுகிறது...'

'அத்தான்.. நான் ஒன்று கேட்டால் ...'

'முடியாது என்று மொழிய முடியுமா என்னால்.......உம்.......கட்டளையிடுங்கள் தேவி ... அடிமை காத்திருக்கின்றேன்' நாடகபாணியில் பேசினன் சுந்தர்.

'கட்டளையில்லை..வேண்டுகோள். இந்தப் பாட்டை எனக்கு...நமக்கே உரிமையாக்கி விடுங்கள். உலகத்திற்கு அனுப்பாதீர்கள்... அது அடையாத இந்த இன்பம் நமக்கு மாத்திரம் கிடைக்கட்டும்...'

சுந்தர் சிந்தித்தான்.. இந்தப் பாட்டை விலையாக்கினல்,விளைவாக அவன் பெறப்போகும் புகழ்,அவன் நெஞ்சிலே மிதந்தது...ஒரு கணம் தான்.. மீண்டும் காதல் போதை அவனை ஆட்கொண்டு விட்டது.

'யாரை நினைத்து இந்தப் பாட்டை ஆக்கினேனே, அவளுக்கே, என் மனேவுக்கே இது உரிமை...சரி தானே ?'

'என் அத்தானுக்கு நிகர் அவரே தான்' என்று எண்ணினள் மனே. நோபல் பரிசு பெற்றது போன்ற பெருமை அவளுக்கு ஏற்பட்டது.

பிறகு பேச்சு மூச்சில்லை...மனம் நிறைந்த பின், மொழிக் கென்ன வேலை ?

* *

இரவைப் பகலாக்குவது போலப் பிரகாசமாக ஒளியை வெள்ளமாகத் தந்து நின்றன, ஸ்டூடியோ விளக்குகள். 'கலையுலகம் ஸ்டூடியோ' என்ருல் கேட்கவா வேண்டும் ? நாடறிந்த ஸ்டூடியோ ஆயிற்றே ?

அங்குமிங்கும் சிட்டாகப் பறந்து காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர், சிப்பந்திகள்.புதிய படத்திற்கான கதை, வசனம் எல்லாம் தேர்ந்து எடுக்கப்பெற்று, பூஜையும் முடிந்து 10 நாட்கள் ஆகிவிட்டன.

சில பாடல்களை அன்று 'ரிகார்ட்' செய்வதாகத் திட்டம்...டைரக்டரின் அறையிலே சுந்தருடன், முதலாளி செட்டியாரும், கதைவசனகர்த்தாவும் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தனர்.

சிகரெட்டின் புகை காற்றிலே மிதந்த வண்ணமாய் இருந்தது.

'டைரக்டர் ஸார்' என்று மௌனத்தைக் கலைத்தார் செட்டியார்...

'சந்திரிகாவும் ரவியும் சந்திக்கும் இடத்தில் வரும் 'டையலாக்' முடிந்ததும் ஒரு அழகான பாட்டையும் ரிக்கார்ட் செய்து விட்டால் 'மாஸ்' அப்படியே மயங்கி விடும் என்று எண்ணுகிறேன்.'

'பிரமாதமான யோசனை ...அந்தப் பாடலிலே காதல் ரஸம் ததும்ப வேண்டும் ! சந்திரிகாவின் உள்ளம் அப்படியே குளிர்ந்து......உம்......' என்ருர் வசனகர்த்தா.

'அதைத்தான் யோசிக்கிறேன். 'ஹீரோ' பாடும் 'சோலோ' வாக அதை அமைக்க முடிவு செய்திருக்கிறேன்' என்ருன் சுந்தர்.

'சோலோவா? அது இப்பொழுது அவ்வளவாக எடுப்பதில்லையா?'

'உண்மைதான்! ஆனல் புதிய ஒரு 'டர்னிங்' தர எண்ணம். காதலியின் புகழை, அவளெதிரே 'ஹீரோ' பாட அதை உளமாற ரசிக்கும் 'ஹீரோயினின்' முகபாவங்களை பல கோணங்களில் 'குளோஸ் அப் ஷாட்டு'களாகவும் காட்டினல்.' என்றிழுத்தான் சுந்தர்.

'அபாரம்' என்று எதிரொலித்தார் முதலாளி.

'நமது லாவண்யா தேவியும், கிரிதரனும் எப்படி என் பாத்திரங்கள் சந்திரிகாவுடனும் ரவியுடனும் ஒன்றுகிருர்கள் என்பதில் வெற்றி இருக்கிறது' என்று சொன்னர் வசனகர்த்தா.

'பாட்டும் நல்ல பாட்டாக வேண்டுமே ?' என்று வினவினர் முதலாளி.

'என்னிடமே இருக்கிறது.' என்றான் சுந்தர்.

'வானவில்லைப்போலே! வர்ண
ஜாலம் செய்யும் கண்களே !'

அவன் இருதய வெளியில் இந்த அடிகளின் இசை மிதந்தது. தொடர்ந்து மனோவின் சுந்தர வதனமும், சுழலும் கண்களும் தோன்றின. அவளுக்குத் தந்த வாக்குறுதி?

'என்ன யோசனை சுந்தர் ?' என்றபடி சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தார் படாதிபதி.

'என் மனோவிடம் நான் காரணத்தோடு கூறினால் அவள் புரிந்து கொள்வாள் ! எனது புகழ் அவளை மன்னிக்கச் செய்துவிடும்' என்று முடிவு கட்டிவிட்டான் சுந்தர்.

'ஸார், இந்தப் பாட்டைக் கேளுங்கள்.' என்று தொடங்கி மெல்லிய குரலில் இசைத்தான் சுந்தர்.

ஐந்து நிமிடங்கள் கரைந்தன.

'பிரமாதம்! இன்றே 'ட்யூன்' அமைத்து, 'ஆர்க்கெஸ்ட்ரா ஸெட் அப்' செய்து விடலாம்' என்ற தீர்ப்பு முதலாளி அவர்களிடமிருந்து பிறந்தது.

* *

ஆறுமாதங்கள், நமது கதையின் தொடக்கத்திற்குப் பிறகு கழிந்து விட்டன.

ஞாயிற்றுக் கிழமை.. மாலை பத்திரிகைக் காட்சி முடிந்து நிருபர்கள் சென்னையின் சிறந்த சினிமாக் கொட்டகை ஒன்றிலிருந்து வந்து கொண்டு இருந்தனர்..

ஆம்..அன்றுதான் சுந்தர் பாட்டு, இசை அமைப்பு, டைரக்ஷன், மேற்பார்வை ஆகிய பொறுப்புகள் ஏற்றிருந்த 'அமரபிரேமை' படத்தின் 'பிரஸ் ஷோ' விமரிசையாக நடந்தேறியது.

'கண்டிப்பாக வெற்றி பெறும்... புதுமையான பாணி...தைரியமான முயற்சி...சிறந்த டைரக்ஷன்... 'பாக்ஸ் ஆபிஸ் ஹிட்' ஆகும்...' இவை நிருபர்களின் பாராட்டுக்கள்.

தனது படைப்பைப் பிறர் பாராட்டுகையில், கலைஞனுக்கு ஏற்படும் களிப்புக்கு உவமையேது ? சுந்தர் இன்ப வெள்ளத்தில் நீந்தினன். 'பிரஸ் ஷோ' முடிந்ததும் வீட்டிற்கு நேரே காரைச் செலுத்தினன். ஆனல்...அங்கே மனோ இல்லை...அவள் கடிதம் இருந்தது...

'அத்தான்...உங்களுக்குத் தெரியாமலே படம் பார்க்க வந்திருந்தேன்.. எனது பாராட்டுக்கள். என்றாலும், நமது காதலுக்கே தாங்கள் உரிமையாக்கிய அந்தப் பாடலை எப்படித் துணிந்து 'அமரபிரேமையில்' புகுத்தினீர்கள்? எவ்வளவோ எண்ணியும், என்னல் வருத்தப்படாமல் இருக்கமுடியவில்லை... நமது பிரேமையை விட 'அமர பிரேமை' தங்களுக்குப் பெரிதாகி விட்டதே...? போகிறேன்...மனம் அமைதி பெற்றதும் திரும்பி வருகின்றேன்...'

சுந்தர் 'சிலை' யென நின்றான் !

*

மனோ, தன் பிறந்தகமாகிய மதுரை வந்து நான்கு நாட்களாகி விட்டன...டெலிபோனில் 'மனோ அங்கே வந்தாளா?' என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டதுடன் திருப்தியடைந்து விட்டான் சுந்தர்.

தன்னைத்தொடர்ந்து சுந்தர் ஓடி வருவான் என்று எண்ணிய மனோவிற்குப் பெருத்த ஏமாற்றம்.

தனிமையின் கொடுமை வாட்டவே, காரிலே தமுக்கம் பார்க்கை நோக்கி விரைந்தாள். மாலை மஞ்சள் வெய்யில் பார்க்கை மேலும் கவினூட்டிக் கொண்டிருந்தது. நகரில் இருந்து சற்று தூரத்தில் இருந்ததால் கூட்டம் அதிகமில்லை.

மனோ ஒரு பெஞ்சில் தனியாக அமர்ந்தாள். 'ஏன்...இப்படி ஓடி வந்தோம்...நமது வாழ்க்கையே புதிராக இருக்கிறதே...ஊடலில் இது என்ன புதுவகை?': என்று எண்ணிக் கொண்டாள் மனோ.

சிறிது நேரம் கழிந்தது... சற்றுத் தொலைவிலே இருந்து மெல்லிய ஆண் குரல் ஒன்று 'வான வில்லைப் போலே!' என்று பாடத் தொடங்கியது!

திடுக்கிட்டுத் திரும்பினாள் மனோ. அங்கே இரண்டு இளம் காதலர்கள்...தலைவன் பாட்டை இசைக்க தலைவி ரசிக்க...சுற்றுப் புறத்தை மறந்து கற்பனையில் திளைத்துக் கொண்டு இருந்தார்கள்.

பாட்டு முடிந்தது...

'பிரமாதமாகப் பாடினீர்கள்' என்றாள் அந்தப் பெண்..

'என்னைப் பாராட்டாதே...சுந்தருக்குத்தான் அது சேர வேண்டும்... அதிருக்கட்டும். எலிஸா...நான் சொல்வதைக் கேட்டு கோபித்துக் கொள்ளாதே... நிச்சயமாக இந்த சுந்தரின் மனைவி ரொம்ப அழகியாக...'

'ஏன்...அவளைப்பற்றி என்ன இப்பொழுது...'

'ஒன்றுமில்லை...அழகைக் கண்டதும்தான் கவிஞனுள்ளத்தில் கற்பனை பிறக்கும்...அவள் நிரம்பப் பாக்கியசாலி...அவர்கள் காதலுரிமையிலே மலர்ந்த இந்தப் பாடல் நம்போல இன்று ஆயிரமாயிரம் காதலர்கள் இதயங்களில் சிரஞ்சீவித்துவம் பெற்று அவர்கள் காதலையே 'அமரபிரேமை' ஆக்கிவிட்டதே!'

மனோவிற்கு 'ஒருமாதிரியாக' இருந்தது... அது இன்பமா...துன்பமா?

வெளியே நடந்தாள்...சிறிது நேரத்தில் கார் சென்னையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது...

* *

பால்கனி ஓரத்திலே நின்ற சுந்தர் திரும்பினான். நான்கு நாட்களாக 'ஷேவ்' செய்யாமல் இளந்தாடி வளர்ந்திருந்தது.

'கண்ணே'

மறுகணம் இருவரும் ஒருவரானார்கள்.

'மன்னித்து விடுங்கள்...அத்தான்...நமது உரிமையான அந்த இன்ப கீதம் எத்தனை பேருக்கு மகிழ்ச்சி தருகிறது என்று கண்டதும்தான் என் கண் திறந்தது...'

'தேவி...பரமசிவனார் கூட பார்வதி அம்மையாரிடம் தப்பமுடியவில்லையே...ஊடலிலே தோற்று 'வாலடிக் குஞ்சி' சூட்டினாராமே... நானும்...'

'போங்கள் அத்தான்...'

'கலகல' என்ற மனோவின் சிரிப்பு, கடந்த நான்கு நாட்களாக 'மனோரமா வில்லா'வில் மறைந்திருந்த ஒளியையும், உவகையையும் மீண்டும் கொண்டு வந்து விட்டது! ✱

"மல் யுத்தத்தில் பாதி கற்றுக் கொண்டுவிட்டேன் என்கிறாயே! அப்படி என்றால் எதுவரையில்?"

"அடி வாங்கியும் உயிர் பிழைத்திருப்பது வரை!"

ஐயோ ருக்கு! நீயா ராதை?

'நந்தி'

காரியாலயத்தினின்று களைப்புடன்வந்த கண்ணனை, களிப்பூட்டக் காத்திருந்தது ஓர் கடிதம். ஆவலுடன் பிரித்தான்.

242, மேலவீதி,
தஞ்சை.
4—3—58.

அன்புடையீர் !

தங்கள் 'பாலும் பழமும்' என்ற கதை என் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. பால் நழுவிப் பழத்தில்....தவறு....தவறு.....பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுந்து விட்டால் எப்படியிருக்கும்! அதைப்போல் இருக்கிறது. உங்கள் அடுத்த கதையை ஆவலுடன் படிக்கக் காத்திருக்கிறேன்.

தங்கள்,
ராதை.

படித்த கண்ணன் மனம் துள்ளி எழுந்தது. அது பால், பழம், ராதை இவற்றையே சுற்றி வந்தது. எதிரே இருந்த பேனா 'பதில் எழுதேன்' என்றது. சுற்றிக் கொண்டிருந்த மின்சார விசிறி வெள்ளைக் காகிதமொன்றை முன்னே தள்ளி விட்டது. பேனாவை எடுத்தான். எழுதத் தொடங்கினான்.

34, பூங்கா ரோடு,
தில்லி-5.
6—3—58.

அன்புடையீர் !

கடிதம் கண்டேன். பெரு மகிழ்ச்சி. கண்ணனின் கதையை ரசித்தெழுத ராதை தான் முன்வர வேண்டுமா என்று எண்ணிய போது என் உள்ளம்......புரியவில்லையா ? உங்களைப் பற்றி விபரமில்லாது கடிதம் எழுதிவிட்ட உங்களுக்கு ஓர் தண்டனை. அதாவது அடுத்துவரும் என் 'காதலும் கடிதமும்' என்ற கதையைப் படிக்க வேண்டும். உடனே பதில் போட வேண்டும். இது தந்தி; கடிதமல்ல.

உங்கள்,
கண்ணன்.

கை காகிதத்தை மடித்தது. யந்திரம் போல் அதைக் கவரில் இட்டான். ஐந்தே விநாடியில் வீதியில் நிற்கும் சிவப்புப் பெட்டி அதை விழுங்கி நின்றது.

தபால் பறந்து செல்லக் கேட்கவா வேண்டும்? குதிரை ஜெயிக்கப் பணம் கட்டிவிட்டு, இதயத்தைப் பிடித்துக் கொண்டு குதிரையின் ஓட்டத்தைக் கண்டு கொண்டிருக்கும் ஆட்டக்காரன் போல் காத்திருந்தான் கண்ணன்.

இதயம் துடிக்கத் தபாலை நீட்டியவனிடமிருந்து தபாலை வாங்கினான். மனைவி ருக்மணி அங்கு இல்லாமல் பிறந்தகம் போனதற்காக ஒரு முறை அவளை வாழ்நாளிலே வாயார வாழ்த்தினான்.

பிரித்தான். அதில் :

242, மேலவீதி,
தஞ்சை.
8—3—58.

அன்பரே !

தங்கள் கடிதம் கண்டேன். அதுமட்டுமா, கதையையும் படித்தேன். 'காதலும் கடிதமும்' கதையில் தாங்கள் எழுதியதுபோல் நம் வாழ்க்கையிலும் நாம்......! என்ன விழிக்கிறீர்.. அன்பரே... காண நேரில் வரலாமா ? காலந் தாழ்த்தாமல் கடிதம் எழுதுங்கள். இனி 'அன்பே' என்றழையுங்களேன் !...என்ன இவள் கூச்சமெல்லாம் இல்லாமல் எழுதுகிறாளே, என்று பார்க்கிறீர்களா ?

என்னை நேரில் பார்த்தால், புரிந்து கொள்வீர்கள்.

தங்கள்,
ராதை.

மேனி சிலிர்த்தது. கடிதத்தில் கற்பனை ராதை மென்னகை பூத்த தால்.. புல்லரித்தது.. புன்னகை பூத்ததால்.. கை விரைந்தது.. உள்ளத்தைக் கொட்டி எழுத வேண்டாமா?

342, பூங்காரோடு,
தில்லி-5.
10--3—58.

அன்பே!

உன் அன்பு மடல் கண்டேன். காணாத உன் மீது கடிதம் மூலம்.... கொண்டு விட்டேன்... உன்னைக் காணக் கண்கள் காத்திருக்கின்றன...கடிதே வா! என் கண்ணே! உன் வரவை உடனே எழுதேன்... எங்கே, எப்போது...... உனக்காகக் காத்திருக்க வேண்டும்..... கட்டளையிடு... காத்திருக்கச் சித்தம்.

அன்பன்,
கண்ணன்.

கடிதம் விமானத் தபாலில் விரைந்து சென்றது. காத்திருந்தான் பதிலுக்கு.

கற்பனையில் எழுந்தராதையை காகிதத்தில் அலுவலகத்தில்கிறுக்கிக் கொண்டிருந்தான். 'கிறுக்' என்ற மேனேஜர் குறும்பாகச் சிரித்து விட்டுச் சென்றார்.

'மணமான உனக்குஇது சரியா?' என்றது மனச்சாட்சி...சமாதானம் கூறியது மாற்றுள்ளம். இதற்கு முற்றுப் புள்ளி வைக்க வந்தது ஓர் தந்தி.

தஞ்சை.

கிளம்பி விட்டேன்...காணலாம். தங்கள் இல்லத்தில்,...

எவன் கையெழுத்தோ! தந்தியைப் பெற்றவனின் கிறுக்கெழுத்து!

காத்திருந்தான் நாட்கள் இரண்டாய்...வீட்டை நோக்கி வரும் பெண்களையெல்லாம் விழித்து விழித்துப் பார்ப்பான்...தாண்டிச் சென்றவுடன் கண்ணைத் துடைத்துக் கொள்வான்.

அதோ! அன்ன நடைபோட்டு வந்து நிற்கும் மெல்லியாள் யார்?

'ஆ, ருக்மணி நீயா? நீ எப்போ வந்தே! கடிதமே போடலியே! ஏன்?'

'ஏன் போடவில்லை. தந்தியல்லவா அடித்தேன்!,

'ஆ, தந்தியடித்தது நீயா?'

'ஆமாம். ராதையென்ற போர்வையில் மறைந்து கொண்டு!'

'ஆ' தலை கிறுகிறுத்தது.

'தெரிஞ்சு போச்சே, உங்கஅழகு! கதை கதையாகத்தான் கதைக்கிறீர்களே. உங்கள் உள்ளத்தைச் சோதிக்கத் தான் ராதையாய் மாறினேன். என் அண்ணா புதுவீட்டில் மாறி மேலவீதி வந்திருப்பதுகூட மறந்து போச்சோ, 'ராதை' யென்ற பெயர் கண்டவுடன்.' இறைந்தாள்.

அதைக் கேட்க அவன் சுய நினைவோடு இருந்தால்தானே! அவன் தான் எப்போதோ மயங்கி விழுந்து விட்டானே!

Telegrams : 'PIONEER' Coimbatore.

Telephones : 160, 361.

THE COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

PEELAMEDU :: COIMBATORE.

FOUNDER PARTNERS:

Messrs. P. S. G. & SONS.

No. of Spindles 27,226

Manufacturing 60's, 80's and 100's Combed Yarn

Staff Employed : 41.

Labourers Employed 934.

—:o:—

'B' Mills, Perianaickenpalayam

No. of Ring Spindles ... 22,000

Manufacturing 20's to 40's Yarn.

Staff Employed : 6.

Labourers Employed : 320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN:

L.T.M., L.M.E., & L.E.E.,

மலைப்பருந்தின் பாட்டு

(மாக்சிம் கார்க்கி)

மலைகளுக்கிடையே உயரத்தில் ஒரு பாம்பு வளைந்து நெளிந்து சென்றது. கடலுக்கு அருகாமையில் மூடுபனி மிகுந்து தெளிவற்றுத் தோன்றிய ஒரு மலைப் பிளவினுள் அது புகுந்து கொண்டது.

மேலே வானத்தில் கதிரவன் ஒளிக்கிரணங்களை வாரி இறைத்துக் கொண்டிருந்தான். மலைகளின் கதகதப்பான சுவாசம் வானத்திலே உயர்ந்து சென்றது. கீழே கடல் அலைகள் பாறைகள் மீது மோதி ஓசை செய்தன.

அதி விரைவாக இந்த மலைப் பிளவுக்கிடையே இருளையும் மூடுபனியையும் ஊடுறுவிக் கொண்டு ஒரு ஆறு ஓடியது. கடலை நோக்கிப் பாய்ந்தோடிய அந்த ஆறு வழியிற் கிடந்த கற்களை உருட்டித் தள்ளி விட்டுச் சென்றது.

நுரை கொப்பளிக்க பொங்கி வழிந்து பாறையைத் துளைத்துக் கொண்டு ஆவேசக் கூச்சலிட்டபடி கடலுக்குள் பாய்ந்தது.

திடீரென வானத்திலிருந்து மலைப்பருந்து ஒன்று நெஞ்சிலே காயமுற்று இறக்கைகளில் இரத்தம் வழிய கீழே சரிந்து அந்தப் பாம்பு சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்திருந்த மலைப் பிளவினுள் விழுந்தது.

தரையிலே மோதியதும் பருந்து மயிர்க்கூச்செறியும்படி ஒரு முறை அலறிவிட்டு அயர்ந்து போய் சிறகுகளை அடித்துக் கொண்டு படுத்துக் கிடந்தது.

பருந்தைக் கண்டு கதி கலங்கிப் போன பாம்பு தூர விலகி ஓடியது. ஆனால் விரைவில் அது பருந்தின் பரிதாப நிலையைக் கண்டு கொண்டது. படுகாயமுற்று விழுந்த பருந்து அது, இரண்டொரு நிமிடங்களில் இறந்து விடும் என்பது அதற்கு விளங்கியது.

ஆகவே காயமுற்ற பறவையிடம் திரும்பிச் சென்று, "இப்படியா நீ அகால மரணமடைய வேண்டும்?" என்று மெள்ள அதன் காதுக்குள் கூறி நையாண்டி செய்தது.

"ஆம், நான் அகால மரணமடைய வேண்டியது தான்" என்று சொல்லி பருந்து பெருமூச்சு விட்டது. "ஆனால் நான் பெரு வாழ்வு வாழ்ந்தவன்! இன்பத்தைச் சுவைத்தவன்! வீரப் போர் புரிந்திருக்கிறேன்! விண் முகட்டிலே உயரப் பறந்திருக்கிறேன்! தரையிலே ஊர்ந்து செல்லும் பிராணி நீ! என்னைப் போல் வானத்தின் காட்சியைக் கண்டுகளிக்க இயலாது, உன்னால்!"

"வானத்தின் காட்சியா? அது என்ன? வானத்திலே ஒன்றுமில்லையே! வானத்தில் நான் ஊர்ந்து செல்ல முடியுமா? ஈரமைப்புடைய கதகதப்பான இந்த மலைப் பிளவுக்கு நிகராகுமா உன் வானம்"

சுதந்திர வேட்கையுடைய மலைப்பருந்தைப் பார்த்து பாம்பு இவ்வாறு கூறியது. பருந்தின் வீராப்புப் பேச்சை எண்ணி மனத்துக்குள் ஏளனமாகச் சிரித்துக் கொண்டது.

'விண்ணிலே பறந்தாலென்ன? அல்லது மண்ணிலே ஊர்ந்தாலென்ன? இறுதி முடிவு ஒன்றுதானே? எல்லோரும் கீழே தரையில் புதைந்து பிடி மண்ணாக வேண்டியது தானே?" என்று எண்ணியது பாம்பு.

திடுதிப்பென்று பருந்து தன் தலையை உயர்த்தி கரிய அந்த மலைப்பிளவை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தது.

பாறையின் வெடிப்புகளிலிருந்து தண்ணீர் கசிந்தது. மலைப் பிளவிலே தேங்கி நின்ற காற்றில் மரணத்தின், நசிவின் நாற்றம் வீசியது.

பெரு முயற்சி செய்து மலைப் பருந்து தன் துயரையும் வேட்கையையும் வெளியிட்டுப் புலம்பியது :

"ஆகா, விண்ணிலே நான் உயரப் பறக்க வேண்டும்! ஒரு முறையேனும் திரும்பவும் மேலே சென்றுக வேண்டும்! ....பகைவனைப் பிடித்து விடுவேன் ....அதன் தலையை என் நெஞ்சோடு வைத்து அழுத்தி நசுக்கி விடுவேன் .... என் இரத்தத்திலே மூழ்கி அது மூச்சடைத்து சாகும்படிச் செய்வேன் .... ஆகா, போராட்டத்தின் ஆனந்தமே ஆனந்தம்!"

இதைக் கேட்டதும் பாம்பு எண்ணியது: 'மலைப் பருந்து இப்படி நெஞ்சு பொறுக்காது புலம்புகிறதே! வானத்திலே பறந்தபடி வாழ்வது உண்மையாகவே அற்புதமாகத் தான் இருக்க வேண்டும்!'

சுதந்திர வேட்கை மிகுந்த மலைப் பருந்திடம் அது சொல்லிற்று: "மலை விளிம்பிற்குச் சென்று மேலே தாவு. உன் இறக்கைகள் இன்னமும் பல மிழந்து விடவில்லை; அவை உன்னை மேலே தூக்கி சென்றுலும் செல்லலாம். திரும்பவும் நீ வானத்திலே பறக்க முடியும்."

மலைப் பருந்தின் உடல் ஒரு முறை சிலிர்த்துக் குலுங்கியது. வீர முழக்கமிட்டு விட்டு சகதியிலே வழுக்கி விடாதபடி மெள்ள அது உடலை இழுத்துக் கொண்டு மலை விளிம்பிற்கு வந்து சேர்ந்தது.

அங்கு வந்ததும் இறக்கைகளை விரியப் பிரித்துக் கொண்டு மூச்சை உள்ளே இழுத்தது. பிறகு கண்களில் ஒளி பளிச்சிட வானத்திலே பாய்ந்தது.

இறக்கைகள் பிய்ந்து இறகுகள் சிதறியோட கல் விழுவதைப்போல அதிவேகமாக மலைப் பருந்து கீழே விழுந்தது.

கடல் அலை ஒன்று அதைத் தாங்கி இரத்தத்தை அலம்பி விட்டு நுரையால் அதன் உடலைப் போர்த்தி நடுக்கடலுக்குத் தூக்கிச் சென்றது.

மலைச் சரிவின்மீது மோதிய கடல் அலைகளின் ஓசை துயர மூட்டியது. மலைப் பருந்து மறைந்து விட்டது—கடலின் எல்லையற்ற பரப்பில் அதை எங்குமே காண முடியவில்லை.

பருந்தின் மரணத்தையும் வானத்தின் மீது அதற்கிருந்த கட்டுக்கடங்காத மோகத்தையும் பற்றி எண்ணியபடி பாம்பு அந்த மலைப் பிளவிலே சுருட்டி மடக்கி கொண்டு படுத்துக் கிடந்தது.

அமைதியில்லாத மனத்துக்கு ஆறுதலளிக்கவல்ல கனவுகளின் பிறப்பிடமான வான வெளியை அது உற்று நோக்கியது.

"பரிதாபத்திற்குரிய பருந்து, பாவம். முடிவின்றி விரிந்து செல்லும் இந்த வெற்றிடத்தின் மேல் ஏன் அதற்கு இத்தனை மோகம்? மேலே உயர்ந்து செல்ல வேண்டுமென்று வெறி பிடித்துப்போய் இந்தப் பறவைகள் மற்ற உயிர்களின் மன அமைதியைக் குலைப்பது ஏன்? விண்ணிலே அப்படி என்ன இருக்கிறது? நொடிப் பொழுதேனும் நான் ஒரு முறை மேலே பறந்தேனாகில் இவை யாவற்

றையும் தெரிந்து கொண்டு வந்து விடலாமே.''

இவ்வாறு கூறி பாம்பு மேலும் கெட்டியாக சுருட்டிக் கொண்டு வானத்திலே பாய்ந்து வெயிலில் கரிய கோடு போல பளிச்சிட்டது.

ஆனால் கீழே தரையில் ஊர்ந்து செல்லப் பிறந்தவர்கள் விண்ணிலே பறக்கக் கற்றுக் கொண்டுவிட முடியாது. பாறைகள் மீது தொப்பென்று விழுந்தது பாம்பு — ஆனால் அது இறந்துவிடவில்லை. அதற்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"சீச்சீ! வானத்திலே பறப்பதின் ஆனந்தம் இவ்வளவு தானே? தொப்பென்று விழுந்து அடிபடுவதும் ஒரு ஆனந்தமா? முட்டாள் பறவைகள்! தரையின் சுகம் அறியாதவை! கீழே இன்பமாக வாழமுடியாத அவை, விண்ணிலே உயர்ந்து சென்று நெஞ்சைக் கலக்கும் வான வெளிகளிலே வாழலாமென நினைக்கின்றன. ஆனால் வானத்திலே வெற்றிடத்தைத் தவிர வேறு என்ன இருக்கிறது? எங்கும் ஒளி மலிந்து எதேஷ்டமாயுள்ளது. ஆனால் உடலுக்கு ஊட்டமளிக்கக் கூடியது விண்ணிலே ஒன்றுமில்லையே! பிறகு ஏன் இந்த அகந்தை? ஏன் இந்தப் பூரிப்பு? தரைமீது ஏன் இந்த வெறுப்பு? தமது பைத்தியக்கார ஆசையை, ஒழுங்காய் வாழ இயலாத தமது கையாலாகாத்தனத்தை உலகத்தார் கண்ணில் படாமல் மறைப்பதற்காகத்தானே? அசட்டுப் பறவைகள்! இனி உங்கள் பேச்சைக் கேட்டு நான் ஏமாந்துவிடமாட்டேன். உண்மையை நான் தெரிந்து கொண்டு விட்டேன். வானத்தைப் பார்த்துவிட்டேன். மேலே ஏறி அதை ஆராய்ந்திருக்கிறேன். வானத்திலிருந்து கீழே விழுந்தும் பார்த்துவிட்டேன். உயிரிழக்காது தப்பித்துக்கொண்டேன். எனக்கு என் மீதுள்ள நம்பிக்கை இதனால் என்றுமில்லாதபடி அதிகரித்திருக்கிறது. மண்ணுலகை நேசிக்காதவர்கள் பகற் கனவுகள் கண்டு கனவுலகிலே வாழட்டும். நான் உண்மையைத் தெரிந்து கொண்டு விட்டேன். பறவைகளின் சவாலைக் கேட்டு இனி நான் மயங்க மாட்டேன். மண்ணுலகில் பிறந்தவன் நான். மண்ணிலேயே வாழ்வேன்.''

இவ்வாறு கூறி பெருமிதத்தால் உள்ளம் விம்மித்திளைக்க ஒரு கல்லின்மீது பாம்பு தன் உடலை வளைத்துச் சுற்றிக்கொண்டது.

கண்களைப் பறிக்கும் ஒளியுடன் பிரகாசித்தது கடல். கரைமீது ஆவேசமாக மோதின அலைகள்.

கடல் அலைகளின் கர்ஜனைக்கிடையே மலைப்பருந்தின் கீதம் முழங்கியது. பாறைகள் அதிர்ந்து ஆடின, கடலின் தாக்குதலால். வானமே குலுங்கியது, கீதத்தின் முழக்கத்தால்:

"உள்ளத் துணிவின் ஆவேசத்தை மெச்சி கீதம் பாடுகிறோம்!

"வாழ்க்கையின் ஞானமெல்லாம் இந்த உள்ளத் துணிவின் ஆவேசத்தில்தான் அடங்கியுள்ளது. நெஞ்சுரம் படைத்த பருந்தே! பகைவனை எதிர்த்துப் போரிட்டு நீ இரத்தம் சிந்தியுள்ளாய். ஆனால் இந்த இரத்தத் துளிகள் வாழ்வின் இருளிலே தீப்பொறிகள்போல் மின்னி வீர நெஞ்சுகளிலே ஒளி பரப்பி சுதந்திர தாகத்தை உண்டாக்கும் காலம் விரைவில் வருவது திண்ணம்!

"இன்னுயிரையே தியாகம் புரிந்து விட்டாய். என்றும் நீ வீரர்களின் கீதங்களிலே நிலைத்து வாழ்வாய்! சுதந்திரத்திற்கும், ஒளிக்கும் போராடுமாறு வீர அறை கூவல் விடுப்பாய் நீ

"உள்ளத் துணிவின் ஆவேசத்தை மெச்சி கீதம் பாடுகிறோம்!'' ('சோவியத் நாடு')

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262

த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

குமாரதேவன் காதல்

கே. ரகுபதி.

"இந்தக் காலத்தில் இந்த மாதிரி எவராலேனும் கட்டமுடியுமா? தூரத்திலிருந்து பார்க்கும்போது, சாதாரணமாகத் தெரிந்ததே! உள்ளே எவ்வளவு பெரிதாக இருக்கிறது பார்த்தீர்களா?"

—வழிகாட்டி சொல்லிக் கொண்டே போனர்.

துரைசிங்கம் சொன்னர். "வந்தது தான் வந்தோம். முழுதும் ஏறிப் பார்த்து விடுவோமே?"

எனக்கு என்னவோ பயமாக இருந்தது. என்றாலும் நண்பருக்கு எதிரில் பயந்தாங் கொள்ளி என காட்டிக் கொள்ள விரும்பவில்லை. "சரி" என்றேன்.

வழிகாட்டி ஒவ்வொரு படியாக கையில் விளக்குடன் ஏறிச் செல்ல, நாங்களும் பின்தொடர்ந் தோம்.

ஒவ்வொரு அங்கணமும் விசால மாக இருந்தது. படிகள் நல்ல கருங் கல் படிகள்தான். சுவரில் கை வைக்க பயமாக இருந்தது, பாம்பு தேள்கள் இருக்குமோ என்று.

நாங்கள் பார்க்கச் சென்றது, கும்ப கோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவில். அதன் பிரதான கோபுரத் தின் உட்புறமாகச் சென்று மேலே ஏறிக் கொண்டிருக்கிறோம் இப் போது. கோவில் முழுதும் சுற்றி னதே காலை வலிக்கிறது. அவ்வ ளவு பெரியகோவிலின் பிரதான கோபுரமும் பெரிதாக உயரமாகத் தான் இருக்கிறது.

நல்ல பகலான போதிலும் உட்பக் கங்களில் கனத்த இருள் பரவியிருந் தது. ஒவ்வொரு அங்கணத்தினு டைய முகப்பு மாடங்கள் வழியே சிறிதளவு வெளிச்சம் வந்தபோதி லும், அந்த விசாலமான இடத் துக்கு அது போதுமானதாக இல்லை. ஆனல் உயரே போகப் போக காற்று ஆளையே தூக்கிக் கொண்டு போய் விடும் போல அடித்தது. வௌவால்களும், துரிஞ்சல்களும் முகத்தில் வந்து இடிப்பது போல சுற்றிச் சுற்றிப் பறந்தன. எங்கும் ஏதோ ஒருவித துர்நாற்றம். அதோடு ஒரே மண்ணும், தூசியுமாக இருந்தது. அடிக்கடி நடமாட்டத்தில் இல்லாத பகுதியல்லவா? தவிர தினசரி எல்லா இடங்களையும் பெருக்கித் தள்ளி சுத்தமாக வைப் பது என்பது சாமான்யமான காரி யமா?

கடைசி கட்டத்தை அடைந்தோம். மிகக் குறுகலான இடம்.

"இப்போது பாருங்கள், கண் ணுக்கெட்டிய தூரம் வரை! எல் லாம் தெரியும்! அதோ தஞ்சைப் பெரியகோவில்! இந்தப் பக்கம் பாருங்கள், கொள்ளிடம் தெரி கிறது!"

நம் கண்ணுக்கென்ன இருபத் தைந்து மைல் தூரத்தில் உள்ளது தெரியுமா என்ன? அவ்வளவு சக்தி ஏது? இருந்தாலும், "ஆமாம் ஆமாம்" என தலையாட்டினேம்.

"ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முன் இந்த மரப் பலகைத் தடுப்பு களோ, இரும்புக் கிராதிகளோ கிடையாது. முழுவதுமே திறந்து கிடந்தது. மேலே வந்து ஒருவன் நின்று கீழே பார்த்தாலே, பீதியி ஞலே இறந்துவிடுவான். அவ் வளவு பயமாக இருக்கும். படிகள் மட்டுமே உண்டு. யாருமே மேலே ஏறிவருவதும் இல்லை. அப்படி யிருக்க, இதிலேயே ஒருவன் வாசம் செய்து உயிரையும் விட்டான் என் ருல் —"

வழிகாட்டி இழுத்தார்.

நானும் துரைசிங்கமும் "என்ன, என்ன? இதிலேயே ஒருவன் வாழ்ந்தானா? எப்போது?" என்று கேட்டோம் ஏக காலத்தில், வெகு ஆவலாக.

வழிகாட்டி எங்களுடைய ஆவலைப் பயன் படுத்திக் கொண்டார். நிதானமாக ஒருமுறை பொடியை உறிஞ்சினார். ஏதோ சொல்ல ஆரம்பிப்பவர் போல எங்கள் ஆவல் ததும்பும் முகத்தை உற்று நோக்குவதும், வாயை மூடிவிடுவதுமாக கொஞ்ச நேரம் 'கண்ணாமூச்சி' ஆடினார்.

துரைசிங்கத்திற்குப் பொறுக்க முடியாத கோபம். "அட! கதையைச் சொல்லித் தொலையுமய்யா!" என்று ஒரு ரூபாய் நாணயத்தை அவர்கையில் வைத்து அழுத்தினார். வழிகாட்டி சொல்ல ஆரம்பித்தார்.

2

சுற்றேறக்குறைய அறுபது வருடங்கள் ஆகியிருக்கலாம். வெள்ளைக்காரன் அரசாங்கம், அட்டகாசம் செய்து கொண்டு இந்திய ரத்தத்தை உறிஞ்சி வந்த காலம்.

கும்பகோணமே அல்லோல கல்லோலப்பட்டது. குமாரதேவன், குமாரதேவன் என்ற பெயர் அடிபடாத இடமே இல்லை. துஷ்டர்களை அழிக்கிறான்; ஏழை எளியவர்களை ஆதரிக்கிறான்; பணக்காரர்களை கொள்ளையடிக்கிறான்; ஏழைகளுக்கு தக்க சமயங்களில் உதவி செய்கிறான்; எந்த நிமிடம், எந்த இடத்துக்கு,எப்படி வருகிறான் என எவராலுமே சொல்ல முடியவில்லை.

அவனுடைய இருப்பிடம் எது என்பதையும் எவராலும் கண்டு பிடிக்க முடியவுமில்லை.

அனுபவப்பட்டவர்கள் தங்களுக்கு அவன் எப்படி உதவி செய்தான் என்பதை பலரிடமும் சொல்லி நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். பணத்தைப் பறிகொடுத்த பணக்காரர்களும் 'இரும்புப் பெட்டி உடைக்கப் படாமலே பணம் எப்படி பறிபோயிற்று?' என்பது விளங்காமல், அவனுடைய சாமர்த்தியமான திருட்டு வேலையைப் பாராட்டிப் பேசினார்கள்.

ஆனால் எவருமே அவனைக் கெட்டவன் எனச் சொல்லவில்லை,பணத்தையும் நகைகளையும் பறிகொடுத்த பணக்காரர்களைத் தவிர! பெரிய மனிதர்களெல்லாம் விழிப்படைந்தார்கள். அவனுடைய சோஷலிஸக் கொள்கை தங்களுக்கு அபாயத்தையே விளைவிக்கும்எனக்கருதி முன்எச்சரிக்கை நடவடிக்கைகளெல்லாம் எடுத்துக் கொண்டார்கள்.

ஜில்லா கலெக்டருக்கு மனு எழுதிப் போட்டார்கள். ஊரில் போலீஸ் பந்தோபஸ்துகள் அதிகம் செய்யப்பட்டன. இரவு ஒன்பது மணிக்கு மேல் யாரும் வீதியில் நடமாடக் கூடாது என ஊரடங்குச் சட்டம் போடப்பட்டது. ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்டு குடந்தை நகரிலேயே முகாம் போட்டுவிட்டார்.

அவனை உயிருடனேயாவது, பிணமாகவாவது பிடித்துக் கொடுப்போருக்கு, ஆயிரம் ரூபாய் இனாம் எனத் தண்டோரா போடப்பட்டது.

ஆனால் —

அவனை யாராலும் பிடிக்க முடியவில்லை!

அதோடு மட்டுமல்ல; பந்தோபஸ்து அதிகமான பிறகு தான் திருட்டுகளும் அதிகமாயின.

ஒருவேளை போலீஸே அவனுக்கு உடந்தையோ என்று கூட, பறிகொடுத்தவர்கள் சந்தேகப்பட்டார்கள்.

போலீஸின் பேரிலும் வஞ்சனையில்லை! ஊரைச் சல்லடை போட்டு சலித்துத்தான் வந்தார்கள். பணத்துக்கு ஆசைப்பட்டு சந்தேகப்படுபவர்களை எல்லாம் சிலர் கொண்டு வந்தார்கள். போலீஸார் திருப்தியுடன் அவர்களைச் சிறையில் அடைப்பார்கள். ஆனால் அன்றிரவே, ஒரு

பெரிய பிரமுகர் வீட்டில் குமார தேவன் விஜயம் செய்திருப்பான்! காலையில் தகவல் கிடைத்ததும் போலிக் குமாரதேவன் விடுதலை செய்யப்படுவான். மீண்டும் 'தேடு படலம்' நடக்கும்.

உண்மையாகக் குமாரதேவன் வாசம் செய்த இடம் எது?என்பதை கற்பனையேனும் செய்து பார்த்திருக்க முடிந்திருந்தால், அவன் எப்போதோ பிடிபட்டிருக்க மாட்டானா?

3

இவ்வளவு அமளி, துமளிக்கும் காரணமான குமாரதேவன், ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமிகோவில் கோபுரத்தின் உச்சியில் கடைசி கட்டத்தில் உட்கார்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தான்.

அதுதான் அவனுடைய இருப்பிடம்!

கோவில்காரர்கள் கோபுரத்தை அந்தக் காலத்தில் லட்சியம் செய்தது கிடையாது. ஏறிச் செல்வதற்கு வகையான வழி உண்டா? என்பதே எவருக்கும் தெரியாது. எனவே குமாரதேவன் தன்னுடைய வாசஸ்தலமாக அதைத் தேர்ந்தெடுத்து இருப்பதை யார் அறியமுடியும்?

துண்டை விரித்துப் போட்டு, நிம்மதியாகப் படுத்திருந்தான் அவன். பகலெல்லாம் அப்படியே கிடப்பது அவன் வழக்கம். இரவு தானே அவன் உத்தியோகம் பார்க்கும் நேரம்?

நல்ல ஆஜானுபாகு என அவனைத் தான் சொல்லலாம். ஆறடி உயரமிருப்பான். கருப்பு தான் என்றாலும், அவன் மேனியிலே ஒரு அலாதி மினுமினுப்பு. பெண்கள் பார்த்தால் கண்டிப்பாய் மையல் கொண்டே தீருவார்கள் என்று சொல்லக் கூடிய சாமுத்திரிகா லட்சணங்கள் அமையப் பெற்றவன். திரண்ட புஜங்களும், பரந்தமார்பும் நீளமான கை கால்களும், அழகிய முகமும், முகத்தை அழகு செய்த மீசையும் அவனை யாரையும் அடக்கி ஆளக்கூடிய திறமை படைத்தவனாகக் கருதச் செய்தன.

எந்த வேடமும் அவனுக்குப் பொருந்தும். பகலில் பல இடங்களையும் சுற்றிப்பார்க்க விரும்பினால் குடுகுடுப்பாண்டி, குருட்டுப் பிச்சைக்காரன், செண்ட் வியாபாரி இம்மாதிரிப் பலவிதமான வேடங்களில் செல்வான். எவரும் அவனைத் தெரிந்து கொள்ளமுடியாது.

இரவில் முகமூடியணிந்து, கட்டங்கள் போட்ட கருப்பு சட்டையும் முழு சராயும் அணிந்து புறப்பட்டானே யானால் ஒருவரும் அவனைப் புரிந்து கொள்ள இயலாது.

நிம்மதியாகப் படுத்துக் கொண்டிருக்கிறான் என்று சொன்னேன். பார்த்தால் அப்படி இருந்ததே தவிர உண்மையில்—

அவன் தான் திருடனாயிற்றே. எந்த நிமிடமும் போலீஸ் பயம் இருக்குமே என்கிறீர்களா?

அதுதான் இல்லை!

அவன் உள்ளத்தை வேதனைப் படுத்திக் கொண்டிருந்தது போலீஸார் பிடித்து விடுவார்களே, சிறை செல்ல வேண்டி வருமே என்ற பயம் காரணம் அல்ல!

காதல், ஐயா, காதல்!

ஊரைக் கொள்ளை யடித்தவனின் உள்ளத்தையே கொள்ளையடித்து விட்டாள் ஒரு கள்ளி!

ஆம்; குமாரதேவன் காதல் வயப்பட்டு விட்டான். கிட்டத்தட்ட முப்பது வயதாகப் போகிறது அவனுக்கு. இதுவரை கொள்ளை, களவு முதலியவற்றிலேயே சென்று வந்த அவன் கவனத்தைக் கவர்ந்து, எவருக்கும் அஞ்சாதவனை, எவரைப் பற்றியும் கடுகளவேனும் சிந்திக்காதவனை, சதா தனக்காகவே, தன்னை அடைவதற்காகவே, நினைத்து உருகும்படி செய்து விட்டவள் தான், **தங்கமணி**!

ஆம், அவள் ஒரு நாடக நடிகை. சாகஸமாக நடிப்பதில் கைதேர்ந்தவள். அவள் விழி வெட்டுக்கும் நடன லாவண்யத்துக்கும், உள்ளத்தைப் பறிகொடுத்து தினமும் அவளுடைய நாடகங்களைக் கண்டு களித்தவர் எவ்வளவோ பேர்!

'கோவலன் நாடகத்தில் மாதவி அவள்தான்! காதல் சொட்டப் பார்ப்பாள்! கனிவாகப் பேசுவாள்! ரொம்பவும் இயற்கையாக நடிப்பாள் சோக கட்டங்களின் சிகரம் அவள் தான். பார்ப்போர் கண்களில் நீர் வருவிக்கும் திறமை அவளுக்கு உண்டு; ஹாஸ்யமாகப் பேசி, சிடுமூஞ்சிகளைக் கூட சிரிக்க வைத்து விடும் ஆற்றலும் உண்டு!

அப்படிப்பட்ட தங்கமணி—நாடக மூலம் நாடறிய புகழ் பெற்ற நாட்டியக்காரி— கோடீஸ்வரரெல்லாம் அவள் காலடியில் தவம் கிடக்க முயன்றவர்களையெல்லாம் தட்டிக்கழித்தவள்— பகலில் வெளியே வரப் பயப்படும் ஒரு திருடனை, எந்த நிமிடமும் பிடிபடப் போகிறவனைக்கண்டு காதல் கொண்டாள். அவனுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டு எங்கு வேண்டுமானாலும் புறப்படவும் தயாராகி விட்டாள்.

யாரையுமே ஏமாற்றிப் பணம் பறிக்கும் வித்தை கற்ற அவள் அவனிடம் மட்டும் படிதாண்டா பத்தினியை விட ஒருபடிமேலாக நடந்து கொண்டாள்.

x x x x

ஒரு நாள் இரவு மணி மூன்றுக்கு மேல் இருக்கலாம். அன்றைய நாடகம் முடிந்து வீடு திரும்பி தன் படுக்கையில் வந்து விழுந்தாள் தங்கமணி.

"தினசரி இதே பிழைப்பாக இருக்கிறதே? எல்லோருடைய சந்தோஷத்திற்காகவும் நான் ஆடிப்பாடி உடலை வருத்திக் கொள்ள வேண்டியதிருக்கிறதே? எலலாப் பெண்களுக்கும் கணவன் என்றும் குடும்பம் என்றும் வாழ்க்கையில் சந்தோஷம் கிடைக்கிறதே எனக்கு மட்டும் எதுவுமே கிடையாதா? என் வாழ்க்கையே வெறும் நடிப்புத்தானா? இதில் உண்மைக்கே இடமில்லையா? எல்லோரும் இந்த



177694

உடலைத்தான் விரும்புகிறார்களே தவிர, இந்த அழியப்போகிற உடலுக்காக பணத்தை அள்ளிக் கொட்ட தயாராக முன் வருகிறார்களே தவிர, உள்ளன்போடு என்னை நேசிக்க யாருமே இல்லையே இவ்வுலகில்''

சிந்தனை வசப்பட்டிருந்தவள் 'தொப்' பென்ற சப்தம் கேட்டு கண்ணை விழித்து பக்கத்திலிருந்த அரிக்கேன் லாந்தரைப் பெரிதாக்கினாள்.

அந்த வெளிச்சத்தில்—

எதிரில் முகமூடி அணிந்த ஒரு உருவம்! — "உஸ்...சப்தம் போட்டாயோ, கொன்று விடுவேன்! உன் நகைகளை எல்லாம் கழட்டிக் கொடு" என்று குரலைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு பேசியது அவ்வுருவம்.

'கலகல'வென்று நகைத்தாள் தங்கமணி. "ஓகோ ... சிரித்து சப்தம் போட்டு ஆட்களை அழைத்து என்னைப் பிடிக்க நினைக்கிறாயா?" எனக் கூறி அவளருகில் நெருங்கி தன் முரட்டுக் கையால் அவள் வாயைப் பொத்தியது உருவம்.

பொத்திய கையை அன்பாகத் தடவி விட்டாள் தங்கமணி. குமாரதேவன் தன் வாழ்நாளிலேயே முதல் தடவையாக பெண்ணினத்தின் அன்பான வருடலைக் கண்டான். அவன் உடல் சிலிர்த்தது.

திருட வந்த வெறி மறைந்து திகைத்து நின்றான்.

"ஐயா, நீங்கள் யார்?"

அவளை அப்படியே விழுங்கி விடுவது போலப் பார்த்துக் கிறங்கின குமாரதேவன், "நானா? நான் தான் குமாரதேவன்" என்றான்.

தங்கமணி தோள்களை குலுக்கி விட்டுக் கொண்டாள்.

"ஓகோ? ஊரே நடுங்கும் குமாரதேவன் என்ற கொள்ளைக்காரன் நீர்தானா? எல்லோரையும் போல சாதாரண மனிதராகத்தானே இருக்கிறீர்கள்?"

"ஏன், திருடன் என்றால் கொம்பு முளைத்திருக்கும் என்ற எண்ணமோ உனக்கு?"

மறுபடியும் 'கலகல'வென்று நகைத்தாள், தங்கமணி. இந்தச் சிரிப்பை எங்கோ கேட்டிருக்கிறோமே, என திகைத்தான் அவன்.

"பெண்ணே, நீ யார்?"

"என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு? நான் தான் தங்கமணி. நாடக நடிகை. என்னைத் தெரிய உங்களுக்கு ஏது சந்தர்ப்பம்? நீங்கள் தான் நாடகம் நடக்கும் இரவு நேரங்களில் திருடப்...!"

ஏதோ சொல்லத் தகாததை சொல்லி விட்டவள் போல உதட்டைக் கடித்துக் கொண்டாள் அவள்.

"சொல்லு பெண்ணே, சொல்லு. ஏன் திருடனானேன் என்றிருக்கிறது எனக்கு. நல்லவனாக இருந்தால் உன்னுடைய நாடகங்களை, தைரியமாக உட்கார்ந்து பார்த்து மகிழ முடியும் அல்லவா? திருட்டுத்தனமாக எங்கோ ஒரு மூலையில் நின்று கொஞ்சநேரம் பார்த்து விட்டு போய் விடுவேன் நான். உன் வீடு என்று தெரியாமல் திருடவந்து விட்டேன். என்னை மன்னித்துக்கொள்."

திரும்பிச் செல்ல முயன்றான் அவன்.

அவனை அப்படியே பிடித்து தன் கட்டிலில் உட்கார வைத்தாள் அவள். மெய்மறந்து போய் அவளை இறுகப் பற்றி அணைத்தான் அவன்.

அவன் பரந்த மார்பில் தன் முகத்தைப் புதைத்தபடி, 'உங்களைப் போன்ற ஒரு தீரரைத்தான் நான் விரும்புகிறேன்'' என்றாள்.

அவள் தலையை அன்பாக வருடிக் கொண்டே, "நான் திருடனாயிற்றே, தங்கம்? என்னோடு எப்படி நீ வாழ முடியும்? எந்த நிமிடமும் நான் பிடிபட்டு விடுவேன்" என்றான்.

[illegible] அவன் வாயைப் பொத்தினாள், "மறுபடி அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் ஒருநாளும் பிடிபட மாட்டீர்கள்" என்றாள்.

''சரி, நேரமாகிறது. நான் வருகிறேன்'' என்று புறப்பட்டான் குமாரதேவன்.

''மறந்து விடமாட்டீர்களே, அடிக்கடி வரவேண்டும்.'' என்று பிரிய மனமில்லாமலேயே அவனுக்கு விடை கொடுத்தாள் தங்கமணி.

அதன் பிறகு குமாரதேவனின் வாழ்விலே ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. அதுகாறும் 'யாருக்காக திருடுகிறோம்; எதற்காக திருடுகிறோம்; ஏன் திருட வேண்டும்' என்ற குறிக்கோள் எதுவும் இல்லாமலேயே திருடனாக வாழ்ந்துவந்தான் அவன்.

இப்போது—

தனக்காக ஒருத்தி உள்ளன்போடு காத்திருக்கிறாள். அவளை மகிழ்விப்பதற்காகத்தான் திருடுகிறோம் என்ற எண்ணங்கள் அவனைப் புதிய பலம் பெறச் செய்தது.

எந்தப் பெரிய பணக்காரர் வீட்டில் புதுமையான நகைகளைக் கண்டாலும், கொண்டு வந்து தங்கமணியின் காலடியிலே போடுவான்.

தங்கமணி பயப்படுவாள், அவைகளை அணிய. அவனே அவைகளை கட்டாயப்படுத்தி அணியச் செய்து அவளை அழகு பார்ப்பான். அவளும் ஆட்டமும் பாட்டமுமாய் இரவில் அவனை ஆனந்தத்தில் ஆழ்த்துவாள்.

தங்கமணியை பூரணமாக நம்பினான், குமாரதேவன். தன் இருப்பிடத்தைக் கூட அவளிடம் தெரிவித்திருந்தான் என்றால் வேறு எவ்விதமாக அவனுடைய நம்பிக்கையை தெரிவிக்க முடியும்?

அவளை விட்டுப் பிரிந்திருக்க அவனுக்கு மிகவும் கஷ்டமாகி விட்டது. அவளுக்கும் அப்படித்தான். தனிமை அவளுக்கு ரொம்பவும் வெறுத்துப் போய்விட்டது.

எனவே—

அவன் இருப்பிடம் நாடிவரத் தொடங்கி விட்டாள் தங்கமணி!

ரகசிய வழியை அவளுக்கு காண்பித்து கோபுர உச்சிக்கு அழைத்துச் சென்றான் குமாரதேவன். அன்றிலிருந்து விடியற்காலம் அவனுடைய இருப்பிடத்துக்கு வரும் தங்கமணி பகலெல்லாம் அங்கே கழித்துவிட்டு மாலை மங்கியபின் நாடகக்காரர்கள் வீட்டிற்கு சென்று விடுவது வழக்கமாகிவிட்டது.

முதலில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் ஏற்படவில்லை.

வழக்கமாக நடந்து வந்த நாடகங்களுக்குப் பதிலாக புதிய கதையை பயிற்சி செய்து வைக்க ஆரம்பித்தார் நாடக முதலாளி.

தங்கமணி பாடு திண்டாட்டமாகி விட்டது.

பகலில் நாடக ஒத்திகைக்காக வீட்டிலேயே இருக்க வேண்டியதாயிற்று. விபரத்தை குமாரதேவனுக்குத் தெரியப்படுத்தவும் வழியில்லை. மூன்று நாட்கள் அவனைப் பார்க்கப் போகவே முடியவில்லை.

நான்காம் நாள்—

விடியற் காலையில் நாடக வீட்டில் எல்லோரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த வேளையில் தங்கமணி புறப்பட்டாள். வேகமாக சென்று கோவிலை அடைந்தாள் திரும்பிக்கூடப் பார்க்காமல்.

திரும்பிமட்டும் பார்த்திருந்தாளேயானால், தன்னை ஒரு உருவம் பின் தொடர்வது அவளுக்குப் புலனாகி இருந்திருக்கும். எச்சரிக்கையாகவும் இருந்திருக்கலாம். கதையும் வேறு விதமாக மாறியிருந்திருக்கலாம்.

ஆனால் —

விதி என ஒன்று இருக்கிறதே! அதன் விருப்பத்திற்கு மாறாக எவரேனும் தன்வழி நடக்க முடியுமா?

பின் தொடர்ந்தவன் **ராமதாஸ்**!

ஆம்; தங்கமணியுடன் கதாநாயகனாக நாடகங்களில் நடிப்பவன் அவன். நெடுங்காலமாக அவள் மீது அவனுக்கு ஒரு கண். அவளிடம் தனிமையில் அசட்டுத்தனமாய் நடந்து கொண்டு அவமானப்பட்டவன். காதல் கட்டங்களில் உணர்ச்சியுடன் மேலே சாய்ந்தவன், நிஜ

வாழ்வில் நாலடி தூரத்தில் நின்றால் கூட நெருப்பாக இருந்தாள்.

எனவே, எப்போதும் அவளுடைய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தத் தொடங்கினான், வேறு யாரையேனும் அவள் காதலிக்கிறாளோ என்று.

அம்மாதிரி யாரையும் காதலிப்பதாக அவன் 'துப்பறியும்' கண்களுக்கு இதுவரை எதுவும் புலப்படவில்லை.

அப்படியிருக்க —

இந்த இருட்டு வேளையில், இவள் எங்கே போகிறாள்? வேகமாகப் பின் தொடர்ந்த போதிலும் அவள் செல்லும் மான் வேகத்தை அவனால் பின்பற்ற முடியமால் ஓடினான்.

சாரங்கபாணி கோவில் வந்ததும் அவள் உள்ளே நுழைந்தது தெரிந்தது. ராமதாஸும் வேகமாக சென்று கோவிலுக்குள் சென்றான். கடைசிவரை சென்று கூடப் பார்த்து விட்டான். அவனுடைய பரபரப்பையும் யாரையோ தேடுவதையும் கண்டு உஷத்கால பூஜைக்கு வந்திருந்த பட்டர்கள் கூட "என்ன, என்ன" என வினவினர். எவருக்கும் எதுவும் பதில் சொல்லாமல் திரும்பி ஓடினான் ராமதாஸ்.

எங்கே போயிருப்பாள்?

மாயமாய் மறைந்து விட்டாளா?

பாவம்! அவனுக்கு, ரகசிய வழியாக கோபுரத்தின் உச்சிக்குச் சென்று ஆசைக் காதலன் குமாரதேவனுடன் அளவளாவுகிறாள் தங்கமணி என்பது எப்படித் தெரிய முடியும்?

4

ராமதாஸ் வீடு திரும்பினான். பொழுது பலபல வென்று விடிந்திருந்தது, சகா நடிகர்களெல்லாம் காலை நாடக ஒத்திகைக்காக தயாராக காத்திருந்தனர்.

முதலாளியின் முன் வந்து நின்ற ராமதாஸ் கோவிலுக்குள் சென்ற தங்கமணி மாயமாகிவிட்டதை விவரித்தான்.

"முட்டாள்" என்றார் முதலாளி அத்தனையும் கேட்டுவிட்டு. "ஒரு பெண் எங்கே போயிருப்பாள் என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இது மாதிரி எவ்வளவு காலமாக நடக்கிறது என்றாவது தெரியுமா?"

அனைவரும் குனிந்ததலை நிமிரவே இல்லை—ராமதாஸ் உள்பட.

அன்றிரவு புதுநாடகம் ஆரம்ப தினம். அதுவும் ராமதாஸ்-தங்கமணி ஜோடி என்றதும் காதல் காட்சிகளை ரஸிப்பதற்காகவே ஏராளமான கூட்டம் கூடியிருந்தது. அதற் கேற்றார் போல ஆரம்ப கட்டமே பெரிதும் களைகட்டி விட்டது.

கதாநாயகி தோட்டத்தில் ஓடி விளையாடுகிறாள் தோழிகளுடன். தோழிகள் விளையாட்டாக அவள் கண்ணைத் துணியால் கட்டி விடுகிறார்கள். சுற்றிச்சுற்றி வந்து 'என்னைப்பிடி, என்னைப்பிடி' என பாய்ச்சல் காட்டுகிறார்கள். இந்த சமயத்தில் அந்த வழியேகதாநாயகன் வருகின்றான். அவனைத் தன் தோழிகளில் ஒருத்தி என எண்ணி கட்டிப்பிடிக்கிறாள் கதாநாயகி.

"ஆகா, என்ன அருமை. என்ன அருமை"

"தத்ரூபமான நடிப்பையா"

"அதில் சந்தேகமென்ன? நிஜ வாழ்விலும் காதலர்கள் தானும்"

"அப்படியில்லாவிட்டால் இவ்வளவு சுபாவமாக கட்டிப்பிடிப்பார்களா?"

"முதலாளிக்குத் தெரிந்தவர் தான். அவரே சொன்னாரே, இந்த ஜோடி சிக்கிரம் விவாகம் செய்து கொள்ளப் போகிறது என்று"

ஜனங்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். முதல் வகுப்பில் இரண்டாவது வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு தாடிக்காரரின் முகபாவத்தை மட்டும் எவரேனும் கவனித்திருந்தால் இத்தனை பேச்சுகளும்

அவருக்கு நாராசமாய் இருந்தது என்பதை உணர்ந்திருக்கலாம்.

அவரால் பொறுக்க முடியவில்லை. எழுந்திருந்து வெளியே சென்றார்.

யாரடா இது, இப்பேற்பட்ட அருமையான நாடகத்தைக் காணக் கொடுத்து வைக்காமல் எழுந்து செல்லும் அப்பாவி என பல ஜோடிக் கண்கள் அவரையே ஏளனமாக நோக்கின.

ஆனால் அவர் எதையும் லட்சியம் செய்யாமல் வேகமாக வெளியேறினார்.

நாடகம் முடிந்தது.

ராமதாஸும் தங்கமணியும் ரசிகப் பெருமக்களின் அமோகமான பாராட்டுதல்களைப் பெற்றனர்.

வீட்டுக்கு வந்ததும்—

“தங்கமணி! பார்த்தாயா நமக்கு வந்த புகழை? தலைமை வகித்தவர் சொன்னது போல நிஜவாழ்விலும் நாம்...”

“வாயை மூடு. உன்னை நான் ஒரு நாளும் விரும்பமாட்டேன்” என்று பேச்சை இடையிலேயே வெட்டினாள் அரிதாரத்தைக் கலைத்துக் கொண்டிருந்த தங்கமணி.

ராமதாஸ் விடவில்லை. “ம். பார்க்கலாம். ஆண் துணையில்லாமல் பெண்வாழ முடியாது. தெரியுமல்லவா? எவ்வளவு காலம் நீ இப்படி இருக்க முடியும். என்றாவது ஒருவனை மணந்துதானே ஆகவேண்டும்”

“எல்லாம் எனக்குத் தெரியும். எனக்கு முன்பே மணமாகிவிட்டது”

ராமதாஸ் பெரிதாகச் சிரித்தான். “ஓகோ கோ! எவன் உனக்கு திருட்டுத் தாலி கட்டினான்? ஒரு வேளை ஊரே பயப்படுகிறதே, அந்த குமாரதேவனோ?”

தங்கமணியின் கண்கள் ஆச்சர்யத்தால் அகல விரிந்ததை ராமதாஸ் கவனித்தான். அவன் ஏதோ யதார்த்தமாக சொல்லப் போக தங்கமணியின் முகம் மாறுதல் அடைவதைக் கண்டு ஏதோ விஷயம் இருக்கிறது என உணர்ந்தான்.

“ஆமாம். அவரேதான் என் கணவர்”

“கணவர்! திருட்டுப்பயல் அவன், என்றைக்காகிலும் ஒரு நாள் பிடிபடப் போகிறவன். ‘பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்’ என்பது உனக்குத் தெரியாதா? அவனையா காதலிக்கிறாய்?”

தங்கமணியின் உடல் கோபத்தால் ஆடியது. முகம் சிவந்தது. உணர்ச்சி வசப்பட்டு ‘இன்னது பேசுகிறோம், என்று அறியாமல் ஆவேசம் வந்ததுபோலப் பேசினாள்!

“சாதாரணத் திருடனல்ல அவர். நல்லவருக்கு நல்லவர்; பொல்லாதவருக்குப் பொல்லாதவர். எந்த வெள்ளைக்கார துரை வந்தால் கூட அவரைப் பிடிக்க முடியாது தெரியுமா? பல திருடர்கள் ஒரு நாள் அகப்பட்டு விடலாம். ஆனால் இவர் யாருமே கனவு கூட கண்டிருக்க முடியாத இடத்திலல்லவா வாசம் செய்கிறார்? ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவில் பிரதான கோபுரத்தின் உச்சியில் வாசம் செய்யும் அவரை எந்தப் போலீஸ் புலி கண்டு பிடித்துப் பிடிக்க முடியும்?”

ராமதாஸின் முகம் ஒரு கணம் பிரகாசமடைந்தது. மறு கணம் “ஓகோ, அப்படியா சேதி?” என்று முணுமுணுத்து விட்டு முதலாளியின் அறையை நோக்கி ஓடினான்.

தன் கட்டிலில் வந்து விழுந்த பிறகே தங்கமணிக்கு நிதானம் வந்தது.

உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

“அடாடா! ஆவேசத்தில் வார்த்தைகளைக் கொட்டிவிட்டோமே! இந்தப் பயல் ராமதாஸ் போக்கிரியாயிற்றே? ஊரில் வேறு குமாரதேவனை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனாம் என்று தண்டோரா போடுகிறார்களே, ஒருவேளை, இவன்போய் ஏதாவது......”

இந்த எண்ணம் அவளைத் துள்ளி எழச் செய்தது. நாமே அவரைக் காட்டிக் கொடுத்து விட்டோம் என்ற எண்ணம் அவள் மனதைக் குடைந்தது. சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு கோவிலை நோக்கி நடந்தாள்.

5

"பசப்புக்காரி! யாரிடம் உன் நாடகமெல்லாம்? எட்டி நில்"

தங்கமணியின் கண்களில் நீர் ததும்பியது. "நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? உங்கள் பொன்னான மனதைக் கலைத்தது யார்?"

குமாரதேவன் உறுமினான்.

"உம். ஒருவரும் எனக்குப் புத்தி சொல்லத் தேவையில்லை. நானே நேரில் பார்த்தேன். நாடகம் பார்க்கிறவர்கள் பேசின உண்மைகளை யெல்லாம் காது கொடுத்தும் கேட்டேன். என்ன இருந்தாலும் நாடகக்காரிதானே? உன் புத்தி உன்னை விட்டு எப்படிப் போகும்? பொன்னும் மணியும் உன் காலடியில் கொண்டு வந்து குவித்தேனே. எனக்கு நீ காட்டும் நன்றியா இது? ஆஹாஹா. என்ன உணர்ச்சியுடன் அவனை அப்படிக் கட்டியணைத்தாய்?"

தங்கமணி திடுக்கிட்டாள். "ஐயையோ? நீங்கள் இன்று நாடகம் பார்க்க வந்திருந்தீர்களா?"

"வந்தேன். வந்து உன் உண்மை சுயரூபத்தைக் கண்டேன். நடிகன் ராமதாஸுக்கும் உனக்கும் திருமணம் நடக்கப் போகிறது என்ற சுபச் செய்தியையும் கேட்டேன். இதைக் காட்டிலும் வேறென்ன வேண்டும்?"

தங்கமணி அவன் கால்களை பிடித்துக் கொண்டு கதறினாள்.

"ஐயையோ! பெண்புத்திதான் பின் புத்தி என்பார்களே. நீங்களும் ஆராய்ந்து பாராமல் முடிவுகட்டி விட்டீர்களே! நான் தான் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டு உங்களை தப்பிப் போகச் சொல்ல வேண்டும் என்று ஓடோடி வந்தால், நீங்கள் வேறு ஏதோ சந்தர்ப்ப சூழ்நிலையை பெரிதுபடுத்தி தீராப்பழியை என் மீது சுமத்துகிறீர்களே! என்னை நம்புங்கள். நம்பமாட்டீர்களா? போனது போகட்டும். உடனே இங்கிருந்து தப்பிப் போங்கள்"

குமாரதேவன் எரிமலையானான். நெருப்புக் குழம்பென வார்த்தைகளை கக்கினான்.

"அடப்பாவி! உன்னை நல்லவள் என எண்ணி விட்டேனே, நச்சரவம் ஆகிவிட்டாயே? என்னை எவருமே பிடிக்க முடியாத இடத்தில் வந்து வாழ்ந்தவனை-ஒரு நொடியில் காட்டிக் கொடுத்து விட்டாயே, துரோகி!"

"ஐயோ! நான் துரோகிதான்! நீங்கள் அதிக நேரம் பேசிக் கொண்டு நிற்காதீர்களேன். தப்பிப் போய்விடுங்களேன்."

"ஓகோ! என்னை ஊரைவிட்டு ஓடச்செய்து விட்டு நீ கண்டவனுடன் கொம்மாளம் போடலாம் என்ற எண்ணமோ? ஒரு நாளும் அது நடவாது. நீ பெண்ணாக வந்த பேய்! நீ இனியும் உலகில் வாழக் கூடாது, ஒழிந்துபோ"

கால்களை உதறினான் குமாரதேவன்.

உச்சிப்படியிலிருந்து நழுவி விழுந்தாள் தங்கமணி, 'ஐயோ' என்ற அலறலுடன்!

கீழே பலத்த ஆரவாரம்! போலீஸ் படையே திரண்டு வந்திருந்தது.

முன்னணியில் ராமதாஸும், நாடக முதலாளியும் வெற்றி வீரர்களாய் நின்றனர்.

நெடுநாள் திருடன் குமாரதேவன் பிடிபடப் போகும் செய்தி ஊரெங்கும் பரவி சன்னதி தெரு முழுதும் ஏகக்கூட்டம்.

'தொப்' பென்று கோவில் நிலைப் படியில் வந்து விழுந்த உருவத்தை

நோக்கிப் பாய்ந்து ஓடினர் போலீஸார்.

ஆம்; தங்கமணியின் உடல்தான் அது!

உடனே போலீஸார் பரபரப்படைந்து சுற்றுமுற்றும் சோதித்து ரகசிய வழியைக் கண்டு பிடித்து படியேறி விரைந்தனர் மேலே. இது காறும் கோபுரத்தையே கவனியாமல் விட்டிருந்த கோவில் நிர்வாகிகளும் மேலே விரைந்தனர், அவர்களுடன்!

கடைசி கட்டத்தை அடைந்த போது—

குமாரதேவனைக் கண்டனர் அனைவரும்!

இத்தனை காலமாக துஷ்ட நிக்கிரஹ சிஷ்ட பரிபாலனம் செய்து வந்த உத்தமனைக் கண்டனர்!

ஆனால்—

எவருமே அவனை ஒன்றும் கேட்க முடியவில்லை! ஆம்; கோபுர கலசத்தில் ஒரு கயிற்றைக்கட்டி அதிலிருந்து தன் கழுத்தில் சுருக்கிட்டு தூக்கிலே தொங்கிச் சொண்டிருந்தான் குமாரதேவன்; அவன் ஆவியும் எப்போதோ பிரிந்து விட்டிருந்தது!

x x x x

கதையை முடித்தார் வழிகாட்டி.

"இந்தச் சம்பவத்துக்குப் பின்னரே இவ்வளவு பராமரிப்புகளும் இந்த கோபுரத்துக்கு. ஆனால் இன்னமும் குமாரதேவன், தங்கமணி ஆவிகள் இங்கே வாழ்ந்து வருவதாக ஒரு வதந்தி உண்டு"

"சரி! இதில் நிஜம் எவ்வளவு? பொய் எவ்வளவு?" என்றார் துரைசிங்கம்.

வழிகாட்டியின் முகத்தில் அசடு வழிந்தது.

நான் அதை கவனியாதவன் போல, "எப்படி இருந்தால் என்ன மிஸ்டர் துரை, ஏதோ நல்ல கதையாக, கோர்வையாக சொன்னதற்காக அவரைப் பாராட்டலாம்" என்றேன். O

ஸ்ரீ காளீஸ்வரி லித்தோ ஒர்க்ஸ்

தபால் பெட்டி எண் 42,

சிவகாசி.

அச்சுத் தொழில் வளர்ச்சிக்கு ஓர் அத்தாட்சி எங்கள் ஸ்தாபனம்!

ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்.

★

Phone: 713 Tel. ANANDJOTHI

சிற்றுண்டிகளுக்குச்சிறந்த இடம்.

ஜோதி ஆனந்த பவான்

காபி ஓட்டல் & போர்டிங் ஹவுஸ்

கீழமாசி வீதி, மதுரை.

N.B.—ஜோதி ஆனந்தா காபி ஒர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.

★



தயாரிப்பாளர் :

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை

பெரம்பூர், சென்னை.

வியாபாரவிஷயமாக விசாரிக்குமிடம் :

தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை-5.

AT
YOUR
SERVICE

Grams : CORONATION

Phone : 54

THE CORONATION LITHO WORKS

DHARMAVILLA BUILDINGS

POST BOX NO. 2, SIVAKASI. (S. I.)

PIONEERS IN FINE ART LITHO & OFFSET PRINTING. CONTACT FOR PRINTING LABELS, CALANDERS, ADVERTISEMENT POSTERS etc. FOR ALL TRADES.

Distributors for: **HOOGHLY INK Co, Private, Ltd.**

கு. ப. சேது அம்மாள்

அத்தியாயம் 17.

சிந்தனை

விசேஷ நிகழ்ச்சிகளுக்கு சற்றும் இடமின்றியே, ஆறு மாதப் பொழுது போன பின்பு, ஒரு மாலை நேரம்.

ஆடி மாதத்துக் கருமேகக் கூட்டங்கள் வான்வெளியில், ஊர்ந்து செல்வதைப் பார்த்தவாறு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த ஐயர், பொழுது போக்குக்காக திண்ணையிலமர்ந்திருந்த கமலத்தினிடம், "அக்கா, நாளைக்கு விடியற்காலம் நாலே காலுக்கெல்லாம் எழுப்பிவிடு" என்றார்.

"விதை தெளிக்கும் முகூர்த்தம் எத்தனை நாழிக்கு?"

"ஐந்து மணிக்கு மேல் ஆறு மணிக்குள்ளாக" என்றார் ஐயர்.

"இந்தத் தடவை நம்ம துரையை விதை தூவச்சொல்லு, சிவா; அவன் கைராசியைப் பார்க்கலாம் எப்படியென்று?" என்று சொன்னாள் கமலம்.

அந்த சமயத்தில் உழவு மாடுகளைக் கட்டும் தொழுவைப் பூட்டிக்கொண்டு, சாவியை விரலில் மாட்டிச் சுழற்றியபடி வாசற்படியேறி வந்த துரை, "நீ சொன்னாலும், சொல்லாவிட்டாலும் நான் தான் இந்தத் தடவை சகலமும் பார்த்துக் கொள்ளப் போகிறேன். கண்டு முதலுக்குக்கூட அப்பா வரவேண்டாம். அத்தை!" என்றான் துரை, உற்சாகமாக.

"மகராஜனாகச் செய்துக் கொள்! 'செட்டியாரே, சந்தையை ஒப்புக்கொள்' என்கிறதைப் போல, எல்லாப் பொறுப்பையும் நீ ஏற்றுக் கொண்டு விட்டால் எனக்கு இரட்டைச் சந்தோஷம். வயசான காலத்தில் போகிற வழிக்கு நல்லது தேடலாமே நான்!..." என்று ஐயரும் நிம்மதியான மனப்பான்மையுடன் பதில் சொல்லிவிட்டு, "அக்கா, வேஷ்டி ஜோடி ஒன்று எடுக்கணும், கடைத் தெரு வரைக்கும் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து தெருவிலிறங்கினார்.

கமலமும் எழுந்து உள்ளே வந்ததும், வாசலில் நடந்த சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்த அன்னம்மாள் "பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு, என்கிற வசனம் வீணாகப் போகாமல் இப்பொழுது வந்திருக்கிற புத்தி முதலிலிருந்தே இருக்கக்கூடாதோ? வந்ததும் வராததுமாக ஊர் சிரித்தது, ...ஊம், கிரகசாரம்..."

"போனதைப் பற்றி நினைக்காதே அன்னம்! இப்ப இருக்கிற நல்ல குணம் மாறாமல் இப்படியே இருந்துவிட்டால் போதும் அப்பனே! என்று சுவாமிக்கு வேண்டிக் கொள்..."

"டேய் துரை, அக்கா..."

தெருப்பக்கமிருந்து உரத்த குரலில் ஐயர் கூவுவதைக் கேட்டு கூடத்திலிருந்த கமலமும், அன்னம்மாளும் வாசலுக்கு ஓடினார்கள்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த ஐயர் உயிர் துடிக்க, "அக்கா, சட்டென்று துரையைக் கூப்பிடு. காலிலே ஆணி தைத்திருக்கிறது..." என்று பதறினார்.

அன்னம்மாள் ஓடி வந்து முற்றத்து ஓரமாக நின்று அண்ணாந்தபடி "டேய் துரை, ஓடியாடா..." என்று வீரிட்டாள். தாயாரின் அபயக் குரலைக் கேட்டு சாய்மானத்தில அமர்ந்திருந்த துரை, எழுந்து 'தட தட' வென்று இறங்கியபடி "என்னம்மா..." என்று வந்தான். "ஐயையோ, வாசலிலே வந்து பாரடா" என்று குரல் நடுங்க உளறினாள் அன்னம்மாள்.

வாசலுக்கு விரைந்த துரை, ஐயருடைய காலில் தைத்திருந்த ஆணியைப் பார்த்தான்.

முன் பாதத்தில் அடியில் குத்திய ஆணி, மேலே வந்து துருத்திக் கொண்டு நின்றது!

உண்மையில் துடி துடித்து விட்டான் துரை!

"ஐயையோ எங்கே போய் இப்படி ஏற்றிக் கொண்டு வந்தீர்கள் ஆணியை?" என்று உடல் பதறக் கேட்டான்.

"கிரகசாரமடா! சீமா வீட்டிலே கூரையைப் பிரித்துவிட்டு கீத்து வேய்கிறார்கள். அந்த வீட்டு வாசலில் போகிறபோது, கஸ்தூரி வீட்டுக் காளை கட்டவிழ்த்துக்கொண்டு, நாலுகால் பாய்ச்சலில் ஓடி வருவதைக் கண்டு, வாசற்படியேறி விடலாமென்று தாண்டி அடி வைத்தேன்,... 'சரக்' கென்று பாய்ந்து விட்டது!"

"ஐயோ, பார்த்து அடி வைக்கக் கூடாதாடா சிவா..."

"கீழே கிடந்த கீத்துகள் மேலேதான் அடிவைத்தேன். அதற்குள்ளே செங்குத்தாக ஆணி இருக்குமென்று கண்டேனா நான்?"

"இந்த நேரத்திலே சீமாவை எதற்குத் தேடிக் கொண்டு போனீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே ஆணியின் தலையைப்பற்றி மெல்ல இழுத்தான் துரை.

"மெள்ளடா! துருப்பிடித்த ஆணியாக இருந்து உள்ளே ஒடிந்து விடப்போகிறது" என்று பரிதவித்தாள் அன்னம்மாள்.

"ஆ! அப்பா, பகவானே!" என்று வலி தாங்காமல் கூவினார் ஐயர்.

ஆணியை வெளியே எடுத்ததும் ரத்தம் 'கடகட' வென்று பெருகினது. "சட்டென்று வெள்ளைத்

துணியை நனைத்துக் கொண்டு வா'' என்று பரபரத்தான் துரை.

அன்னம்மாள் உள்ளே ஓடி ஈரத்துணி கொண்டு வந்ததும், காயத்தின்மீது சுற்றி "மெள்ள எழுந்திருங்கள் அப்பா. கூடத்திற்குப் போய் விடலாம்'' என்று கூறி அவரைப் பற்றி எழுப்ப முனைந்தான் துரை.

அன்னம்மாள் வந்து பாய், தலையணை வைத்ததும், கமலமும், துரையுமாக இருபுறமும் ஐயரைப் பிடித்து அழைத்து வந்து பாயில் உட்கார வைத்தார்கள்.

"துரை, கருப்பையாவைக் கூப்பிட்டு ஓடிப் போய் கலியனைக் கூட்டிக் கொண்டு வரச் சொல்'' என்றாள் கமலம்.

துரை எழுந்து நின்று, "அத்தை, ஈரத்துணிமேல் பச்சைத் தண்ணீரை விட்டுக் கொண்டேயிரு, அதிகமாக ரத்தம் வெளியேறுது'' என்று சொல்லி விட்டு விரைந்தான்.

"பிடித்த சனி சரியாகப் பிடித்திருக்கிறான்; போகிற போது அபசகுனம் போல 'வேண்டாம்' என்று சொல்லக் கூடாதே என்று இருந்தேன்... வீட்டிலே இருக்கிற புது வேஷ்டிகளில் ஒன்றை எடுத்துக் கொள்ளக் கூடாதா சிவா?''

"இதெல்லாம் ஒரு காரணத்துக்குத்தானே அக்கா! வீட்டிலே இருப்பதை எடுத்துக் கொள்வோம் என்று எனக்குத்தான் தோன்றக்கூடாதா, நீ தான் சொல்லக் கூடாதா?

"போகாமலிருந்தால் ஆணி எப்படி ஏறும் காலில்? எல்லாம் காரணார்த்தமாகத் தான் செய்விக்கிறான் ஆண்டவன் அம்மா, உட்கார முடியவில்லையே! தலையணையை நகர்த்து, படுக்கிறேன்!'' என்று ஆயாச மிகுதியால் படுத்துக் கொண்டார் ஐயர்.

காயத்திலிருந்து பெருகி வரும் ரத்தத்துடன் ஜலமும் சேர்ந்து, முற்றத்தில் பாய்ந்தோடி வருவதைக் கண்ட அன்னம்மாளுக்கு வயிற்றைக் கலக்கியது! அவள் முகம் வெளுத்து திகிலடைந்ததைக் கண்ட ஐயர், "ஏன் பயப்படுகிறாய்? போதாத வேளையிருந்தால் அப்படித்தான் வரும். குடத்திலே ஜலத்தைக் கொண்டு வந்து கொட்டு முற்றத்தில்'' என்றார், வேதனையுடன்.

அன்னம்மாள் அப்புறம் சென்றதும், "ஏண்டாப்பா, ரொம்ப வலிக்கிறதா?'' என்று கனிவுடன் கேட்டாள் கமலம்.

"வலி இப்பொழுது தெரியாது! நாழிகை ஆக ஆக, பாதி ராத்திரியல்லவா இசிவு எடுக்கும். அக்கா, இப்படிச் சொல்லுகிறேனே என்று கிலேசப்படாதே. ஆயுசு முடிகிற சமயத்துக்கு 'நிபம்' தான் இது!...''

"என்ன சிவா, வாயிலே வருவதெல்லாம் உளறிக்கொண்டு. ஆணி தைத்தால்...''

அதற்குள் அன்னம்மாள் குடத்தோடுவந்து, குடத்து நீரையும் 'தடதட'வென்று விசிறிக் கொட்டினாள். செந்நீரால் சாக்கடை நிரம்பி ஓடியது!

துரையும், கருப்பையாவும் பதறிப் பாய்ந்து கொண்டு ஐயருக்கருகில் வந்ததும், "என்னடா, கலியன் இல்லையா?''

என்று திகிலுடன் கேட்டாள் கமலம்.

"இருந்தான். சங்கதியைச் சொன்னதும், 'நீங்கபோங்க, பச்சிலே பறிச்சுக்கிட்டு இதோ ஓடியாறேன்' என்ருன். இப்பொழுது வந்து விடுவான்" என்ருன் துரை.

கருப்பையா அருகில் வந்து குனிந்து பார்த்து, "எங்கே தச்சது சாமீ?" என்று கவலையுடன் கேட்டான்.

"கஷ்டகாலம் கருப்பையா, வீட்டிலே இருக்கும் புதிசு, சமயத்துக்கு இருக்கட்டும், புதுசாக ஒன்று கடையிலே வாங்கி வரலாம் என்று போனேன். மூன்ருவது வீட்டுவாசலில் கிடந்திருந்திருக்கிறது ஆணி..."

"அடடா, கூரை பிரிச்சு மேயராங்க ... மூங்கிலிலே அடிச்ச பழைய ஆணியா, புது ஆணியா?"

"எந்த ஆணியானுல் என்ன? கிராம வாழ்க்கை சுபிட்சம் என்று அடித்துக் கொள்ளுகிறீர்கள்! என்ன உபயோகம்? சட்டென்று ஒருடாக்டர் வேண்டுமென்ருல் கிடையாது. ஆஸ்பத்திரி என்ருல் மூன்று மைல் ஓடினுல் உண்டு. மெட்ராசாக இருந்தால் இவ்வளவு நேரத்திற்கு ரத்தப்பெருக்கை நிறுத்தி கட்டுப்போட்டாகி இருக்கும்" என்று ஆத்திரத்தோடு சொன்னுன் துரை.

கையில் கட்டு பச்சிலைகளுடன் உள்ளே வந்தான் கலியன்.

"வா, கலியா, என்ன இவ்வளவு நாழியாக்கி விட்டாயே..." என்று இன்னமும் 'குழ குழ' வென்று ரத்தம் பெருகி வரும் காயத்தைப் பார்த்த வண்ணம் பரிதவிப்போடு கேட்டாள் கமலம்.

"இதோ ஆச்சம்மா", என்று காயத்தில் சுற்றப்பட்டிருந்த ஈரத்துணியை விலக்கக் கை வைத்தவன், ரத்தப்பெருக்கைக் கண்டு விலக்காமலே, "அம்மா, இந்த மூலிகைகளை நல்லாக் கழுவிட்டு, கெட்டியா அரைச்சுக் கொண்டாங்க, சட்டுனு வாங்க." என்று கூறிவிட்டு, "காலிலே குத்தின ஆணி எங்கே? கொண்டாங்க இப்படி" என்று கேட்டான் கலியன்.

"திண்ணையிலே எடுத்துப் போட்டான் துரை. லாந்தரைக் கொண்டுபோய் தேடி எடுத்து வா கருப்பையா," என்ருள் கமலம்.

மூலிகைகளை அள்ளிக் கொண்டு உள்ளே போனுள், அன்னம்மாள்.

களைப்படைந்தவராக கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தார் ஐயர்.

கவலையே உருவாக அருகில் அமர்ந்திருந்தாள் கமலம்,

கருப்பையா ஆணியைத்தேடி எடுத்து வந்து கலியன் கையில் கொடுத்தான்! அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான் கலியன். ஆணி கூர்மையாகவும், சற்று துருப் பிடித்ததாகவும் இருந்தது! அதை ஒரு புறமாக வைத்துவிட்டு, முகச்சுணக்கத்தோடு, "இது தேய்பிறையில்லே பெரியம்மா?" என்று கமலத்தைக் கேட்டான்.

"ஆமாம். ஏன்?" என்று பயத்தோடு வினவினுள் கமலம்.

"சும்மா கேட்டுக்கிட்டேன்," என்ருனவன்.

Telegrams : 'RANGAVILAS' Telephone : 17 & 817

SRI RANGA VILAS
GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P.O. COIMBATORE

SPINDLES : : 36,368

LOOMS : : 88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2^s to 80^s counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

Managing Partner :—

G. N. VENKATAPATHY.

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை.



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"

பச்சிலை விழுதை அரைத்து எடுத்துக் கொண்டு வந்தாள் அன்னம்மாள்.

"அம்மா, அதை வச்சிட்டு, மணலு, கல்லு இல்லாம, நல்ல சுண்ணும்பா கொஞ்சம் கொண்டாங்க. இளஞ்சூடா தண்ணியும் வேணும்" என்ருன் கலியன்.

சுண்ணும்பு வந்ததும், பச்சிலை விழுதையும், சுண்ணும்பையும் அளவாகச் சேர்த்து வைத்து விட்டு, காயத்தின் மீதிருந்த ஈரத்துணியை விலக்கிவிட்டு, அவசர அவசரமாக வென்னீரால் காயத்தைக் கழுவி விட்டு, பெருகிவரும் ரத்தத்தினூடேயே கலவை மருந்தை காயத்தினுள் செலுத்தி, இருபுறத்திலும் தடிப்பாக வைத்து மேலே கட்டுப் போட்டான் கலியன்.

"பெரியம்மா, கூடத்திலே படுக்கை போடுங்க. படுக்க வச்சிடலாம்." என்ருன்.

காயத்தில் மருந்து உறைத்ததும் 'சுரீர்' என்றது ஐயருக்கு; பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எரிய ஆரம்பித்தது!

படுக்கை தயாரானதும், எல்லோருமாக இருந்து ஐயரை படுக்கையில் கொண்டு வந்து படுக்க வைத்தார்கள்.

"அப்பாடா! அப்பனே முருகா! படுக்கையில் கிடத்தி விட்டாய்!" என்ருர் விரக்தி நிறைந்த குரலில்!

'அம்மா, சூடா கொஞ்சம் காபி கொடுங்க ஐயருக்கு. நான் வீட்டுக்குப் போய் மருந்து கொண்டாறேன். உள்ளுக்கும் மருந்து கொடுக்கவேணும்..."

"ஏன் கலியா, ஆணி துருப்பிடித்ததாயிருக்கிறேதே, உள்ளே...ஒண்ணுமிருக்காதே கலியா?" என்று கேட்டாள் கமலம்.

"ஒண்ணுமில்லை! ஆணி அப்படியே முழுசா இருக்குது, நான் போய் மருந்தோடு வாரேனம்மா," என்று கூறி எழுந்தான் கலியன்.

"போய்வா. மருந்து எடுத்துக் கொண்டு எப்போது வருகிருய்?" என்று கேட்டுக் கொண்டே கலியனைப் பின் தொடர்ந்தாள் கமலம்.

"இதோ, வீச நாழியிலே வந்துடமாட்டேன்?"

"கவனித்து மருந்து கொடு கலியா, அதற்குத் தகுந்தாப் போல நானும் உனக்கு"

"நல்லாச் சொன்னீங்க அம்மா! சாப்பிடுவது மகராஜன் கொடுக்கிற பிச்சையம்மா! சமயம் அமயம்னு வந்து கேட்டால், 'இல்லை' என்ன மாட்டாரே புண்ணியவான்" இளகிச் சொன்ஞன் கலியன்.

"அவன் செய்கிற தருமம் தான், அவன் தலையைக் காக்க வேணும். அவ்வளவு தான்" என்று கண்ணீர் விட்டாள் கமலம்.

"வருத்தப் படாதிங்கம்மா. காச்சலு வராமப் பார்த்துக் கொள்ளணும். போய் மருந்து கொண்டு வாறேன். வரட்டுங்களா?" என்று புறப்பட்டான் கலியன்.

அத்தியாயம் 18

தலைக்கு வந்தது!

ஐயர் பஞ்சாங்கத்தை கொண்டுவரச் சொல்லிப் பார்த்தார். பார்த்து முடிந்ததும், அதைப் பொத்'தென்று கீழே போட்டார்.

அருகிலிருந்த அன்னம்மாள் "என்ன பார்த்தீர்கள் ?" என்று கேட்டாள்.

"ஒண்ணுமில்லே, காபி ஆச்சா?"

"இதோ கொண்டு வருகிறேன்" என்று பதில் கூறிவிட்டு உள்ளே சென்றுள் அன்னம்மாள்.

கமலம் வந்ததும் "அக்கா, இப்படி வந்து உட்காரு" என்று கூப்பிட்டார் தமக்கையை.

"என்னப்பா, என்ன வேணும் ?" என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்தான் துரை.

"ஒண்ணுமில்லேடா, சற்று விசிறு என்று கூப்பிட்டேன் அக்காவை" சொல்ல வந்ததை அடக்கிக் கொண்டுவிட்டார்.

அடடா! ஆகாத காலத்திற்கு எல்லாம் எப்படி வந்து ஒத்துக் கொள்ளுகிறது ? கிழமையோ வியாழன், திதியோ ஏகாதசி, நட்சத்திரமோ திருவாதிரை.

ஆதிரை, பரணி, கார்த்திகை, ஆயில்யம், முப்பூரம், கேட்டை, என்ற செய்யுளைச் சொல்லிப் பார்த்துக் கொண்டார். ஒரு தடவை! 'ஏ! பழனியப்பா! இதுவா உன் கட்டளை ?பாவம். அன்னம்மாள், பதினுலாம் வயதில் இந்த வீட்டுக்கு வந்தாள் ! அன்றிருந்து இன்று வரை சூது வாது இல்லாமல், முகம் கோணுமல் மாடாக உழைத்து, மண் வெட்டியாகத் தேய்கிருள்!

பகவானே! கல்மஷமற்ற இந்த ஜீவனுக்கு மஞ்சள் குங்குமத்தோடு கூடிய மரணத்தையாவது வரமாக அருளக்கூடாதா?' என்ற பெருந்துயரில் ஈடுபட்டு தம்மை மறந்தவராகக் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தார் ஐயர்.

"சிவா." என்று கூப்பிட்டாள் கமலம்.

கண்களைத் திறந்து பார்த்தார் ஐயர். காபியை வைத்துக் கொண்டு அன்னம்மாள் நிற்பதைக் கண்டார்.

அவளைப்பற்றிய சிந்தையில் ஆழ்ந்திருந்ததால், அவளைக்கண்ணெதிரில் கண்டதும் கண்களில் ஜலம் வந்துவிட்டது அவருக்கு.

காபி சாப்பிடுகிருயா அப்பா" என்ருள் கமலம்.

"உம், கொண்டுவா," என்று கூறி எழுந்துட்கார்ந்து, காபியை வாங்கிக் கொண்டார்.

"ஏனப்பா, கண்ணில் ஜலம் வருகிறது ? ரொம்ப வலிக்கிறதா ?"

"வலியில்லே அக்கா, எரிச்சல்" என்ருர் ஐயர்.

"அம்மா சிரார்த்தத்தன்று கனவாடிகள் வந்திருந்த பொழுது சொன்ஞர், 'உனக்கு சனி ரொம்பப் போதாது' என்று. அப்பவே நினைத்தேன்— சனிப்பிரீதியாக ஏதாவது செய்யணும்னு. துரை ஊரிலிருந்து வந்தான். ஒன்று போக ஒன்று

வேதனையும், விசாரமுமாகப் போய் விட்டது.''

"வருவதெல்லாம் வந்துதான் தீரும் அக்கா! சனிப் பிரீதியாவது, சுக்ரப் பிரீதியாவது!''

"அதுதான் தெரிகிறதே! தினமும் சீமா வீட்டு வாசலோடு நடக்கவில்லையா, கூரை வேய்கிறபோது கிட்ட இருந்து வேலை வாங்கவில்லையா? நம்ம வீட்டிலேயே, அட! குத்தினால் தான் என்ன? துளகாயம் பட்டு, அதோடு போகக் கூடாதா? இந்தணடை குத்தி, அந்தண்டையா வாங்கவேணும்?''

"நடந்து போயிருந்தால் அவ்வளவு வேகமாக ஏருது அக்கா கித்துக்கட்டைத் தாண்டி அடி வைக்கிற அவசரத்தில் 'சரே' லென்று ஏறிவிட்டது?''

"வேலைக்கு, கடை கண்ணிக்குப்போக என்று ஆள் போட்டிருக்கிறீர்கள். இன்னும் நீங்கள் ஏன் போகிறீர்கள்? கேட்கிறேன்,'' என்று கொஞ்சம் வேகமாகக் கேட்டான் துரை.

"சரிதாண்டா, அப்புறம் ஆணி எப்படி ஏறும்? புது சோமன் ஜோடு வீட்டிலே இருக்கிறபோது வாங்கணும் என்று தோன்றுவானேன்? அவனாகவா போனான்? சனி பகவான் ஆணியாக வழியிலே இருந்து கொண்டு 'வா வா' என்று கூப்பிட்டிருக்கிருன!'' என்று திகில் மேவிய குரலில் ஹீனசுரத்தில் சொன்னாள் கமலம்.

கலியன் மருந்துக் குப்பிகளடங்கிய 'ஜோல்னா' பையுடன் வந்துசேர்ந்தான். "கொஞ்சம் சுடு தண்ணியும், சந்தனக் கல்லும் கொண்டாங்க.'' என்று கூறி, கீழே உட்கார்ந்து மாத்திரைக் குப்பியை எடுத்தான்.

வெந்நீர் வந்ததும் மாத்திரையை உரைத்து, வெற்றிலையில் வழித்துக் கொடுத்து, "இதைச் சாப்பிட்டுக்குங்க எசமான், அம்மாகிட்ட வேறே மருந்தும் தந்திட்டுப்போறேன். அதைச் சாப்பிட்டீங்கன்னு, நல்ல உறக்கம் வந்திடும். ராவுக்கு சாப்பாடு வேணும். புழுங்கலரிசிக்கஞ்சி கொடுங்க. காலையிலே பார்ப்போம். கட்டை அவுத்துக் கிவித்து வச்சிடாதீங்க. இன்னும் மூணு நாளைக்கு அதைத் தொடவேப் படாது. ஆமாம். நாலாம் நாளுதான் நான் வந்து அவுப்பேன்...''

"ஆற எத்தனை நாளாகும் கலியா?''

"கட்டை அவுத்துப் பார்த்துத்தான் சொல்லணும்.''

"ரொம்ப எரிகிறதேப்பா...'' என்று தவித்தார் ஐயர்.

"ரணத்திலே தண்ணிப்பட்டாலே எரியுமே, மருந்து வச்சால் எரியாதுங்களா? எரிவு, இசிவு, ஒண்ணும் தெரியாம இருக்கத்தான் மருந்து கொடுத்திருக்கிறேன். கார்த்தாலைக்கி வாறேன், கட்டுலே மாத்திரம் கைவச்சுடவேணும்,'' என்று கூறி எழுந்தான் கலியன்.

"நான் பார்த்துக் கொள்ளுகிறேன், கலியா. துரை, செல்லப் பெட்டியிலே வெற்றிலை பாக்கு இருக்கும்; கலியனுக்குக் கோடு "இந்தா இங்கே வா' என்று அழைத்து, ரகசியக் குரலில்,'' உள்ளேபோய் அம்மாகிட்டச் சொல்லி தோத்திர புஸ்தகத்திலே ஐந்து ரூபாய்த்தாள்

வைத்திருக்கிறேன். எடுத்துத் தரச் சொல்லி, வெற்றிலை பாக்கில் வைத்துக் கொண்டு வா '' என்றாள் கமலம்.

அவர்கள் பேசிக் கொண்ட ஜாடை யறிந்த கலியன் 'சும்மா இருங்க பெரியம்மா. சொகமா வட்டும் ஐயருக்கு, தட்டு நிறைய வச்சுக் கொடுங்க வாங்கிக்க றேன்' என்று உபசாரம் சொன் ஞன் கலியன்.

'' இருக்கட்டும், வாங்கிக் கொள். வைத்தியச் செலவுக்கு வேண்டாமா ?''

'' வேணும்னு கேட்டு வாங் கிக்கறேனே,''

'' தேவலை, எடுத்துக்கொள் சொல்லுகிறேன் ; கொடுடா துரை,'' என்றாள் மீண்டும்

'' சரியாப்போச்சு போங்க '' என்று முனகியவாறு பெற்றுக் கொண்டான் கலியன்.

'' அப்பனே. தாங்க வில்லையே,'' என்று புலம்பினார் ஐயர்

'' ஏண்டப்பா, எரிச்சல் அதிகமாக இருக்கிறதா?'' என்று கவலையுடன் வினவினாள் கமலம்.

'' எரிச்சல் படிமானத்திற்கு வருகிறது ; இசிவு எடுக்க ஆரம்பித்து விட்டதே, காலை அசைக்கக் கூடமுடியாது போலி ருக்கிறதே !'' என்று ஈனசுரத் தில் முனகினார் ஐயர்.

'' இரண்டு மூணு நாளைக்கு அப்படித்தானிருக்கும். அப்புறம் சன்னம் சன்னமாக, வலி தணிஞ்சுடும். அப்ப, நான் வரட்டுங்களா ?'' என்று கூறி ஐயருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு விடைபெற்றுக் கொண் டான் கலியன்.

ஐயர் துரையைக் கூப்பிட்டு. விடியற்காலம் விதை முகூர்த்தத் திற்கு வயலில் செய்யவேண்டி யவற்றை யெல்லாம் விவரமாகச் சொல்லி '' போய் சாப்பிடு விடியற்காலம் சீக்கிரம் எழுந்தி ருக்கணும்'' என்றார்.

சாப்பிடச் சென்றான் துரை.

கமலத்திற்கு நெஞ்சிலே கவலை முட்டிட்டுக் கிடந்தது ! திக்பிரமை பிடித்தவளாக ஐயரின் பக்கத்திலேயே உட் கார்ந்திருந்தாள்.

நேரம் ஆக ஆக வலி அதிக மாகிக் கொண்டிருந்தது.

சாய்மானத்தில் படுத்து சற்று கண்ணை மூடின துரை, ஐயரு டைய கத்தலில் விழித்துக் கொண்டான்.

நடுநிசியில் வலி கடுமையா யிற்று. துடியாகத் துடித்தார் ஐயர். எல்லோரும் அவர் படுக் கையைச் சுற்றி உட்கார்ந்து பரி தவித்துக் கொண்டிருந்தார்கள்.

''உங்கள் பேச்சையெல்லாம் கேட்காமல் வண்டியிலேற்றி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போயிருக்க வேண் டும் நான். 'இதோ இந்த மருந்துலே அப்படி அசந்து தூங்கி விடுவார்' என்றானே அவன் பிரமாதமாக ?'' என்று ஆத்திரத்துடன் கூச்சலிட்டான் துரை. ''இங்கிலீஷ் வைத்தியத் தில் மட்டும் இன்றைக்கே வலி தெரியாமல் செய்து விடுகிறான என்ன? வைத்தியம் எதுவான

ஒும், இசிவு இசிக்காதிருக் காது,'' என்ருள் கமலம்.

''நான் சொல்லுகிறேனே என்று நினைக்காதே அத்தை. எனக்கென்னமோ இந்த வைத் தியம் துளிகூடப் பிடிக்க வில்லை.'' என்று கடுகடுப்புடன் கூறினுன் துரை.

''அதென்னஅப்படிச்சொல்லி விட்டாய்! எங்கெந்த ஊரிலி ருந்தெல்லாம் வந்து வண்டியும் காரும் வைத்து கலியனைக் கூட் டிக் கொண்டு போகிருர்கள் தெரியுமா உனக்கு? நல்ல கை ராசி.மருந்தும் பேஷான மருந்து அதிலும் ருக்மணி பிள்ளைக்குக் கண் தேவலை யானதிலிருந்து போகிற இடங்களில் ராஜ உப சாரமல்லவா கலியனுக்கு? கேளடா துரை, இங்கிலீஷ் வைத்யம், ஆசுபத்திரி என்கி ருயே—ருக்மணி பிள்ளைக்குப் பார்க்காத இங்கிலீஷ் வைத்திய மில்லை, போகாத ஆஸ்பத்திரி யில்லை, தெரியுமா உனக்கு? ஆயிரக்கணக்கிலே பணம் செல வாச்சே யொழிய கண் சொஸ்த மானபாடில்லை? வம்சத்துக்கு ஒரு பிள்ளையாச்சே என்று தவி யாகத்தான் தவித்தார்கள். தாயார்தகப்பஞர் பட்டவேதனை யும், அழுத அழுகையும் கொஞ் சமில்லை! மாட்டுப்பெண் வந்த வேளை என்று ஊரே, கூடி ஒரு முகமாக தூஷித்துக்கொட்டினுர் கள். நரசிங்கபுரம் கர்ணம் தே வுடுஅய்யர்தான்கலியனை அழை த்துக்கொண்டு போய் பார்க்கச் சொன்ஞராம்.

அவர்களுக்கு, பெரிய பெரிய ஆஸ்பத்திரியிலும், டாக்டர்களா லும் திராதநோய் இந்தப் பட்டிக் காட்டு வைத்தியத்திலா சௌக் கியமாகப் போகிறது என்று அலட்சியமாக இருந்தாலும், வலுக் கட்டாயமாக கலியனை வைத்தியம் பண்ணச் சொல்லி வற்புறுத்தின பிறகு, பையனைக் கூப்பிட்டுப் பார்த்தான். கண் இமைகள் உப்பி,பாதி எலுமிச்ச பழ மூடி போல 'புஸ்' என்று ஊதிக்கிடந்ததாம். பார்த்து விட்டு, 'மருந்து கொடுத்து சுக மாக்க முடியும். கண் தெரிஞ் சால் உங்க இஷ்டதுக்குக் கொடுங்க' என்று சொல்லி, மறுநாள் வந்து கண்ணிலே மருந்து வைத்து கட்டுக் கட்டி விட்டு, பையனின் தாயாரைக் கூப்பிட்டு, ''அம்மா, கொஞ்ச நேரத்தில் எரிச்சலெடுக்கும். தாட்சண்யமில்லாமல் கையைக் கட்டி விடனும். கட்டை அவுத் தால் நிச்சயமாக் கண்பொட்டை யாயிடும். என்ன கதறிஞலும் கிட்டக் கூடபோகாதிங்க. நாளை வெடிகாலம் வந்து நான் தான் கட்டைப் பிரிப்பேன். துலாம் பரமாக நல்லாத் தெரியும் பார் வை'' என்று சொல்லிவிட்டு வந்து விட்டாரும்.

அவ்வளவுதான். சற்றுக்கெல் லாம் எரிய ஆரம்பித்து உச்சி வேளையில் கதற ஆரம்பித்து விட்டான்! ஊர் கூடிப்போய்விட் டது. கட்டை அவிழ்க்கலா மென்று கூட யோசித்தார்கள். கலியன் வைத்தியமும், கட்டுப் பாடும் தான் எல்லாருக்கும் தெரியுமே இந்த ஊரில். தொ டக்கூடாது என்று மறுத்து விட் டார்கள் தேவுடு அய்யரும் இருந்தவர்களும்.

கத்தி கதறி அழுது, கலியனை சபித்து, தாயை வைது, பிராணன்போகிறதுபோகிறது என்று துடித்துத் துடித்து அப்படியே சோர்ந்து தூங்கி விட்டான்!

மறுநாள் காலையில் மெள்ள எழுப்பி,நல்ல வார்த்தைசொல்லி உட்கார வைத்து, கட்டை அவிழ்த்துப் பார்த்தால் — கண் மேலே இருந்த மருந்து விழுதுலே குலு குலு வென்று புழு! அப்புறம் கண் இமைகளை விலக்கி கோழி இறகால் உதிர்த்

தால் கொல கொல வென்று செத்த புழு கொட்டிற்று அப்பா! புழு பூராவும் உதிர்ந்த பிறகு வெந்நீரைவிட்டு அலம்பியதுமே கண் பளிச்சென்று தெரிந்ததாம்!

ஆனந்தம் தாங்கவில்லை அவர்களுக்கு! போய்விட்டது என்று இருந்த பார்வை மீண்டதல்லவா? அப்புறம் தைலம் வடித்துக் கொடுத்து தினசரி எண்ணெய் தேய்க்கச் சொல்லி கொடுத்தான்!

ருக்மணி யாத்திலே கலியனுக்கு ஐந்நூறு ரூபாயல்லவா கொடுத்தார்கள்!

அப்புறம்சாவகாசமாகக் கலியனைக் கூப்பிட்டு, ''என்னமருந்து கொடுத்தாய்?'' என்கிறேன், ''ஒன்றுமில்லை! ஊசி மிளகாய்ப் பழவிழுது அம்மா!'' என்றான், சிரித்துக்கொண்டு. 'நிஜமாடா பாவி', என்றேன். 'நிஜம்தானம்மா! வெளியிலே சொல்லாதீங்க! கண் நிறைய புழுவச்சிருந்தது. அதுக்கு இது தான் வைத்தியம் போகர் முறைப்படி. இன்னும் பத்துநாள் பாக்கல்லே கண் பாப்பாவை புழு அரிச்சுக்

கண் போயிருக்கும். அவங்களோட நல்ல அதிர்ஷ்டம், என்கிறுன்!''

''சே, ராட்சஸ வைத்தியம்'' என்று வெறுப்புடன் கூறினுன் துரை.

''இவ்வளவையும் காதில் வாங்கியபடி சிந்தனையில் துயரத்தையும் திகிலையும் தேக்கி உழன்று கொண்டிருந்த அன்னம்மாளுக்கு எதிர் திசையிலிருந்து வெகு வேகமாகக் கருநாகமொன்றுஊர்ந்துவருவதைக் கண்ட கயலம் ''ஐயையோ, வந்திடடி. பாம்பு, பாம்பு'' என்று அலறினுள்.

அன்னம்மாள்அசையவில்லை.

துரை பாய்ந்து வந்து மூங்கில் கொம்பினுல் பலமாக ஒரு அடி போட்டான். பாம்பு துள்ளி அன்னம்மாள் மடியிலும் மார்பிலுமாக விழுந்தது!

''ஷண்முகம், நாகராஜா...'' என்று வீரிட்டார் ஐயர்

(தொடரும்)

போன் : 151 தந்தி : VESSELs

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,

பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,

செம்புத் தகடுகள் உத்திரவாதத்

துடன் கிடைக்கும்.

பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.

தென்னாட்டின் தலைசிறந்த அச்சகம்

நேஷனல் லித்தோ பிரஸ்

ரயில்வே பீடர் ரோடு, :-: சிவகாசி.

தபால் பெட்டி நெ. 30

போன் : **58 & 75** தந்தி : **"லித்தோகிராப்"**

அழகான முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு எங்களது அச்சகத்தில் தீப்பெட்டி, பீடி, மில், சோப், பயர் ஒர்க்ஸ்,ஜவுளி,காபி, டீ,மிட்டாய், சோடா முதலியவைகளுக்குரிய லேபிள்கள், வால் போஸ்டர்கள் மற்றும் கார்டூன்களும், லித்தோவிலும், ஆப்செட்டிலும் பிரிண்டு செய்து கொடுக்கக்கூடும். காலண்டர்கள், பலவர்ணப் படங்கள், போட்டோ ஆப்செட்டில் தயார் செய்து கொடுக்கிறோம். கவர்ச்சிகரமான பல வர்ணங்கள் கொண்ட பூ பார்டர்கள் உள்ள கலியாண பத்திரிகைகள் ரெடிமேடாக ஸ்டாக் வைத்திருக்கிறோம்.

கிரிஸென் பிரிண்டிங் இங்க் பேக்டரி

'கிரிஸென்' லித்தோ & ஆப்ஸெட் இங்க் தயாரிப்பாளர்கள்,

"இங்கோகிராப்" :: சிவகாசி

வைதேகியின் விவாகம்

-புஷ்யன்-

அன்று வெங்கட்ராமனும் அவனுடைய பெற்ருேரும் மாயவரம் போய்ப் பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தார்கள்; வீடு வந்து சேர்ந்ததும் அவனுடைய தகப்பனுர் அன்று நண்பகல், "நான் அவர்களுக்கு கடிதாசு எழுதி விடலாமல்லவா? முகூர்த்தம் நிச்சயிக்கச் சொல்லி எழுதவேண்டியதுதானே? வெங்கட்ராமா! உனக்கு முழுச் சம்மதம் தானே?" என்று கேட்டார்.

"எனக்குப் பெண்ணைப் பிடித்திருக்கிறது அப்பா. ஆனல் கல்யாணம் இப்போது வேண்டாம்" என்ருன் வெங்கடராமன்.

"இதென்ன? பெண்ணைப் பிடித்தானபிறகு கல்யாணம் வேண்டாம் என்ருல் என்ன அர்த்தம்? நீ என்ன எங்காவது சீமைக்குப் படிக்கப் போகிருயா? நீதான் உத்தியோகத்தில் இருக்கிருயே, இன்னும் என்னடா?" என்று கேட்டாள் அவனுடைய தாயார்.

"அதற்கு இல்லை அம்மா. அந்தப் பெண்ணின் மாமா பெண் இருக்கிருளே, அதுதான், முதலில் எனக்குப் பார்த்துவிட்டு ஜாதகம் சரியில்லை என்று வேண்டாம் என்று ஒதுக்கி விட்டோமே, அந்தப் பெண்ணுக்கும் கல்யாணம் நிச்சயம் ஆகவேண்டும். அப்புறம் தான் நான் இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியும்," என்ருன் வெங்கட்ராமன்.

"இதென்ன! திருக்கூத்தாக இருக்கிறது? அவளுக்குக் கல்யாணமாகிறதிற்கும், உன் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்? அதற்காகக் காத்துக் கொண்டிருக்க முடியுமா என்ன?" என்ருள் அவனுடைய தாயார்.

"வெங்கிட்டு என்ன சொல்கிருன்?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் கிருஷ்ணமூர்த்தி. கிருஷ்ணமூர்த்தியும் வெங்கடராமனுடைய காரியாலயத்தில் வேலை செய்பவன். அதனல் இருவரும் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர். அடிக்கடி அவன் வெங்கிட்ராமன் வீட்டுக்கு வருவான். பெற்ருேர்களுடன் சுமுகமாகப் பழகி அவர்கள் வீட்டு மனிதரில் அவனும் ஒருவனுகி விட்டான்.

"நீதான் உன் சினேகிதனுக்குப் புத்தி சொல்லவேண்டும், கிருஷ்ணு. பெண்ணைப் பிடித்து விட்டதாம். ஆனல் இப்பொழுது கல்யாணம் வேண்டாம் என்கிருன்," என்ருர் அவனுடைய தகப்பனுர்.

"இது மிகவும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஏன் இப்பொழுது கல்யாணம் வேண்டாம்?" என்று வெங்கிட்டுவைப் பார்த்துக் கேட்டான் கிருஷ்ணமூர்த்தி.

"நீயே சொல் கிருஷ்ணு. நான் போய்ப் பார்த்து விட்டு வந்த வீட்டில் ஒரு பெண்—நான் யாரைப் பார்த்தேனே அவளுடைய மாமா பெண் ஒருத்தி இருக்கிருள். இவளை விடப் பெரியவள். அவளுக்கு—சொந்தப் பெண்ணுக்கு கல்யாணம் நடக்காமல்—அவளை விடச் சிறிய பெண்—அவருடைய தங்கை பெண்ணுக்கு முதலில் கல்யாணம் நடந்தால் அந்தப் பெண்ணுடைய மனம் எவ்வளவு வருந்தும்? மேலும், அவளை எனக்குக் கொடுக்கப் போவதாய் முதலில் ஜாதகம் பார்த்துப்பொருந்தாமல் போகவே இப்படி

ஆகிவிட்டது. அதனால் அவளுக்கு முதலில் கல்யாணம் நிச்சயமான பிறகே என் கல்யாணம் நடக்க வேண்டும் என்று நான் சொல்கிறேன். இதில் என்ன தப்பு, நீயே சொல், கிருஷ்ணு?" என்றான் வெங்கிட்டு.

கிருஷ்ணமூர்த்தி சிரித்தான், பதில் பேசாமல்!

"என்ன நீயும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு விட்டாய்? நான் அந்தப் பெண்ணின் மேல் மனமிரங்கிச் சொல்கிறேன்!"

"இதோ பார்! வெங்கிட்டு! உனக்கு உண்மையிலேயே அந்தப் பெண்ணின் வாழ்க்கையில் அக்கறை இருக்கிறதா?"

"இல்லாமலா இம்மாதிரி அவளுக்கு முதலில் விவாகம் நடக்க வேண்டும் என்று சொல்கிறேன்?"

"அப்படி இருந்தால் பேசாமல் நீ பார்த்த பெண்ணை சீக்கிரம் கல்யாணம் செய்துகொள். அவளுடைய கல்யாணம், தானாக, பிரும்மா முடுச்சு போட்டபடி நடக்கும்."

"கிருஷ்ணு! நீ கொஞ்சம் கூட இரக்கமில்லாதவன். ஒரு பெண்ணின் மனது எப்படித்தானிருக்கும் என்பதைக் கொஞ்சம் கூட அறியாதவன்" என்றான் வெங்கிட்டு.

"வெங்கிட்டு, நான் ஒரு பெண்ணின் மனத்தவிப்பை உணர்ந்து தான் சொல்கிறேன். நானும் உன்னைப்போல் இதே மாதிரி சந்தர்ப்பத்தில் அகப்பட்டு, உன்னைப் போலவே தான் நான் பார்த்த பெண்ணின் பெரியப்பா பெண்ணின் மேல் கருணைவைத்து 'அவளுக்குக் கல்யாணம் நிச்சயமானதும் தான் நான் இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வேன்!' என்று பிடிவாதம் பிடித்தேன். ஆனால் அதனால் எவ்வளவு விபரீதமான பலன் நிகழ்ந்துவிட்டது தெரியுமா?" என்றான் கிருஷ்ணமூர்த்தி, வேதனையுடன்.

"அதென்ன, கதை?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் வெங்கிட்டு.

"ஆமாம், அது ஒரு பெரிய கதை. சொல்லுகிறேன், கேள்" என்று தொடங்கினான், கிருஷ்ணமூர்த்தி.

2

எனக்கு எத்தனையோ நபர்கள் தங்கள் பெண்களைக் கொடுக்க ஜாதகம் வாங்கிப் போனார்கள். ஆனால் ஒன்றும் சரியாகப் பொருந்தாமல் இருந்து வந்தது. எல்லோருக்கும் ஜாதகம் பொருந்தவில்லை என்று எழுதி எழுதியே என் தகப்பனாருக்குச் சலித்து விட்டது. இப்படியிருக்கும்பொழுது ஒரு நாள் எங்களுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாச அய்யர் அவர்களுக்கு,

நான் முன்பு என் பெண் வைதேகியின் ஜாதகத்துடன் தங்கள் பிள்ளையின் ஜாதகத்தை ஒப்பிட்டுப் பார்த்தபோது அது பொருந்தாமல் போய் விட்டது. இத்துடன் என் சகோதரன் பெண் ஜயலக்ஷ்மியின் ஜாதகத்தை அனுப்பி யிருக்கிறேன். நான் இங்குள்ள ஜோஸ்யரிடம் பொருத்தம் பார்த்தபோது மிகவும் நன்றாகப் பொருந்தி யிருக்கிறதென்று கூறினார். தாங்களும் அவ்விடத்தில் பொருத்தம் பார்த்துத் தங்களுக்குத் திருப்தியாக இருந்தால் ஒரு நல்ல நாளில் வந்து பெண்ணைப் பார்த்துச் சம்மதம் தெரிவித்தீர்களானால், பிறகு முகூர்த்தத்தை நிச்சயித்து விடலாம். தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள்,
விஸ்வநாதன்.

என் தகப்பனாரும் இரண்டு ஜாதகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தார்.

அவருடைய மனதுக்கும் திருப்தி யாகப் போய்விடவே, நான், என் தகப்பனுர், தாயார் மூவருமாகப் பெண்ணைப் பார்க்கக் கோயமுத் தூருக்குப் போனேம். என் தாயார் உள்ளே பெண்களுடன் பேசச் சென்று விட்டாள். நானும், தகப்பனுரும், விஸ்வநாத அய்ய ரும் கூடத்தில் உட்கார்ந்து கொண் டிருந்தோம்.

ஜயலக்ஷ்மி கையில் காபிக் கூஜா வுடனும், டிபன் தட்டுகளுடனும் வந்து மேஜைமேல் அவைகளை வைத்து விட்டு, நமஸ்காரம் செய் தாள். பிறகு வாயிற்படி ஓரமாக உட்கார்ந்துகொண்டு பாட ஆரம் பித்தாள். ஆரம்பத்திலேயே இன் னெரு குரலும் சேர்ந்து கொண் டதைக் கவனித்தேன். எதிரில் உட்கார்ந்து அன்னியர் முன் பாடு வதால் கூச்சமும், நடுக்கமும் கொண்டு, அவவப்போது ஜயலக்ஷ் மியின் குரல் தடுமாறியபோது, பின்னணியில்—சுவருக்குப் பின் னல் இருந்து 'கணீரென்று' வெண் கலக் குரல் ஒன்று சேர்ந்து பாடி வந் தது தனியாக ஒலித்தது. அந்தக் குரல் யாருடையதென்று, ஜயலக்ஷ்மி யின் சித்தப்பாவை கேட்டேன்.

"என் பெண் வைதேகிதான் கூடப் பாடுகிருள்," என்ருர் விஸ்வ நாதன். பிறகு, "அவளுடைய ஜாதகத்துடன்தான், உங்கள் ஜாத கத்தை முதலில் பொருத்தம் பார்த் தது. சரி, அதுதான் அப்படியாகி விட் டதே. இந்த என் தமையனுர் பெண் ஜயலக்ஷ்மியின் ஜாதகத்துடனுவது பொருந்தி யிருந்தால், அவள் விவா கத்தையாவது முடித்து விடலாம் என்று ஆசையுடன் பார்த்தேன். தெய்வ ஸங்கல்பம், பொருத்தமாகி விட்டது. பெற்ற தகப்பனை இழந்து தவிக்கிருள் குழந்தை. எல்லாம் நான்தான். ஆனல் அவளுக்குச் சொத்து இருக்கிறது. உங்கள் விருப்பப்படி நடந்து கொள்வாள். புத்திசாலி." என்று கூறினர். அவர் கூறும்போது மிகவும் உருக்க மாக இருந்தது.

பாட்டு முடிந்தது. ஜயலக்ஷ்மி எழுந்து உள்ளே போய் விட்டாள், புள்ளிமான் போல். எனக்குப் பிடித்துப் போய்விட்டது. ஜயம் உள்ளே போனபோது ஒரு பெண் பின்னலேயே தொடர்ந்துசென்ருள். அப்போது என் பக்கம் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனுள். அந்தப் பார்வை, என் மனதை என் னவோ செய்தது. அதில் ஏதோ ஓர் ஏக்கம் இருப்பதாக உணர்ந் தேன்.

நாங்கள் புறப்பட்டோம். விஸ்வ நாதன், 'ஊருக்குப் போய் எல் லாம் யோசித்து எழுதுங்கள். நீங் கள் எப்படி செய்யச் சொன்னுலும் அப்படியே செய்து கொடுக்கச் சித்த மாயிருக்கிறேன்,'' என்ருர்.

3

என் மனம் வைதேகியைப் பற் றியே நினைத்துக் கொண்டிருந்தது. அவள் பார்த்த பார்வையில் தொனித்த சோகம், என்னை வாட்டி, என் இதயத்தைத் தாக்கி கியது. 'அவளுடைய மனத்தில் என்ன எண்ணங்கள் உண்டாகி யிருக்கும்?' என்று ஊகிக்க முயன் றேன்.

"எனக்குக் கணவனுக வந்திருக்க வேண்டியவரல்லவா நீங்கள்? பாழும் ஜாதகம் குறுக்கே வந்து சதி செய்துவிட்டதே," என்றுதான் அவள் மனம் எண்ணிக் கொண்டி ருக்கும், என்று எண்ணினேன். அப்படித்தான் அவள் தன் இத யத்திற்குள் கேட்டுக் கொண்டிருப் பாள் என்று அவளுடைய அதரங் களின் துடிப்பு உணர்த்தியது. என் மனம் சிந்தனை அலைகளால் கொந் தளித்தது.

வைதேகியின் வயது இருபத் தொன்று ஜயலக்ஷ்மியின் வயதோ பதினெட்டுதான். மூன்று வயது

மூத்தவள் வைதேகி. இருவரும் ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்ந்து வருகிறார்கள். இருவரும் சகோதரிகள். இருவரும் ஒரே வயிற்றில் பிறக்காதது தான் குறை. அந்த ஒரு குறையினால்தான், வைதேகிக்கு முன்னால் ஜயலக்ஷ்மிக்கு விவாகத்தைச் செய்ய மனம் இடங்கொடுக்கிறது. இல்லாவிட்டால் வைதேகிக்கு விவாகம் ஆகும் வரை ஜயம் காத்துக் கொண்டிருக்க வேண்டியதுதானே ?

இந்த நிலையில் வைதேகியின் உள்ளம் எவ்வாறு துடிக்கும் ? அவளுடைய வாலிப உள்ளம் எவ்விதம் குமுறும் ? எவ்வளவு ஏங்கும்? இதையெல்லாம் நினைத்துப் பார்த்த போது, இதற்கு என்ன செய்யலாம் என்று என் மனம் எண்ணமிடலாயிற்று. வைதேகியின் சோக உருவுடன் என் விவாகம் நடைபெறுவது எனக்குச் சம்மதமாகப் படவில்லை. என் மனத்தை இப்போதே அது கவலையிலாழ்த்தி வரும்போது—கல்யாணம் நடக்கும் போது எவ்வளவு வேதனை கொடுக்கும் என்று நினைத்துப் பார்த்தேன். ஆகவே, முதலில் வைதேகிக்கு விவாகம் நடைபெறட்டும். பிறகு நாம் ஜயலக்ஷ்மியை விவாகம்செய்து கொள்ளலாம் என்று நினைத்தேன். அல்லது, இரண்டு விவாகங்களும் ஒரே முகூர்த்தத்தில் நடத்தி விட்டால், பின்னும் நல்லதாய்ப் போய் விட்டது என்றும் எண்ணினேன்.

உடனே என் தீர்மானத்தை என் தகப்பனாரிடம் கூறினேன். அவர்கள் முதலில் திகைத்தார்கள். பிறகு நான் வற்புறுத்தியதும் ஒப்புக் கொண்டார்கள். அவ்விதமே விஸ்வநாதனுக்குக் கடிதம் எழுதி விட்டார்கள்.

4

நாட்கள் ஓடின. ஆறு மாதங்களுக்கு மேல் ஆகி விட்டன. நான் ஜயலக்ஷ்மியைப் பார்த்து விட்டு வந்து. அப்படியும் ஒன்றும் வைதேகிக்கு நல்ல வரனாகக் கிடைக்க வில்லை. அடிக்கடி நாங்களும் அவருக்குக் கடிதம் எழுதி வந்தோம். 'வரன் அகமந்தரா ? என்று கேட்டும்,ஆனால் அவசரப்படாமல் பார்க்கும் படியும், நாங்களும் பார்த்து வருவதாகவும் எழுதினோம்.

அன்று விஸ்வநாதன் கடிதம் எழுதியிருந்தார். "இன்னும் வைதேகிக்கு ஒரு வரனும் தகையவில்லை. அவளுக்குக் குருபலன் என்று வருமோ ? அதுவரை ஜயலக்ஷ்மியின் விவாகத்தைத் தள்ளிப் போடுவது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. அவளுடைய விவாகமாவது சிக்கிரம் நடைபெற்று விட்டால் நன்றாயிருக்கும் என்று தோன்றுகிறது. ஆகவே அடுத்த மாதத்தில் ஒரு முகூர்த்தம் நிச்சயித்து விடலாம் என்றிருக்கிறேன். தாங்கள் இதற்குச் சம்மதிக்க வேண்டுமாய்க் கோருகிறேன்," என்று எழுதியிருந்தார்.

அதைப் பார்த்ததும் எனக்கு வருத்தமாக இருந்தது. ஆனாலும் நான் எண்ணினபடி நடக்காமல் இருப்பதா ? என்று தோன்றிற்று. அவர் ஒரு வேளை நாம் கடைசியில் அவரை ஏமாற்றி விடுவோம் என்று எண்ணி விட்டாரோ ? என்று சந்தேகமுண்டாயிற்று. உடனே அப்பாவிடம் சொல்லி அவருக்கு அவ்விதம் ஏதேனும் சந்தேகமிருந்தால் அது நீங்கும்படியாகக் கடிதம் எழுதச் சொன்னேன். என் தகப்பனாரும், "ஜயலக்ஷ்மியின் கல்யாணத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப் பட வேண்டாம். அவள் எப்படியும் என் மருமகள். நாங்கள் கொடுத்த வாக்கை மீறமாட்டோம். அதனால் நிதானமாக வைதேகியின் விவாகத்தை நிச்சயம் செய்யுங்கள்," என்று எழுதினார்.

விஸ்வநாதனும் வைதேகிக்கு எவ்வளவோ கஷ்டப்பட்டு வரன்

தேடினர். ஒரு வழியாக எப்படியோ ஒரு வரன் நிச்சயமாயிற்று. அவர் இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு ஊர் ஊராய்ப் போய்த் தேடிய பிறகு வைதேகியின் மாப்பிள்ளை அவருடைய ஊரிலேயேதான் இருக்கிறான் என்பதைக் கண்டார்.

வைதேகி, ஜயலக்ஷ்மி ஆகியஇருவர் விவாகங்களும், ஒரே தேதியில் ஒரே முகூர்த்தத்தில் நிச்சயம் செய்யப்பட்டன.

5

நாங்கள் விவாகத்திற்கு முதல் நாள் கோயமுத்தூர் போய்ச் சேர்ந்தோம். எங்களுக்குப் பிரமாதமாய் வரவேற்பு நடைபெற்றது. அவருடைய வீட்டுக்குப் பத்து வீடு தள்ளி எங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தது. வைதேகியின் கணவனாக வரப்போகிறவன், அந்த ஊரிலேயே இருந்ததால்அவர்கள் மாலை ஐந்து மணிக்குமேல் நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கே வந்திறங்கினார்கள். நாங்கள் மேல்மாடியில் இருந்தோம். அவர்கள் கீழே இறங்கியிருந்தார்கள்.

நான் மாடியில் பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். கீழே இரண்டுபேர் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவருக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். மற்றவருக்கு இருபத்தாறு, இருபத்தேழு வயதிருக்கும். அந்த இளம் வாலிபன் அழகாக இருந்தான். இருவரும் சகோதரர்கள் போலிருந்தது. வாலிபன் மூத்தவருடன் சிரித்துப்பேசிக் கொண்டிருந்தான். வைதேகியின் கணவனாக வரப்போகிறவன் நன்றாகத்தான் இருக்கிறான், அவள் அதிர்ஷ்டக்காரிதான் என்று நினைத்தேன்.

அப்போது ஏதோ வேலையாகப் பெண் வீட்டுக்காரர் ஒருவர், என் தகப்பனாரிடம் வந்தார். காரியம் முடிந்து போகும்போது நான் அவரைக் கூப்பிட்டேன். "மாப்பிள்ளை என்ன வேலை செய்கிறார்?", என்று கேட்டேன்.

"அவர் ஒரு கம்பெனி வைத்திருக்கிறார்,"

"அப்படியா? வைதேகி அதிர்ஷ்டசாலிதான்"

"ஆனால்..."

"என்ன ஆனால் என்று இழுக்கிறீர்கள்? என்ன சமாசாரம்?" என்று பதறிக் கேட்டேன்.

"இரண்டாந்தாரம் என்றால்... எவ்வளவு பணம் இருந்து என்ன பிரயோசனம்?"

"இரண்டாந்தாரமா?"

"ஆமாம்."

"இவ்வளவு சின்ன வயசிலா மாப்பிள்ளைக்குத் தாரம் தவறி விட்டாள்! பாவம், இருபத்தைந்து வயசுதான் இருக்கும் போல் இருக்கிறது,"

"இருபத்தைந்து வயசா? நன்றாகச் சொன்னீர்கள். நாற்பதுக்கு மேல் ஆகிறது!"

"நாற்பதுக்கு மேலா? அப்போ, மாப்பிள்ளை யார்?"

அவர் வெளியே எட்டிப் பார்த்தார். அதோ பேசிக் கொண்டிருக்கிறாரே பெரியவர், தலை கொஞ்சக் வழுக்கையாக..."

என் தலை சுற்றுவது போல் இருந்தது.

"அவரா? அவரா, வைதேகிக்கு நிச்சயிக்கப்பட்டவர்? எனக்குத் தெரியாதே! நான் சின்னவர் என்றுதான் நினைத்தேன் இவ்வளவு நேரமும்..."

"அவருக்குப் போனவருஷம் தான் கல்யாணமாயிற்று..." என்றார் அவர். "சரி வேலையிருக்கிறது நான் வருகிறேன்", என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

நான் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டேன். "இதெல்லாம் விஸ்வநாதன் தெரிவிக்கவே இல்லையே!"

என்று அவர்மேல் கோபமுண்டாயிற்று.

நான் விடுவிடென்று இறங்கி விஸ்வநாதனிடம் போனேன். வீட்டு வாசலில் வைதேகி நின்று கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் ஒரு பார்வை பார்த்து விட்டுச் சட்டென்று உள்ளே ஓடி விட்டாள். அவள் பார்வை என்னைச் சுட்டெரிப்பதுபோல் இருந்தது.

உள்ளே போனேன். அறையில் அவர் சில்லறைகளை எண்ணிக் கொண்டிருந்தார். அவருடைய மகன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான்.

நான், ''ஸார்,'' என்று குரல் கொடுத்தேன்.

திரும்பிப் பார்த்தார். என்னைப் பார்த்ததும் ஆச்சரியத்தால் திகைத்தார். பிறகு பரபரப்புடன், ''வாருங்கள். உட்காருங்கள். என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''நான் உங்களிடம் தனியாக ஒரு விஷயம் பேசவேண்டும்,'' என்றேன் படபடப்புடன்.

''ராமு, நீ போ, போய் மேளக்காரன் வந்துவிட்டானா பார். இல்லையானால் ஆளை யனுப்பு. நாழி யாகி

றது" என்று கூறி அவனை அனுப்பினார்.

"கிருஷ்ணமூர்த்தி ... சொல்லுங்கள்" என்றார்.

"சார்... இதென்ன அக்கிரமம். நீங்கள் இதைப்பற்றி ஒன்றும் தெரியப்படுத்தவே யில்லையே"

"எதைப் பற்றி? ஒன்றும் புரியவில்லையே"

"அதுதான் ஸார். உங்கள் பெண்ணுக்குத் தேர்ந்தெடுத்திருக்கும் வரனைப் பற்றி... இரண்டாந் தாரம்... வயது நாற்பது... இரண்டு பிள்ளைகள்..."

"அதுவா..." என்று நீட்டிக் கூறிவிட்டு வரண்ட சிரிப்பு சிரித்தார். பிறகு, "அதற்கென்ன செய்யலாம்? அவள் அதிர்ஷ்டம்..." என்றார்.

"இது கொஞ்சம் கூட சரியில்லை ஸார்... நான் அவசரப்படுத்த வில்லையே? இன்னும் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் காத்திருக்கிறேன் என்றுதானே சொன்னேன்? அதற்குள் அவசரப் பட்டு இந்த விவாகத்தை ஏன் நிச்சயித்தீர்கள்? இதற்காகவா, நான் இவ்வளவு பாடுபட்டது. என் நல்லெண்ணத்தை யெல்லாம் பாழாக்கி விட்டீர்களே..." என்றேன், வேதனையுடன்.

"கிருஷ்ணமூர்த்தி..., நீங்கள் ஒன்றுக்கும் மனம் வருந்தாதீர்கள். உங்கள் மேல் எனக்கு எவ்வித கோபமும் இல்லை. உங்கள் நல்லெண்ணத்தை நான் சந்தேகிக்கவில்லை. உங்களுக்காக நான் இந்த விவாகத்தை அவசரப்பட்டு நிச்சயப்படுத்தவுமில்லை. அவளுக்கு ஆண்டவன் எப்படி நிச்சயித்திருக்கிறானோ அப்படித்தானே நடக்கும்? அவள் அதிருஷ்டம் நல்லதாயிருந்தால் எப்போதோ விவாகம் நடைபெற்றிருக்காதா? நான் அவளுக்குப் பதினான்காம் வயதிலிருந்து வரன் தேடினேன்..."

"ஸார், இதில் எனக்கு நம்பிக்கையில்லை. என் மனம் என்னை அரிக்கிறது... இதற்கு நான்தான் காரணவான் என்று என் உள்ளம் இந்த உண்மையை அறிந்தது முதல் சுட்டெரிக்கிறது. நான் நிபந்தனையொன்றும் போடாமலிருந்தால் இவ்விதம் நீங்கள் அவசரப் பட்டிருக்க மாட்டீர்கள் இல்லையா? இப்போது கூட ஒன்றும் முழுகிப் போய் விடவில்லை. உங்களுடைய பெண்ணின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்தியுங்கள். ஜாதகத்தில் எனக்குத் துளிகூட நம்பிக்கையில்லை. நீங்கள் சம்மதித்தால் வைதேகியை நான் மணந்து கொள்கிறேன். சொல்லுங்கள். ஜயாவுக்கு நான் நல்ல வரனாகப் பார்த்து நிச்சயிக்கிறேன் என்ன?" என்று படபடப்புடன் கூறினேன்.

விஸ்வநாதன் சாந்தமாக, "கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் விவாகம் நிச்சயிப்பதையும், நடத்துவதையும் விளையாட்டாக எண்ணிக் கொண்டு விட்டீர்களா? நிச்சயம் செய்த விவாகத்தைத் திடீரென்று மாற்ற முடியுமா? நீங்கள் மனச் சந்தோஷத்துடன் ஜயலக்ஷ்மியை மணந்து கொள்ளுங்கள். நான் மறுபடி கூறுகிறேன். உங்கள்மேல் எவ்வித மன வருத்தமும் எனக்கு இல்லை. உங்கள் நல்லெண்ணத்தை நான் மிகவும் போற்றுகிறேன். ஆனால் அந்த

நல்லெண்ணம் எல்லோருக்கும் சாதகமாக அமைந்து விடுவதில்லை, அவ்வளவுதான்'' என்ருர்.

"கடைசியில் உங்கள் முடிவு அவ்வளவுதாளு ஸார்?'' நான் மன முடைந்து போய்க் கேட்டேன்.

"வேறு வழியில்லை கிருஷ்ண மூர்த்தி...!'' என்று மனதைக் கல்லாக்கி கொண்டு, ஒரு புன்னகையுடன் கூறினர்.

நான் உயிரிழந்தவன்போல்— வெறும் இயந்திரம் செயல் படுவது போல் எழுந்து நடந்தேன். அப்போது வைதேகி எதிர்ப் பட்டாள். நான் அவளை ஏறெடுத்துப் பார்க்கத் தைரியமின்றிக் குனிந்து நடந்தேன்.

* * * *

"என் மனம் இன்றுகூட என் செயலைக் குறித்து வருத்தப்படுகிறது. என் மாமனர் எவ்வளவு ஆறுதல் வேண்டுமானலும் கூறியிருக்கலாம். அது மனப் பூர்வமானதோ, அல்லது என் மனச்சாந்திக்காகவோ. ஆனல், என்னல் அதை அடைய முடியவில்லை. நான் வைதேகியைப் பார்க்கும் போதெல்லாம் என் மனம் வேதனையடையும். வைதேகிகூட நாளடைவில் மனத்தைச் சந்தோஷமான தாக்கிக் கொண்டு விட்டாள். எனக்கு ஏனே நிம்மதி கிடைக்கவில்லை. நான் முதலிலேயே ஜயலக்ஷ்மியை விவாகம் செய்து கொண்டிருந்தால், வைதேகி நல்ல கணவனை அடைந்து இன்னும் சந்தோஷமாய் இருந்திருப்பாளே என்ற எண்ணம் என்னை வாட்டிக் கொண்டு இருக்கிறது''.

கிருஷ்ணமூர்த்தியின் இந்த வரலாற்றைக் கேட்டதும், "அப்பா... உங்கள் இஷ்டப்படியே முகூர்த்தம் நிச்சயிக்கும்படி எழுதி விடுங்கள்.'' என்று கூறினன், வெங்கட்ராமன்.

வெங்கட்ராமனுடைய விவாக முகூர்த்தத்தை நிச்சயித்து எழுதிய அவனுடைய எதிர்கால மாமனர் தம்முடைய தங்கையின் பெண்ணுக்கும் கல்யாண நிச்சயமாகி விட்டதென்றும், இரண்டு கல்யாணங்களும் ஒரே முகூர்த்தத்தில் நடக்குமென்றும் எழுதியிருந்தார். அதைக் கண்டு வெங்கடராமனுக்கும் மிக மகிழ்ச்சியாகப் போய்விட்டது. தன் நல்லெண்ணம் வெளியே தெரிவிக்கப்படாமலே, நிறைவேறி விட்டது குறித்து சந்தோஷமடைந்தான்.

கல்யாணத்தின் போது, அந்த இரண்டாவது மாப்பிள்ளையைப் பார்த்ததும் பின்னும் திருப்தியாகப் போய்விட்டது. அவன் வைதேகியின் மணுளனைப் போல் இல்லாமல், இளம் வாலிபனய், வாட்டசாட்டமாய் இருந்தான்!

எங்கள் கம்பெனியில் நயம் அரைத்த உப்பு
நயம் பருமணி உப்பு (97% Nacl)
கல்கத்தா, பீகார், ஒரிஸா, மத்திய
பிரதேஷ், கேரளா முதலிய
இடங்களுக்குச் சப்ளை செய்து
கொண்டிருக்கிறோம்.

தேவைப்படுகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதி
தெரிந்து கொள்ளவும்:

மச்சாது சால்ட் கம்பெனி

18-A, பீச் ரோடு, தூத்துக்குடி.

Phone : 1 & 333 Tel. Address: MACSALT

Telephone : MADRAS 4890. MADURAI : 581

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை . மதராஸ் . பெங்களூர் . விஜயவாடா

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்

உடுமலைப்பேட்டை.

தந்தி : "VENKATESA" போன் : 66

எல்லா வகையிலும் முன்னணியில் நிற்கும்
ஒரு தென்னிந்திய பஞ்சாலை.

நூல் :— 20, 40, 60, 80 பருத்தி நூல்
2/40 செயற்கையிழை நூல்.

துணி:— '801' & '1001' மல்.
'SV 35' & 'SV 555' லாங்க்ளாத்

நிர்வாகப் பொறுப்பினர் :—

G. V. கோவிந்தசாமி நாயுடு & கம்பெனி

ஆலை நிர்வாகி:—

R. [illegible], B.A., B.Sc.(Tech) A.T.I.

இசைக்குயில்கள் வரிசை

ஜிக்கி

"தென்னாட்டு லதா மங்கேஷ்காருக்கு ஜே!"

உற்சாகத்துடன் இப்படி கோஷம் போட்டார்கள், திருநெல்வேலி இந்துக் கல்லூரி மாணவர்கள், சென்ற வருடத்திலே ஒரு நாள்.

'தென்னாட்டு லதா' என்று அவர்கள் குறிப்பிட்டது 'ஜிக்கி'யைத் தான்!

ஜிக்கி சொன்னார்! "நான் திருநெல்வேலி சந்திப்பு வெயிட்டிங் ரூமில், முக்கூடல் கச்சேரிக்குப் போய்விட்டு வந்து காத்திருந்தேன். அன்று வண்டி எதிர்பாராத விதமாகத் தாமதமாகி விட்டது. நான் வந்தது எப்படியோ தெரிந்து, அருகிலுள்ள இந்துக் கல்லூரி மாணவர்கள் ரெயில் நிலையத்தில் கூடிவிட்டார்கள். 'ஆட்டோகிராப்' போட்டு, போட்டு என் கை ஓய்ந்தே விட்டது. அவ்வளவு நோட்டுகள்! நான் பாடிய பாடல்களெல்லாம் பாடி ஒரே அமர்க்களம் பண்ணி விட்டார்கள். வண்டி புறப்படும்போது, 'தென்னாட்டு லதா மங்கேஷ்காருக்கு ஜே!' என்று சத்தம் போட்டார்கள். அப்பொழுதுதான், என்மீது எவ்வளவு அன்பு இந்த ரசிக உள்ளங்கள் கொண்டுள்ளன என்பது தெரிந்தது!" தென்னகத்துத் திரை உலகின் முன்னணி இசைக் குயிலான ஜிக்கி, "தாங்கள் மிகவும் ரசித்த வாழ்க்கைச் சம்பவம் எது?" என்ற என் கேள்விக்கு இப்படி பதில் சொன்னார்கள்.

திரைப்பட இசை ரசிக உள்ளங்களை எல்லாம் இந்த அளவிற்கு ஒரே மொத்தமாகக் கொள்ளை அடித்துள்ள இந்தக் கொள்ளைக்காரி ஜிக்கியை இந்த இசைக்குயில்கள் வரிசைக்காக நான் பிடிப்பதற்குள் பெரும்பாடு பட்டுவிட்டேன். ராமதூதன் அனுமார் கடலைத் தாண்டியது போலத் தாண்டவேண்டியிருந்தது! கடைசியிலே 'கண்டேன் ஜிக்கியை!' என்று இப்பக்கத்திலே எழுதும் பொழுது, பிராட்டியைக் கண்டு பிரானிடம் சொன்ன அனுமனைப் போல, எவரெஸ்டைக் கண்ட டென்சிங்கைப் போல மகிழ்ச்சி அடைகிறேன்!

*

MSY 4204 க்கும், அதன் உரிமையாளரான இந்த இசைக்குயிலுக்கும், ஓய்வே இல்லை. கார் ஓடிக்கொண்டே இருக்கிறது. இந்தக் குயிலும் பாடிக்கொண்டே இருக்கிறார்!

காலையிலிருந்து இரவு வரை ஓயாத, ஒழியாத உழைப்பு. மேஜை மீது உள்ள குறிப்புப் புத்தகத்தில் முழுவதுமாக இந்தப் பிக்சர்ஸ், அந்த ஸ்டுடியோ என்று நேரம் போட்டு வைத்திருக்கிறார்கள்; ஜிக்கியின் வேலைத் திட்டத்தை ஒழுங்குசெய்ய ஒரு குட்டி 'செகரட்டரியேட்'டே இயங்கிக் கொண்டுள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! களைப்பாக, 'மனமுள்ள மறுதார'த்திற்குப் பாடிவிட்டு சாப்பிட வந்தார் ஜிக்கி, பகல் இரண்டே முக்கால் மணிக்கு. எங்களைப் பார்த்ததும் "மூன்று மணிக்கு விஜயா பிலிம்ஸ் போக வேண்டுமே?" என்றார்.

நான் முன்பொரு பத்திரிகையிலே ராகு காலத்தில் அவர் வெளியே புறப்படமாட்டார் என்பதைப் படித்திருந்தேன். எனவே கொட்டை எழுத்தில் எழுதிப் போட்டிருந்த ராகுகால அட்டையைக் காட்டி '[illegible]

என்னுடைய முதல் வாதம் இப்படி முறிந்து விட்டது.

'இன்று 'ரிகார்டிங்' இல்லை. நேற்றெடுத்த 'டேக்' சரியில்லையாம்' என்று ஓர் குரல் அசரீரியாக அப்பொழுதுதான் வந்த விஜயா பிலிம்ஸ் ஆள் வாயிலாக ஒலித்த பிறகுதான், போன உயிர் எனக்குத் திரும்பி வந்தது. 'வாழ்க விஜயா பிலம்ஸின் சரியாக எடுக்கப்படாத இசைத் தட்டு' என்று அதற்கு வாழ்த்துப் பாடியது என் உள்ளம்!

★

'உங்களுக்கு பி. ஜி. கிருஷ்ண வேணியைத் தெரியுமா?' என்று சினிமா ரசிகர்கள் யாரிடமாவது கேட்டால், 'தெரியாது' என்றுதான் தலையை ஆட்டுவார்கள் அநேகமாக.

'ஜிக்கியைத் தெரியுமா?' என்று கேளுங்கள்!

'என்ன ஸார், இப்படிக் கேட்கிறீர்கள்! ஜிக்கியைத் தெரியாத சினிமா ரசிகரும் உண்டா?' என்று 'பளிச்' பதில் கிடைக்கும்!

பி. ஜி. கே. என்பதின் மரூஉ தான் 'ஜிக்கி' என்பது பலருக்குப்புரியாத புதுச் செய்தி!

டஜனுக்கும் அதிகமான சகோதர சகோதரிகளுடன் மூத்தவராகப் பிறந்தவர் ஜிக்கி. தந்தையார் திரு. கஜபதி நாயுடு; பிறந்த இடம் சென்னை தான். ஏழு வயதிலேயே சினிமாவிலே பாட ஆரம்பித்த ஜிக்கிக்கு இன்று வயது இருபத்தி மூன்று. அதாவது பதினேழு வருட 'சர்வீஸ்!'

தெலுங்குப் படங்களில் பாடிக் கொண்டிருந்த குமாரி ஜிக்கிக்கு, தமிழ்ப் பட உலக அருள் கிடைத்தது, 'ஞானசௌந்தரி'யில் பாடிய 'அருள் தாரும் தேவமாதாவே!' மூலமாக. பிறகு, மந்திரி குமாரியில் 'உலவும் தென்றல் காற்றினிலே' பாடல், அவரது தமிழ் படவுலகின் வெற்றி உலாவிற்கு ஆரம்பமாக அமைந்தது.

இந்தியில் 'ஏக்தா ராஜா' 'மிஸ்டர் சம்பத்' 'ராணி' 'குலேபகாவலி'யின் இந்திப் பதிப்பு போன்ற படங்களில் பாடியுள்ளார் ஜிக்கி. பிரபல இந்தி டைரக்டர்களான, நௌஷாத் சங்கர் — ஜெய்கிஷன் ஆகியோர் டைரக்ஷனிலும் பாடியிருக்கிறார் இவர்.

'தாங்கள் பாடிய பாடல்கள் சுமாராக எவ்வளவு?' என்ற கேள்விக்கு அவரால் சரியாக பதில் சொல்ல முடியவில்லை.

'அதோ! அந்தக் காகிதக் கட்டைப் பாருங்கள்! ஒவ்வொரு காகிதமும் ஒரு பாடல் தான். ஸ்டுடியோவிலிருந்து வந்ததும், அதில் பாடலின் பிரதியைப் போட்டு வைக்கிறேன்' என்று சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தால், ஒரு ஆள் உயரத்திற்குக் காகிதங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன! ஒவ்வொரு காகிதமும், ஒரு பாடல் என்றால், அங்கே ஆயிரக் கணக்கில் காகிதங்கள்! எனவே ஜிக்கி பாடியுள்ள பாடல்களும், சில ஆயிரங்கள்!

'இவ்வளவு பாடல்கள் பாடியிருக்

கிறீர்களே? உங்களுக்கு மிகவும் இவற்றிலே பிடித்தது எது?'

'அவன்' படத்திலே 'அன்பே வா' என்ற பாடல்'

'நீங்கள் சங்கீதம் யாரிடம் கற்றீர்கள்?'

'நான் சங்கீதம் முறைப்படி யாரிடமும் படிக்கவில்லை. எல்லாம் கேள்வி ஞானம் தான். ஒரு பத்திரிகையில் எழுதியதுபோல, கிராமபோனும், ரேடியோவும் தான் என் குரு!'

'நீங்கள் கர்நாடக சங்கீதத்தை விரும்புகிறீர்களா?'

'அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்! 'பெண்ணின் பெருமை'யில் 'கண்ணு மறையாதேடா'! என்ற பாடலும், 'சந்தானத்தில்' 'அம்மா பாரம்மா' வும் என்னால் பாடப்பெற்ற கர்நாடக இசைத்தட்டுகள் ஆயிற்றே!'

அநேகமாக சென்னையில் எடுக்கப் படுகின்ற எல்லாப் படங்களிலும் ஜிக்கி பாடிவருகிறார். அவர் பாடாத படங்கள் மிக, மிகச் சொற்பம். இதுதவிர, தனி இசைத் தட்டுகள் வேறு பாடுகிறார்.

'எல்லாம் ஏசுவே! எனக்கெல்லாம் ஏசுவே!' என்ற மிகவும் பிரபலம் அடைந்துள்ள பாடல் அவரால் தனி இசைத் தட்டு ஒன்றில் பாடப்பட்டதுதான்.

சுவரிலே தொங்கிய உலகப் படத்தைச் சுட்டிக் காண்பித்து, 'உலகப் படத்தை மாட்டி வைத்திருக்கிறீர்களே! உலகம் சுற்றும் ஆசை உண்டா?' என்றுகேட்டேன்.

'ஆசை என்பதே எனக்கில்லை; சாதாரணமானவளாக இருந்த எனக்கு இவ்வளவு பெயரும், புகழும் நான் எதிர்பாராமலே வந்து விட்டன. கல்யாணமானதும் காஷ்மீர் போகவேண்டும். இதுதான் ஒரே ஆசை!' என்று சொன்னார்.

'கல்யாணமானபிறகு, கணவன் உத்திரவு தந்தால்தான் பாடுவேன். இல்லாவிட்டால் கிடையாது' மிக அடக்கமாக இந்த பதில் கிடைத்தது.

இந்த இசைக்குயில், விரைவிலேயே இசை மன்னன் திரு. ஏ. எம். ராஜாவின் இல்லாளாகப் போகிறாள் என்பது நாடறிந்த செய்தி ஆயிற்றே! குமாரி ஜிக்கியே சொன்னார்கள், வருகிற ஜூன்மாதம் 26 ந்தேதி கல்யாணம் நடைபெறப் போகிறது என்று!

குழந்தை உள்ளமும், குயிலின் குரலும் பெற்றுள்ள இந்த இசைக் குயில், ரோஸ், சிவப்பு, கருப்பு வர்ணங்கள் தனக்குப் பிடித்தவை என்று சொல்கிறார்கள். அணிகளை விட ஆடையில் தான் அவர் அதிக கவனம் செலுத்துகிறாராம். ஆபரணங்களில், வளையல்கள் மாத்திரம் எப்பொழுதும் கை நிறைய இருக்க விரும்புகிறார்.

சினிமா பார்க்கப் போவதற்குக் கூட நேரம் கிடையாது. வீட்டிலே மூன்று ரேடியோக்கள் இருந்தும் பாடல்களைக் கேட்க முடிவதில்லையே! என்ற வருத்தம் இவருக்கு உள்ளது.

'புதுமலம்' வாசக நேயர்களுக்காக உங்களுக்கு கலியாண அழைப்பிதழ் வரும், கட்டாயம் வாருங்கள்!'

பேட்டி முடிவிலே இவ்வாறு கூறினார் இசைக்குயில் ஜிக்கி.

கரம் கூப்பி வெளிநடந்தேன். 'MSY 4204 பியட் காரே! உன் டயர்கள் தேயட்டும்...குமாரி ஜிக்கி பாடும் இசைத் தட்டுகள் எண்ணிக்கையும் வளரட்டும்' என்று காரையும் வலம் வந்து நகர்ந்தேன்.

வாசலிலே இருந்த வாழைமரங்கள் தலையாட்டி விடை கொடுத்தன.

தென்னாட்டு லதாவின் புகழ் எல்லா நாடுகளிலும் பரவட்டும் என்று வாழ்த்தியது உள்ளம்.

—"ஆரெஸ்ஸஸ்"

பி. ஏ. எஸ். புரொடக்ஷன்ஸ் :

செஞ்சு லக்ஷ்மி

" சால பாக உந்தண்டீ! "

ஆந்திர நாட்டு ரசிகர்கள் அளித்த இந்தத் தீர்ப்பு முத்திரையோடு, தமிழ் நாட்டில் உலாவ வந்திருக்கிறாள் செஞ்சுலக்ஷ்மி.

கதைகளிலே பஞ்சம் ஏற்படும் பொழுது புராணப் பக்கம் திரும்புவது, தென்னாட்டு முதலாளிகளின் வழக்கம்தானே ? அந்த நியதிப்படி எல்லோருக்கும் தெரிந்த பிரகலாதன் வரலாறும், அதை ஒட்டிய கற்பனையும் தான் செஞ்சுலக்ஷ்மியின் கதையாக உருவாகியுள்ளன.

சமுத்திராஜன் ஒரு சாபத்தினால், செஞ்சு நாட்டு மன்னனாக பூவுலகில் இருக்கும் பொழுது, இரண்யனுக்குப் பயந்து விஷ்ணுவும், லக்ஷ்மியும் பூவுலகில் மறைந்து வாழ்கிறார்கள். நாரதர் சூழ்ச்சியால் லக்ஷ்மி, செஞ்சு மன்னன் மகளாகப் பிறக்கிறாள். உற்ற காலத்தில், நரசிம்மமாக அவதாரம் செய்து இரண்யனைக் கொன்ற பிறகு, விஷ்ணு உக்ரம் தீராது காட்டில் அலைகிறார். செஞ்சு லக்ஷ்மியையும், அவரையும் நாரதர் இணைத்து வைக்கிறார். கோபம் மறைந்து சாந்தம் பிறக்கிறது.

செஞ்சுலக்ஷ்மியும், லக்ஷ்மியும் சிறிது சக்களத்திப் போராட்டம் நடத்திப் பிறகு இருவரும் ஒருவரே என உணர்ந்து ஒன்றாகிறார்கள். எல்லாம் சுபமாக முடிகிறது. லக்ஷ்மி, விஷ்ணு பாற்கடலுக்குத் திரும்ப, சமுத்திரராஜன் தனது அரண்மனைக்குத் திரும்ப, நாரதர் சஞ்சாரத்திற்குக் கிளம்ப, நாமும் படம் முடிந்து வீடு திரும்புகிறோம்!

மகாவிஷ்ணுவாக வரும் ஏ. நாகேஸ்வர ராவ் கம்பீரமாக நன்கு நடித்துள்ளார்.

இரண்யன் ரங்கராவை, இராவணன் பகவதியோடு எடை போட்டுப் பார்த்தால் தராசின் முனை மத்தியிலே நிற்கும், ஆடாது, அசையாது !

நாரதராகத் தங்கவேலு வருகிறார். இல்லை; இல்லை வந்து கொண்டே இருக்கிறார்! மேகத்தின் மத்தியிலே முதலில் வருவதிலிருந்து கடைசியில் கடலிலே நிற்பதுவரை அவருக்கு ஓயாத உழைப்பு! மூன்று இரவல்குரல்களில் 11 பாடல்களுக்கு வாயை அசைக்கிறார்! தம்புராவை என்னவோ அதிகம் மீட்டவே இல்லை ! நடிப்பைக் கேட்கிறீர்களா ? புதிய ஓர் பாகமாக இருந்தாலும், மிகப் பொருத்தமாகச் செய்து விட்டார் தங்கவேலு! 'இரண்ய கசபுவே...நமக!' என்று சொல்லும் பொழுது...பிரமாதம் !

சமுத்ர ராஜனாகவும், செஞ்சு மன்னனாகவும் வரும் சகாதேவன் சுமார்.

நகைச்சுவை பாகம் ஏற்றுள்ள சாயிராம், சேதுராம் ஜோடியும், சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்; கே. எஸ். ரெட்டி கோஷ்டியும் நன்றாகத் தங்களது இடங்களைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். மன்னன் மகனை அடிக்க முடியாது, மற்றப் பிள்ளைகளை சாயிராம் வெளுத்து வாங்குவது இயற்கையாகவுள்ளது. வெங்கட்ராமன்-ரெட்டி பேச்சில் காட்டுப் புறத்தானின் காரத்தை விட சென்னை ரிக்ஷாக்காரனின்

நாரதரும், நாராயணனும் யாரை இப்படி ஆச்சரியத்தோடு பார்க்கிருர்கள்? (பி. ஏ. எஸ். 'செஞ்சுலக்ஷ்மி'யில்)

'வாடை' அதிகம் வீசுகிறது. 'கராக்கி' 'குயங்தை' எடுத்துக் காட்டுகள்.

பிரஹலாதனுகவே ஒன்றி விட்டார் மாஸ்டர் பாப்ஜி. நமது பாராட்டுகள்.

இரட்டை வேடங்களில் சக்கைப் போடு போடுகிருர் அஞ்சலி தேவி. கணவன் சக்களத்தியிடம் போய் விட்டது குறித்து தந்தையிடம் முறையிடும் செஞ்சுலக்ஷ்மி உள்ளத்தைத் தொடுகிருள்.

செஞ்சு மன்னன் மனைவி, கங்கம்மாவான சந்தியாவிற்கு நடிக்க சந்தர்ப்பமில்லை! இரணியன் மனைவியாக வரும் புஷ்பவல்லியின் கண்ணீரில் புதுமையும் இல்லை!'

ஆனுல் அங்கமுத்துவின் ஒயிலு கும்மி பிரமாதம், போங்கள்! 'கொல்' என்று கொட்டகையே அதிர்கிறது!

தந்திரக் காட்சிகள் நன்கு எடுக்கப்பட்டுள்ளன. அவுட்டோரில் அதிகம் எடுத்து யதார்த்தமாக செய்ததற்கு நமது 'சபாஷ்.'

முழுசாக 2 டஜன் பாடல்கள்; 17,214' படத்தில் 50% பாடல்களை ஒட்டிய கட்டங்கள்தான் என்ருலும் பாபநாசம் சிவன், தஞ்சை ராமையா தாஸ், எம். எஸ். சுப்பிரமணியத்தின் சிறந்த பாடலமைப்பும் இராஜேஸ்வரராவின் சிறந்த இசையமைப்பும், பின்னணி இசைக் குயில்களின் ஒத்துழைப்பும் இழைந்து பல நல்ல பாடல்களை இப்படத்தில் உருவாக்கி உள்ளன. 'உயர் கருணு மூர்த்தி பெருமை எவர் கண்டார்,' 'மரத்தில் ஏறு வாயா,' 'ஆனந்த மீதே அளிகுல வேணி' காதுக்கு இனிமையாக உள்ளன. 'செங்கமல கண்ணனுக்குத் தொண்டு செய்யாக் காயம்' 'வானுலகின் மந்தார மலர் மதுவுண்ணும் வண்டு' என்ற பாபநாசம் சிவனின் பாடல்கள் பொருள் பொதிந்தவை.

நமது தீர்ப்பு-ஆந்திர நாட்டு ரசிகர்களைப் போல 'சால பாக உந்தண்டீ!' என்று சொல்லாவிட்டாலும் கூட, தமிழ் நாட்டு ரசிகர்கள், 'பரவாயில்லை ஸார்! பாடல்களுக்காகவாவது ஒரு முறை பாருங்கள்!' என்றுதான் செஞ்சு லக்ஷ்மியைப் பார்க்காதவர்களிடம் சொல்லப் போகிருர்கள்!

—"ரசிகன்"

Tel: PREMIER Phone No. 66

THE PREMIER LITHO WORKS

Post Box No. 37

P. K. S. STREET, SIVAKASI (S. INDIA)

Creative Lithographers and offset Printers,

(Premier House for Attractive Calenders, Posters, Invitations for all commodities)

We undertake the printing of lables for matches, Beedies, Fireworks etc., soap wrappers waxed and ordinary.

Speciality : **PHOTO OFFSET PRINTING.**

பிரீமியர் லித்தோ ஒர்க்ஸ்,

தபால் பெட்டி 37, சிவகாசி

அழகான கலர் காலண்டர்கள், போஸ்டர்கள், அழைப்பிதழ்கள், சோப் ராப்பர்கள், சோப் லேபில்கள், தீப்பெட்டி, பீடி, வாண தொழிற்சாலைகளுக்கான லேபிள்கள் பிரிண்ட் செய்கிறோம்.

தபால் பெட்டி எண்: **69**

நாடு முழுவதும் மாத்திரமல்ல......

நாநிலம் எங்கும் புகழ் பெற்றவை

எங்கள் பட்டாசு ரகங்களும்,

மத்தாப்பு வகைகளும்......!

தி ஸதர்ன் இண்டியா எக்ஸ்போர்டிங் கம்பெனி

சிவகாசி. *(தென் இந்தியா)*

"சுமங்கலி"

ராஜேஸ்வரி பிலிம்ஸாரின் "சுமங்கலி" வாஹினி, நரசு ஸ்டூடியோக்களில் வளர்ந்து வருகிறாள். அதி விரைவில் அவளைத் திரைக்கு அனுப்ப முழுமூச்சுடன் முயன்று வருகிறார் தயாரிப்பாளர், திரு. தாண்டவன். ஈ. வி. சரோஜா, பாலாஜி, ஈ. ஆர். சகாதேவன், பக்கிரி, மோகனா ஆகியோர் நடிக்கும் இப்படத்தை, திரு. எம். கே. ஆர். நம்பியார் டைரக்ட் செய்து வருகிறார். வடூவூர் துரைசாமி அய்யங்காரின் மூலத்திற்கு, திரைக் கதையும், வசனமும் 'என் தங்கை' நடராஜனால் எழுதப்பட்டுள்ளன.

"தங்கரத்தினம்"

நாடக மேடையிலே வெற்றிமுரசு கொட்டிய 'புது வெள்ளம்', எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸாரால் 'தங்கரத்தின'மாகச் சுடப்பட்டு வருகிறது. இலட்சிய நடிகர் திரு. எஸ். எஸ். இராஜேந்திரனின் இப்படத்தை, திரு. எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்கிறார். பாரமவுண்ட் ஸ்டூடியோவில் வளரும் இப்படத்தில், எஸ். எஸ். இராஜேந்திரன், பிரேம்நசீர், எம். என். ராஜம், ராஜசுலோசனா, விஜயகுமாரி ஆகியோர் நடிக்கிறார்கள்.

"தேடிவந்த செல்வம்"

அரசு பிக்சர்ஸாரின், 'தேடிவந்த செல்வத்'தில், எஸ்.எஸ். இராஜேந்திரன், டி. எஸ். பாலையா, வி. கே. ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், ராஜசுலோசனா ஆகியோர் நடிக்கிறார்கள். டைரக்டர் ப. நீலகண்டன் பொறுப்பில் உருவாகும் இப்படத்தின் கதை வசனம், 'பதிபக்திபுகழ்' எம். எஸ். சோலைமலையால் தீட்டப்பட்டு உள்ளது.

"விக்கிரமாதித்தன்"

பாரத் புரொடக்ஷன்ஸாரின் பிரம்மாண்டமான தயாரிப்பான, 'விக்கிரமாதித்தனில்' எம். ஜி. ராமச்சந்திரன், ஸ்ரீரஞ்சனி, ருஷ்யேந்திரமணி, ஓ. ஏ. கே. தேவர், வீரப்பா, மற்றும் பலர் நடிக்கிறார்கள். திரு. டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்யும் இப்படத்தின் கதை, வசனப் பொறுப்பு என் தங்கை நடராஜனிடம் உள்ளது. வாஹினி ஸ்டூடியோவை விட்டு, விக்கிரமாதித்தன் சீக்கிரமே வெளியே விஜயம் செய்யலாம் என்று தெரிகிறது.

"பெரியகோவில்"

'தை பிறந்தால் வழி பிறக்கும்' படத்தை எடுத்து வெற்றி கண்ட திரு. ஏ. கே. வேலன், 'பெரிய கோவிலை' பாரமவுண்ட் ஸ்டூடியோவில் உருவாக்கி வருகிறார். அவரது பேனாமுனையே, இப்படத்தின் கதை, வசனத்தைப் படைத்துள்ளது. பிரேம்நசீர், சலாம், எம். என். ராஜம் போன்ற நட்சத்திரங்கள் பெரிய கோவிலிலே நடமாடுகிறார்கள்.

"செங்கோட்டைச் சிங்கம்"

'தாய்க்குப்பின் தாரம்' 'நீலமலைத் திருடன்' போன்ற வெற்றிப் படங்களை வெளியிட்ட தேவர் பிலிம்ஸார், 'செங்கோட்டைச் சிங்கத்தை' காமிராச் சிறையில் அடைத்து வருகிறார்கள்! வாஹினி ஸ்டூடியோவில் சுடப்படும் இப்படத்தின் கதை திரு. சின்னப்பத் தேவராலேயே எழுதப்பட்டுள்ளது. புரட்சி தாசனின் வசனம்; பாலையா, ஈ. ஆர். சகாதேவன், பி. எஸ். வீரப்பா, சரோஜாதேவி ஆகியோர் நடிக்கும் இப்படத்தை, திரு. வி. என். ரெட்டி டைரக்ட் செய்கிறார்.

சகஸ்ரநாமத்தின் கோபத்தைக் கண்டு, ராகினி ஏன் பயப்படவேண்டும்?
மோராக் சீனிவாஸ் பிக்சர்ஸ் 'பாண்டித்தேவன்'

ஜூபிடர் 'அரசிளங்குமரி'யில் பத்மினி, ராஜசுலோசன.

'யார் இவர்கள்? ஏன் இந்த மகிழ்ச்சி?' என்பது
ராஜேஸ்வரி பிலிம்ஸ் 'சுமங்கலி'யைப் பார்த்தால் தெரியும்.

மனது நிறைந்தால் மகிழ்ச்சிதானே ?
நீலா பிலிம்ஸாரின் 'நீலாவுக்கு நிறைஞ்ச மனசி'ல் ஒரு காட்சி.

நாடக மேடையிலே!

சென்ற மாதம் 17-ம் தேதி மாலை, தியாகராஜநகர் வாணி மகாலில் நவநிதி நாடக மன்றத்தாரின், 'சக்ரவர்த்தி அசோகன்' என்ற சரித்திர நாடகம் நடைபெற்றது. திரு. கே. நடராஜன் அவர்கள் கதை, வசனங்களை எழுதியுள்ளார். கதை அமைப்பில் கோளாறுகள் இருப்பினும், வசனங்கள் தூய தமிழில் கேட்பதற்கு இனிமையாக இருந்தன. சரித்திர சம்பவங்களை வைத்து, நாடகங்கள் எழுதும் போது எப்பொழுதுமே மிக கவனமாக இருக்க வேண்டும் என்பதை கதாசிரியர் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அசோகனின் அமைச்சர் கல்லாடராக வரும் கே. ஆர். ராம்ஸிங்கின் நடிப்புத்தான், இந்நாடகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்று சொல்வேன். அவர் பிறவி நடிகர். அவர் நடிப்பில் குறை காண முடியுமா என்ன? பாத்திரத்திற்கு தக்கபடி மிக அமைதியாகவும், அதே சமயத்தில் போர் வெறியைத் தூண்டும் வண்ணமும், மிக நேர்த்தியாக நடித்து நாடகத்தின் தரத்தை உயர்த்தி விட்டார். அசோகனாக வரும் ராஜவேலு என்பவரும், கூடிய மட்டும் பழுதில்லாமல் பாத்திரத்தின் தன்மையைக் காப்பாற்றிவிட்டார். அசோகனின் மகன், மகேந்திரனாக வரும் நெல்லை குமார கணேசன், உண்மையில் மகேந்திரனாகவே மேடையில் தோன்றினர். அவரது வேஷப் பொருத்தமும், கம்பீரமான ராஜநடையும், உணர்ச்சி வசப்பட்ட வசன உச்சரிப்பும், காலஞ் சென்ற பி.யு. சின்னப்பாவை நினைவூட்டுகின்றன. எதிர்காலத் திரை உலகில் இவருக்கு ஏற்றதொரு இடம் காத்திருக்கிறது, என்று துணிந்து சொல்வேன். படாதிபதிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே!

உபகுப்தராக வந்த எஸ். டி. சுப்பையா, தன் இனிய இசையால், அன்பு தவழும் பேச்சால் 'உப குப்தரை' காப்பாற்றி விட்டார். அசோகன் மனைவி மகாதேவியாக நடித்த காந்திமதியும், கலிங்க ராணியாக வரும் மோகனாவும் மற்றும் பலரும் திறம்பட நடித்துள்ளனர். மூன்று மணி நேர முழுநேர நாடகங்களில் நகைச்சுவையே இல்லாதிருந்தால், பார்ப்பவர்களுக்கு அலுப்புத் தட்டி விடும் என்பதை இந்நாடக மன்றத்தார் அறியாதிருப்பது ஏனோ? மொத்தத்தில், நவநிதி நாடக மன்றத்தாருக்கு இது முதல் நாடகமாக இருந்தும் நாடகத்தில் அதிகப் பழுது எதுவும் இன்றி இருப்பது பாராட்டுதலுக்குரியது.

—"சகி"

*

தமிழ் நாடெங்கும் வெற்றிக் கொடி நாட்டி வரும் சென்னை 'வைரம் நாடக சபா'வின் வரலாறு நாடகம் "தேசிங்கு ராஜன்" 16—5—58ல் பொறையார் "மதி ஒளி மின்சார அரங்கில்" நடைபெற்றது!

நெல்லை திரு. வெங்கடாசலம் தீந்தமிழ் நடையிலே வசனங்களை அமைத்திருந்தார்.

திரு. எஸ். அழகப்பன் தேசிங்காக நடித்து, தான் ஒரு சிறந்த நடிகர் என்பதை நிரூபித்து விட்டார். திரு. ஜே. எஸ். பாலையா, முகம்மதுகானாக திறம்பட நடித்தார். திரு. மோகன்ராவ், இராமபாயாக உள்ளம் உருக நடித்தார்.

நகைச்சுவை இருந்தது! மற்றும் நடனப் பெண்ணுக தோழியர் சுஜாதாராணியும், தேசிங்கின் துணைவியாக ஏ. சகுந்தலாவும் நடித்தனர். மொத்தத்தில், நாடகம் மிக உயர்வாக பாராட்டத் தக்கவகையில் இருந்தது.

முத்து நகையாக மோகனப் புன்னகை பூக்கிருர், பாரத் புரொடக்ஷன்ஸ் **'விக்கிரமாதித்தனி'ல் ஸ்ரீ ரஞ்சனி.**

சந்தா விகிதம்

—

தனிப்பிரதி 25 ந. பை

6 மாதச் சந்தா ரூ. 1-50

வருடச் சந்தா ரூ. 3-00

வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்த புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல் இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூ. 5/- V.P. செலவு ரூ. 1-20

வாணி தமிழ் ஹிந்தி ஆசான்

தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தாமாகவே சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 2-25 V.P. செலவு 75 nP.

தையற்கலை நீங்கள்

கற்றுக்கொண்டீர்களா?

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானுலும் பிறர் ஒத்தாசையில்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். 60க்கு மேற்பட்ட படங்களுடன் வெட்டித் தைக்கும் முறை தமிழ் விளக்கத்துடன் உள்ள புத்தகம்.

விலை ரூ. 3/- V.P. செலவு ரூ. 1/-

NATHAN BOOK DEPOT,

9, Krishnappa Maistry St.,
Madras-3.

197694

நாட்டியம்

ரஞ்சன், பி.ஏ., எம். லிட்.

வாசிகாபிநயம் :—இது உச்சரிப்பு, ஒலி வேறுபாடு, மொழி நயம், ஓசை யின்பம் முதலியவைகளைப் பற்றியது.

ஆகார்யாபிநயம் :—இது, உடை, அலங்காரம் முதலியவைகளைப் பற்றியது. ஒரு பாத்திரத்தினுடைய இனம், குலம், தகுதி, சமூகத்தில் பெற்றுள்ள இடம் இவைகளைப் பாகுபாடு செய்ய எவ்விதம் அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்பதை இது விவரிக்கும்.

சாத்விகாபிநயம் :—சமாதி நிலை, வியர்த்தல், மயிர் சிலிர்த்தல், குரல் மாற்றம், நடுக்கம், நிறவேறுபாடு, பாஷ்பம், மூர்ச்சித்தல் என்ற எட்டு மெய்ப்பாடுகளைப் பற்றியது. இவைகள் சைகைகளாலும், அங்க அசைவுகளாலுமே வெளியிடப்படுவதால், ஆங்கிகாபிநயத்திற்கு உட்பட்டது தான் என்று தற்கால ஆராய்ச்சியாளர்கள் வாதாடுகின்றனர். அபிநய வகைகள் இருந்தும், ஒரு நடன் இதை உணராததாலோ, அல்லது சரியான கலைப்பயிற்சி இல்லாததாலோ, சாத்வீக அபிநயத்திலிருந்து பிறழ்ந்து, ஆங்கிகத்தில் இறங்கிவிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை யென்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ரூபகம் அல்லது நாட்டியத்தோடு அபிநயம் இணைக்கப்பட்டு வளர்ந்து வந்ததாலும், அபிநயத்தின் தனிச் சிறப்பு, கண்டு கொள்ளத் தக்கதாகும். ஒவ்வொரு நிருத்தியக் [illegible]சரியிலும் அபிநயம் ஒரு முக்கிய [illegible]த்தைப் பெற்றுள்ளது.

[illegible]டைக் காலத்தில் கீதம், [illegible]ம், வாத்தியம் இவை [illegible] சேர்ந்து சங்கீதம் என [illegible]டு வந்தது; தற்காதன. கீதமும், நிருத்தியமும் எப்படி இணைந்திருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்த்தால், இணைந்திருக்கும் இவைகளுடன் அபிநயம் பிரகாசித்தது புலப்படும்.

தசரூபகம் எழுதிய தனஞ்சயர் நிருத்தியத்தைப் பதார்த்தபிநயம் என்று கூறுவதிலிருந்து நாம் நிருத்தியத்திற்கும் அபிநயத்திற்குமுள்ள இணைப்பை அறியலாம். சங்கீத ரத்னாகரம் எழுதிய சாரங்க தேவர் கை ஜாடைகளினால் உண்டாக்கப் பட்ட பாவாபிநயமே நிருத்திய மெனக் கூறுகிறார். சாதாரணமாக எல்லாப் பண்டைக் காலச் சங்கீத நூல்களிலும் நிருத்தியத்தைப் பற்றி விவரிக்கும்போது, அபிநயமும் சட்ட திட்டங்களோடு எழுதப் பட்டது என்று தெரிய வருகிறது.

பூர்வ கதைகளை யொட்டி ஆடப் படும் நாட்டியத்திற்கு இன்றியமையாதது நிருத்தியம். அதனால் அபிநயமும், நாட்டியத்திற்கு இன்றியமையாதது இதை நன்குணர்ந்த பரதர், நாடகத்திற்கு ஒரு கதை எழுதப் பட்டால், அதில் நிருத்தியம் இணைக் கப்பட்டிருக்க வேண்டும் என்று இலக்கணம் கூறுகிறார். நிருத்தியத் தோடுகூடிய நாடகத்திற்குத்தான் நாட்டியம் என்று பெயர் வழங்கலாயிற்று.

பாவமும், ரசமும்:—நிருத்தியத்தைப் பற்றி இதுவரை கூறப்பட்டவைகள் அதன் வெளிப்படையான அம்சங்களை ஓரளவு விளக்குவனவாகும். முன்பு 'ரஸம்' என்பது கலையின் உயிர் எனக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. பிராணிகளிடம் உயிராக இறைவன் இருப்பது போலக் கலையின் சுவையாக உள்ள ரசத்தைக் கலந்து களிப்பதே

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES

DRAWING FRAMES

FLY FRAMES

RING SPINNING FRAMES

REELING MACHINES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

ENQUIRIES SOLICITED

TEXTOOL COMPANY LIMITE

Post Box No. 221, COIMBATORE (South India)

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P. R. ஆறுமுக நாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.